விலை: ரூபா 20

பக்கங்கள் 28

பொது நூலகம்
கோண்டாவில்

# உதயன்

சுடர் 30 கதிர் 360 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 05, சனிக்கிழமை 21.11.2015

வாரத்தின் 4 நாட்கள்
கோடீஸ்வரர்களை உருவாக்கும்
இலங்கையின் ஒரே ஒரு அதிஷ்ட லாப சீட்டு
மஹஜன சம்பத
நீங்களும் இன்றே வாங்குங்கள்
www.nlb.lk
தேசிய லொத்தர் சபை
NLB அதிர்ஷ்டத்தின் ஒரே வயர்

## ஒரே பார்வையில் நல்லாட்சி பட்ஜெட்

கொழும்பு, நவ.21
2016 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அடங்கியுள்ள விலை குறைப்பு, அபிவிருத்தி, கல்வி, வரி அறவீடு ஆகியன குறித்த தகவல்கள் வருமாறு:-

### பொருள்கள் விலை குறைப்பு




- ★ குழந்தைகளுக்கான பால் மா 100 ரூபா குறைப்பு
- ★ 400 கிராம் உள்நாட்டுப் பால்மா பைக்கெற்றின் விலை 325 ரூபாவிலிருந்து 295 ரூபாவாக குறைப்பு
- ★ நெத்தலிக் கருவாடு 410 ரூபா
- ★ பருப்பு ஒரு கிலோ கிராம் 169 ரூபாவாகக் குறைப்பு
- ★ உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் வரி 25 ரூபாவால் குறைப்பு
- ★ கடலை ஒரு கிலோ 169 ரூபா
- ★ மண்ணெண்ணெய் 10 ரூபாவால் விலை குறைப்பு
- ★ 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் 150 ரூபாவால் குறைப்பு
- ★ அரிசி நிர்ணய விலை
- ★ 425 கிராம் ரின் மீன் 125 ரூபா வரை விலை குறைப்பு
- ★ உள்நாட்டு ரின் மீன் விலையில் மாற்றம். இறக்குமதி செய்யப்படும் ரின் மீன் மீது 50 ரூபா வரி
- ★ கட்டாக் கருவாடு ஒரு கிலோ கிராம் 1100 ரூபாவாக விலை நிர்ணயம்
- ★ சாலக் கருவாடு 425 ரூபாவாக விலை நிர்ணயம்
- ★ இலத்திரனியல் சாதனங்கள் உட்பட இறக்குமதி செய்யப்படும் 15 பொருள்கள் மீதான வரி குறைக்கப்படும்
- ★ நிலப்பதிப்பு மாபிள்கள் மற்றும் கொங்றீட் பொருள்கள் இறக்கு மதி வரி நீக்கம்
- ★ ஆடை ,காலணி மற்றும் மின்சார உபகரணங்கள் உள்ளிட்ட 15 பொருள்களுக்கு இறக்குமதி வரி நீக்கம்.

### அரச துறை , தனியாருக்கான அரசின் திட்டங்கள்




- ★ 2016 ஜனவரி முத லாம் திகதி முதல் அரச வேலைகளில் இணைவோருக்குப் புதிய ஓய்வூதியத் திட்டம்.
- ★ அனைத்து அரச, தனியார் துறை ஊழியர்களுக்கும் 5 நாள்கள் வேலை நாள்களாகக் கொள்ளப்படவேண்டும்.
- ★ தனியார்துறை ஊழியர்களுக்கு 2ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்புக்குப் பரிந்துரை
- ★ தனியார் துறையினருக்கு ஓய்வூதியத் திட்டம்
- ★ இளைஞர்களின் வேலைவாய்ப்பை அதிகரித்தல்
- ★ மீனவர்கள் ஒரு மில்லியன் ரூபா காப்பீட்டுத் திட்டம்
- ★ கட்டடத்துறைப் பயிற்சி பெறுபவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு
- ★ புதிதாக இணையும் ஆசிரியர்களுக்கு முதல் 5 வருடங்களுக்குள் 2 வருட கட்டாயப் பயிற்சி
- ★ அனைத்து ஊழியர்களுக்கும் வங்கிக் கணக்கு
- ★ ஆசிரியர்களுக்கு விடுதிச் செலவுக்கு 2 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.
- ★ கட்டடத்துறையில் பயிற்சி பெறும் ஊழியர்களுக்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

### அபிவிருத்தித் திட்டங்கள்




- ★ காரைநகர், வல்வெட்டித்துறை, சிலாபம் உள்ளிட்ட மீன்பிடித் துறைமுகங் களை அபிவிருத்தி செய்ய 750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- ★ வவுனியாவில் புதிய பொருளாதார

பக். 25

# நாட்டு மக்களை தளம்பல் நிலைக்கு தள்ளிய பட்ஜெட்


### பொது முதலீட்டை ஊக்குவிக்க வரிச்சுமை



கொழும்பு, நவம்பர் 21
பொது முதலீடுகளை அதிகரிப்பதற்காக மக்களின் மீது வரிச்சுமையை ஏற்றுகின்ற 2016ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை தேசிய அரசு நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்தது. சுகாதாரம், கல்வி, உட்கட்டமைப்பு, விவசாயம் ஆகிய துறைகளில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்கும் வகையில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரவு-செலவுத் திட்டம் அமைந்துள்ளது.

தேசிய அரசால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தை ஆளுந்தரப்பினர் வரவேற்றபோதும், எதிர்த்தரப்பினர் கடுமையாக எதிர்த்துள்ளனர். இது ஒரு வெற்று வரவு-செலவுத் திட்டம் என்றும், நாட்டு மக்களைத் தளம்பல் நிலைக்குத் தள்ளிய வரவு-செலவுத் திட்டம் என்றும் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்குவைத்து கிராமப்புற மக்களுக்கு சில

பக். 24




## திருமலை இரகசிய வதைமுகாம்; 3 கடற்படை அதிகாரிகள் கைது

யாழ்ப்பாணம், நவ. 21
ஐ.நா. செயற்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட திருகோணமலை இரகசிய வதை முகாம் தொடர்பில், கடற்படை அதிகாரிகள் மூன்று பேர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நா. செயற்குழுவினர், திருகோணமலையிலிருந்த கடற்படைத் தளத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த இரகசியவதைமுகாமுக்கு நேரில் சென்று பார்வையிட்டிருந்தனர். இந்த இரகசிய வதை முகாம் தொடர்பில் விசாரணைகளை நடத்தவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

ஐ.நா.குழு

பக். 25

## கிளைமோர்க் குண்டு வைத்ததாக கைதாகிய இளைஞன் நிரபராதி

### 7 வருடங்களின் பின்னர் விடுதலை

யாழ்ப்பாணம், நவ. 21
இராணுவத்தினருக்குக் கிளைமோர்க் குண்டுவைத்தும், துப்பாக்கியால் சுட்டும் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் 7 வருடங்களாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த வடமராட்சி இளைஞன் விசாரணையின் பின்னர் யாழ்.மேல்நீதிமன்றினால் நிரபராதி என விடுதலை செய்யப்பட்டார்.

வடமராட்சியில் 2008 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி எஸ்.நிசான் என்ற இளைஞன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். அவர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு 7 வருடங்களாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். பின்னர் அவருக்கு எதிராக மேற்குறித்த குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுச் சட்டமா அதிபர்

பக். 25

## 11 அத்தியாவசியப் பொருள்கள் நேற்று முதல் விலை குறைப்பு

### மண்ணெண்ணெய் விலை 10 ரூபாவால் இறங்கியது

கொழும்பு, நவ.21
தெரிவு செய்யப்பட்ட 11 அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைக்கப்படும் என நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான உரையின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதில் ஒரு கிலோ கிராம் உருளைக் கிழங்கு விசேட வரி 25 ரூபாவால் குறைக்கப்பட்டு ஒரு கிலோவை 75 - 85 ரூபா வரை நுகர்வோர் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்துக்கான விசேட வரியை 25 ரூபா வினால் குறைப்பதன் மூலம் நுகர்வோர்

பக். 25

## மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

### கேளிக்கைகளைத் தவிர்க்குமாறு பல்கலை. ஆசிரியர் சங்கம் கோரிக்கை



கோப்புப் படம்

யாழ்ப்பாணம், நவ. 21
தாயக விடுதலைக்காகக் களமாடி மடிந்த மாவீரர்களை நினைவுகூரும், மாவீரர் வாரம் இன்று சனிக்கிழமை தொடக்கம் 27 ஆம் திகதி வரை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்தப் புனிதமான வாரத்தில் மக்கள் அனைவரும் கேளிக்கைகளைத் தவிர்த்து புனித நற்பணிகளில் ஈடுபடுமாறும், 27 ஆம் திகதி எமது தேசிய உடைகளில் பணிகளை மேற்கொள்ளுமாறும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

பக். 25

## விடுவிக்கப்பட்ட கைதிகளின் பிணை நிபந்தனையில் தளர்வு

யாழ்ப்பாணம், நவ. 21
விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் பிணை நிபந்தனை தளர்த்தப் பட்டுள்ளதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகள் 39 பேர் இதுவரையில் இரண்டு கட்டமாக விடுவிக்கப் பட்டுள்ளனர்.

பக். 25

## அரசமைப்பு திருத்தத்துக்கு உப குழு

கொழும்பு, நவ.21
அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்குப் பிரதமரின் தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால

பக். 25

## மண் நிரப்பிய பைப் மூலம் இளைஞரை மோசமாக தாக்கிய மானிப்பாய் பொலிஸ்

### வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் தவராசா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 21
தாடி வளர்த்திருந்தமையினால் சந்தேகநபர் என்று கைது செய்த பொலிஸார், குறித்த நபரை மண் நிரப்பிய பைப்பினால் தாக்கிக் காயம் ஏற்படுத்தியுள்ளனர். இது மோசமான மனித உரிமை மீறலாகும்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மானிப்பாய் பொலிஸார் ஆறு பேரையும் பணி நீக்கம் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற

பக். 25



வர்சனா சம்பத
இத் திங்கட்கிழமைக்கான சுப்பர் பரிசு
ரூ. 12,824,238.00
தேசிய லொத்தர் சபை

## கல்லுண்டாயில் குப்பை கொட்டுவதை தடுக்க பொலிஸ் காவல் சாத்தியமற்றது

### மானிப்பாய் பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 21
கல்லுண்டாயில் சட்டவிரோதமாக குப்பை கொட்டுபவர்களை கண்காணிப்பதற்குப் பொலிஸ் காவலரண் அமைக்க முடியாது. வேண்டுமானால் மக்களுக்கு நீங்கள் விழிப்புணர்வூட்டுங்கள் என்று, மானிப்பாய் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம், அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே, மேற்படி விடயம் பேசப்பட்டது.

யாழ்.மாநகர சபையின் சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதியினால் கல்லுண்டாய் வெளியில் குப்பை கொட்டுவது தொடர்பான விடயம் முதலில் பிரஸ்தாபிக்கப்பட்டது. கல்லுண்டாய் வெளியில் அனுமதிக்கப்பட்ட பிரதேச சபைகள் தவிர, யாழ். நகரிலுள்ள உணவகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் குப்பைகளைக் கொட்டுகின்றன. இதனால் அந்தப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகள் உருவாகின்றன.

எனவே ஏனையோர் குப்பை கொட்டுவதைத் தடுக்கவேண்டும். இதனைக் கண்காணிப்பதற்கு மானிப்பாய் பொலிஸ் நிலையத்தின், பொலிஸ் காவலரண் ஒன்றைக் கல்லுண்டாயில் அமைக்குமாறு கோரியிருந்தோம். அதற்கு மானிப்பாய் பொலிஸ் நிலையத்தினர், வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கின்றனர் என்று குறிப்பிட்டார்.

இதன்போது பதில் வழங்கிய மானிப்பாய் பொலிஸ் அதிகாரி, கல்லுண்டாயில் குப்பை கொட்டுவது தொடர்பில் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு இடம்பெற்று வருகின்றது. கல்லுண்டாயில் யாழ்.மாநகர சபை, சுன்னாகம் பிரதேசபை என்பனவும் குப்பை கொட்டுகின்றன. அதில் பொலிஸ் காவலரண் அமைப்பது சாத்தியமற்றது என்று குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர், கல்லுண்டாயில் அனுமதிக்கப்படாதவர்கள் குப்பை கொட்டுவதாக எங்களுக்குத் தகவல் கிடைத்து நாங்கள் அங்கு செல்வதற்குள் அவர்கள் சென்று விடுகின்றார்கள். எனவே அங்கு காவலரண் அமைக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

மக்களை விழிப்புணர்வூட்டுங்கள் என்று மானிப்பாய் பொலிஸ் அதிகாரி இதற்குப் பதில் வழங்கினார். (த-5)

## துண்டுப் பிரசுரத்தில்

### மீட்டுத் தருமாறு மனோவிடம் கதறிய தாய்

கிளிநொச்சி, நவ. 21
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 100 நாள் வேலைத்திட்ட துண்டுப் பிரசுரத்தில் காணப்படும் புகைப்படங்களில் காணாமற்போன தனது மகள் உள்ளதாகவும், மகளை மீட்டுத்தாருங்கள் எனவும் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் தாய் ஒருவர் அமைச்சர் மணோ கணேசனிடம் கண்ணீருடன் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுனியா வடக்கு, நெடுங்கேணி பெரியமடு பிரதேசத்தைச் சேர்ந்த காசிப்பிள்ளை ஜெயலவதனி எனும் தாயே ஜனாதிபதியுடன் காணப்படுகின்ற தனது மகளை மீட்டுத்தாருமாறு நேற்றுமுன்தினமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது மகள் காசிப்பிள்ளை ஜெரோமி கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் 4 ஆம் திகதி இறுதிப் போர் இடம்பெற்ற இரட்டை வாய்க்கால் பகுதியில் இராணுவத்தால் பிடிக்கப்பட்டதாகவும், பின்னர் அவர் குறித்து எவ்வித தகவலும் இல்லை எனவும், ஆனால் இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபாலவின்



100 நாள் வேலைத்திட்டம் குறித்து வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் காணப்படுகின்ற புகைப்படம் ஒன்றில் தனது மகள் ஜனாதி

## போட்டி போட்டு வாகனம் ஓடி சாகடித்துவிட்டு தப்பமுடியாது

### அரச சாரதியைத் தண்டித்து யாழ்.மேல்நீதிமன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 21
போட்டிக்கு வாகனம் ஓடி விபத்துக்களை ஏற்படுத்திவிட்டு-சாகடித்துவிட்டுத் தவறுதலாக நடந்துவிட்டது எனக் கூறி நீதிமன்றில் நிவாரணம் பெறமுடியாது என்று யாழ்.மேல் நீதிமன்று தெரிவித்துள்ளது.

கவனவீனமாக - வேகமாகப் பஸ்ஸைச் செலுத்தி முதியவரை உயிரிழக்கச் செய்த சாரதிக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறையும் இரண்டரை லட்சம் ரூபா தண்டமும் விதித்து அளித்த தீர்ப்பில் யாழ்.மேல்நீதிமன்று இதனைத் தெரிவித்துள்ளது.

யாழ்.நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்குத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீர்வேலியில் 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் 23 ஆம் திகதி இந்த விபத்துச் சம்பவம் நடைபெற்றது. குறித்த சாரதி இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸை அதிவேகமாக - கவனவீனமாக ஓட்டிச் சென்று சின்னத்தம்பி மார்க்கண்டு (வயது 97) என்பவரை மோதித்தள்ளி அந்த முதியவரை உயிரிழக்கச் செய்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டில் கணபதிப்பிள்ளை ரகுநாதன் என்பவருக்கு எதிராகப் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்ஸைக் கவனமின்றி அதிவேகமாகச் செலுத்தியமை, போதிய அவதானமும் முன்பாதுகாப்பின்றியும் விழிப்பின்றியும் செலுத்தியமை, அதனால் ஒருவருக்கு விபத்து மரணம் ஏற்படுத்தியதாக அவருக்கு எதிராகக் குற்றப் பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணையின் போது, தன் மீதான குற்றத்தைச் சாரதி ஏற்றுக்கொண்டார். எதிரியின் சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி, அவருடைய அரச சேவைக்குப் பாதிப்பின்றித் தண்டனை வழங்குமாறு நீதிபதியிடம் விண்ணப்பித்தார்.

அதன் பின்னர் நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளதாவது:-

பஸ் சாரதிகள் போட்டிக்கு வாகனங்கள் ஓடுவதனாலேயே, அதிகமான விபத்து மரணங்கள் ஏற்படுகின்றன. காயங்கள் மூலம் பலர் அங்கவீனர்களாக்கப்படுகின்றார்கள். இந்த வழக்கில் அரச போக்குவரத்து பஸ்ஸும் தனியார் பஸ்ஸும் போட்டிக்கு ஓடியதன் காரணமாக, 97 வயது வயோதிபர் விபத்தில் உயிரிழந்துள்ளார். வயோதிபர்கள், சிறுவர்கள், மாணவ மாணவிகளைப் பாதுகாக்க இந்த சாரதிகள் தவறுகின்றார்கள்.

குறித்த எதிரி அரச போக்குவரத்து பஸ்ஸின் சாரதி. அரச போக்குவரத்து பஸ்ஸை ஓட்டியவர். அவருக்குக் கடமைப் பொறுப்பு மிக அதிகமாகும். அரசைக் காப்பாற்றவேண்டும். அரசானது தனது பஸ்ஸில் பயணம் செய்யும் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். அரசின் கௌரவத்தையும், தனது அரச கடமை பொறுப்பையும் பாதுகாக்கவேண்டும். ஆனால் இத்தகைய பொறுப்புமிக்க கடமைகளில் இருந்து இவர் தவறியுள்ளார்.

சட்டப்புத்தகங்களில் என்னதான் இருந்தாலும், போக்குவரத்து வண்டிகளின் வேகம் அதிகரிப்பு மக்கள் நடமாட்டங்களைப் பொறுத்து வேறுபடும். யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலத்தில் மக்கள் செறிவு அதிகரித்துள்ளது. எனவே 40 கிலோ மீற்றருக்குக் குறைவான வேகத்தில் ஓடியாவது, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது சாரதிகள் கடமையும் பொறுப்புமாகும். போட்டிக்கு ஓடி விபத்துக்களை ஏற்படுத்திவிட்டு, தவறுதலாக நடந்த விபத்து எனக் கூறி மன்றில் நிவாரணம் பெறமுடியாது என்று நீதிபதி தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இத்தகைய சம்பவங்களைச் சாதாரணமாகக் கொள்ள முடியாது என்று தெரிவித்த நீதிபதி, குறித்த சாரதிக்கு 2 வருடங்கள் கடுழியச் சிறைத் தண்டனை விதித்து 5 வருடங்கள் ஒத்தி வைத்தார். அதுமட்டுமன்றி இறந்தவருடைய 3 பிள்ளைகளுக்கும் சமமாகப் பங்கிடும் வகையில் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை நட்டஈடாக வழங்கவேண்டும் எனவும் தீர்ப்பளித்தார். (த-4)

## ஆயிரம் வீடுகளைத் திருத்த சிமெந்துப் பைக்கெற்றுகள்

வலி.வடக்கு, நவ 21
தேசிய வீடமைப்பு அமைச்சின் ஆதரவுடன் யாழ். மாவட்டத்திலுள்ள 1000 குடும்பங்களுக்கு வீடு திருத்துவதற்கான சிமெந்துப் பைக்கெற்றுகள் உதவியாக வழங்கப்படவுள்ளன.

ஒரு மாவட்டத்தில் 1000 குடும்பங்களுக்கு சிமெந்து மானியம் வழங்கும் நிகழ்வின் கீழ், நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு யாழ் மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கட்டடத்தில் பொது முகாமையாளர் தலைமையில் முதல் கட்டமாக யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவுசெய்யபட்ட 100 குடும்பங்களுக்கு இந்த சிமெந்து விநியோகம் இடம்பெறவுள்ளது.

பூச்சுப் பூசப்படாமல் இருக்கும் வீடுகளுக்கு தலா 10 பை சிமெந்து என்ற அடிப்படையில் இது வழங்கப்படவுள்ளது. தொடர்ந்து ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யபட்ட வீடுகளுக்கும் இவை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-86-115)

## இந்தியக் காவல்படையினரால் கைதான மீனவர்கள் விடுதலை

யாழ்ப்பாணம், நவ. 21
இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி கடலில் மீன்பிடித் தொழிலுக்குச் சென்ற இந்த மீனவர்கள் காலநிலை சீரின்மையால் இந்தியக் கடற்பகுதிக்குள் திசைமாறிச் சென்றவேளை இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பருத்தித்துறை இன்பர்சிட்டியைச் சேர்ந்த எஸ்.ரூபதாஸ், பருத்தித்துறை கொட்டடியைச் சோந்த எஸ். நிசாந்தன் ஆகிய இரு மீனவர்களையும் இந்தியக் கடலோரக் காவல் படையினர் கடந்த புதன்கிழமை இந்திய - இலங்கைக் கடற்பகுதியில் வைத்துக் காங்கேசன்துறை கடற்படையினரிடம் ஒப்படைத்தனர். பின்னர் இந்த இரண்டு மீனவர்களும் கடற்படையினரால் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ரமேஷ் கண்ணாவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

உதவிப் பணிப்பாளர், சம்பந்தப்பட்ட மீனவர்களின் பெற்றோரை அழைத்து அவர்களிடம் நேற்று முன்தினம் இந்த மீனவர்கள் இருவரையும் ஒப்படைத்தார். (த-17)

## ஆலயத்தில் குழப்பம் விளைவித்த இரண்டு பேருக்கு விளக்கமறியல்

கரணவாய், நவ 21
ஆலயத்தில் இடம்பெற்று வந்த பூசை வழிபாடுகளைச் செய்யவிடாது தடுத்து குழப்பம் விளைவித்த இருவரை நாளை மறுதினம் வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கரவெட்டி கிழக்கு ஞானவைரவர் ஆலயத்தில் இடம்பெற்று வந்த பூசை வழிபாடுகளைக் குழப்பியதோடு ஆலயத் திறப்பையும் பறித்துச் சென்ற சின்னத்தம்பி கோடீஸ்வரன், தவராசா சசிதரன் ஆகிய இருவரையும் நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து நேற்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராசாவிடம் முன்னிலைப்படுத்தினர்.

அவர்கள் இருவரையும் நாளை மறுதினம்வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் ஆலயத்தின் திறப்பை ஆலயப் பூசகரிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (த-108)

## விபத்தின் மூலம் கொலை; ஒருவருக்கு கடூழியச் சிறை


கரணவாய் நவ 21
விபத்தின் மூலம் ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபருக்கு 5 வருடங்களுக்கு ஒத்தி வைத்த ஒரு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்த பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் ஒரு லட்சம் ரூபாவை பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு வழங்குமாறும் உத்தரவிட்டது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் நெல்லியடி பொதுச் சந்தைக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தொன்றில் சிக்கிப் பொன்னம்பலம் தம்பிராசா என்பவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் சிவநாதன் நிதர்சன் என்பவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று நீதிவான் மா.கணேசராசா முன்னிலையில் இடம்பெற்றது.

குறித்த நபரை குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் அவருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைத்த ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்ததுடன் தண்டப் பணமாக 6 ஆயிரம் ரூபாவையும் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நட்டஈடாக ஒரு லட்சம் ரூபாவையும் வழங்குமாறு உத்தரவிட்டது. (த-108)

# எனது மகள்



பதியுடன் காணப்படுவதாகவும் அந்தத் தாய் அமைச்சரிடம் கூறினார்.

இதேவேளை, கடந்த செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி ஜனாதிபதியின் பிறந்தநாளின்போது நேத்ரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிய நிகழ்ச்சி ஒன்றிலும் தனது மகள் ஜெரோமி காணப்பட்டதாகவும் தெரிவித்த குறித்த தாய், தனது மகள் உயிருடன்தான் இருக்கின்றார். அவரை மீட்டுத்தாருங்கள் எனக் கண்ணீருடன் அமைச்சர் மனோ கணேசனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தோடு தான் பல தடவைகள் எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் உள்ளிட்ட பல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் குறித்த ஆதாரங்களைக் காட்டிக் கதைத்ததாகவும், ஆனால் இதுவரை எந்தப் பயனும் இல்லை என்றும் அவர் மேலும் கூறினார். அண்மையில் வவுனியாவில் நடைபெற்ற காணாமற்போனோர் தொடர்பான ஆர்ப்பாட்டத்தின்போதும் மகளுடைய புகைப்படத்துடன் இவ்வாறே அந்தத் தாய் அழுது கண்ணீர் வடித்தமை குறிப்பிடத்தக்கது. (து-21-ரி3)

# யாழுக்கு மறுக்கப்பட்ட இரணைமடுக் குள நீர் இப்போது கடலுக்கு

## வடக்கு மாகாண சபையில் ஒரு முழு நாள் விவாதம் வேண்டும் என்கிறார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், நவ. 21

இரணைமடு நீரை யாழ்ப்பாணத்துக்குத் தரமாட்டோம் என்றவர்கள் இன்று அந்த நீரைக் கடலுக்குத் திறந்து விட்டிருக்கின்றனர் என்று குற்றம் சுமத்திய வடக்கு மாகாண சபை ஆளுங்கட்சி உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாணத்தின் நீர்ப் பிரச்சினை தொடர்பில் ஒரு முழுநாள் விவாதம் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கடந்த அமர்வின் போது, சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையைச் சபைக்கு வழங்குவதாகக் குறிப்பிட்டிருந்தார். அது ஏன் இன்னும் வழங்கப்படவில்லை என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சபைக்கு அறிக்கையைத் தருவதாகச் சொல்லவில்லை. நிபுணர் குழுவினர் அறிக்கையைத் தயாரித்து முடித்து விட்டார்கள். முதலமைச்சரிடம் திகதி எடுத்து, உறுப்பினர்களிடம் திகதி எடுத்து நேரடியாக நிபுணர் குழுவினர் முதலமைச்சரிடம் கையளிப்பார்கள் என்று பதிலளித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், எங்களிடம் மக்கள், தண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்று கேள்வி கேட்கின்றார்கள். வடக்கு மாகாணத்தின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் முழுமையான ஒரு விவாதம் நடத்தப்பட வேண்டும். இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நீரைத் தரமாட்டோம் என்றவர்கள் இன்று அந்த நீரைக் கடலுக்கு விட்டுக்கொண்டிருக்கின்றனர் என்றார். (து-5)

## கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு தமிழ்த் தகவல் தொடர்பாடல் அலுவலர்

### விரைவில் நியமிக்க அமைச்சர் மனோ நடவடிக்கை

கிளிநொச்சி, நவ. 21

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு தமிழ் தெரிந்த தகவல் தொடர்பாடல் அலுவலர் மிக விரைவில் நியமிக்கப்படுவார் என தேசிய கலந்துரையாடல் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்டத்துக்குப் பயணம் மேற்கொண்ட தேசிய கலந்துரையாடல் அமைச்சர் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்குச் சென்றவேளை அங்கு நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் தற்போது கடமையில் உள்ள தகவல் தொடர்பாடல் அலுவலர் தமிழ் தெரியாதவர். ஆனால் இங்கு உள்ள தகவல்களை வழங்கும் ஊடகவியலாளர்கள் தமிழ் பேசுபவர்கள். எனவே இந்தத் தகவல் வழங்குநரால் சரியான தகவல்களை ஊடகவியலாளர்களிடம் பரிமாற முடியாது.



இது தொடர்பாக ஏற்கனவே ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணா திலகவுடன் கலந்துரையாடியுள்ளேன். இன்னும் இரு வாரங்களில் கிளிநொச்சி மாவட்டத்துக்குத் தமிழில் தகவல்களை பரிமாறும் தகவல் தொடர்பாடல் அலுவலரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அமைச்சர் மனோ. (து-ரி3)

## மேய்ச்சல் தரவைகளில் புல் வெட்டும் ராணுவம்

### கால்நடைகள் உணவின்றிப் பாதிப்பு

மாங்குளம், நவ.21

வடமராட்சிப் பகுதியில் காணப்படும் மேய்ச்சல் தரவைகளில் இருக்கும் புற்களை இராணுவத்தினர் வெட்டித் தமது அழகுபடுத்தும் செயற்பாடுகளுக்காக எடுத்துச் செல்வதால் தமது கால்நடைகள் பாதிக்கப்படுவதாகக் கால்நடை வளர்ப்போர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தினர்தாம் இருக்கும் இடங்களை அழகுபடுத்துவதற்காகப் புற்றரைகளை வெட்டி உழவு இயந்திரங்களில் ஏற்றிக்கொண்டு சென்று விடுகின்றனர். இதனால் மழை காலங்களில் அப்படிப்பட்ட இடங்களில் நீர் தேங்கிநிற்கிறது. இதனால் மேய்ச்சல் தரவைகள் புற்கள் இன்றிக் காணப்படுவதாகக் கால்நடை வளர்ப்போர் தெரிவித்துள்ளனர். தற்போதுபெய்துள்ள அடை மழையினாலும், உவர்நீரை நன்னீர் ஆக்கும் திட்டத்தில் தொண்டமானாறு பாலத்தினூடாக நீர் கடலுடன் கலக்கப்படுவதைத் தடுத்தமையாலும், வல்லைப் பகுதியில் இம்முறை பல இடங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதாலும் மேய்ச்சல் தரவைகள் இன்றிக் கால்நடைகளின் உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அதனை வளர்ப்போர் குற்றம் சாட்டியுள்ளனர். எனவே அரச, பொதுக் காணிகளில் இராணுவத்தினர் புற்களை வெட்டுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## மீனவர் தினத்தை முன்னிட்டு போட்டிகளை நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.21

சர்வதேச மீனவர் தினத்தை முன்னிட்டு கிராமிய மீனவர் அமைப்புக்களில் அங்கம் வகிக்கும் மீனவர்களின் பிள்ளைகளுக்கான கட்டுரை, சித்திரப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் அந்தந்தக் கடற்றொழில் பரிசோதகர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என்று மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ரமேஸ் கண்ணா தெரிவித்தார்.

உலக மீனவர் வாரம் இன்று 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடைபெறும்.

மீனவர் வாரத்தில் கிராமிய மட்டத்தில் பொதுவேலைத்திட்டங்களும், சிரமதானப் பணிகளும் இடம்பெறும். (து-17)

BSC Colombo
A Division of the London School of Commerce Group of Colleges

LSC London

Study on a Programme Leading to a British Degree



MBA
MASTER OF BUSINESS ADMINISTRATION
Duration: 18 months (Part-Time)

Students have an option of studying modules in London at no extra cost**

Why Choose BSC?
- Study for a globally recognized British qualification. LSC courses are moderated by the University, leading to a degree awarded by Anglia Ruskin University.
- Renowned international academics.
- Affordable fees with instalment payment options.
- Access to over 70,000 online study materials.
- State-of-the-art WiFi enabled campus.
- Join the London School of Commerce (LSC) Group of Colleges and be part of a global community of more than 10,000 students and alumni from over 130 countries.

Course Fee
LKR 490,000 approx.*
*UK fee of £1,350 plus local fee of Rs.210,000

*The UK fee component may be subject to foreign exchange fluctuations.
**Subject to Terms and Conditions. UK Visa Conditions Apply.

NEXT INTAKE : December 2015
Nithershan: 0777 310 672

LSC London
British School of Commerce
19, Mcleod Road, Colombo 4, Sri Lanka.
Tel: +94 11 2595995/6 Fax: +94 11 2595919
www.bsccolombo.edu.lk www.lsclondon.co.uk

## முன்னாயத்தம் எதுவுமின்றி வடக்கில் இன்று பாடசாலை

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 21

அதிபர் தரப் பரீட்சை இன்று சனிக்கிழமை இடம்பெறும் நிலையில், அது பற்றிய முன்னாயத்தம் எதுவுமின்றி அதிகாரிகளால் வடக்கு மாகாணத்தில் இன்று பாடசாலை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ் சுமத்தியுள்ளது.

அது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மழைவெள்ளப் பெருக்குக் காரணமாகக் கடந்த திங்கட்கிழமை பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து பல பாடசாலைகளில் தங்கியிருந்தன. அதனாலும் அதனால் மாணவர்கள் இடம்பெயர்ந்திருந்தமையாலும் அன்றையதினம் வடக்கில் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டதோடு அன்றைய பாடசாலை அறிவிக்கப்பட்டது.

ஆனால் அதிபர் சேவைத் தரம் 111 இற்கான பரீட்சை இன்று நடைபெறுகின்றது. அதனால் பரீட்சை நடக்கும் பாடசாலைகளில் இன்று கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிக்கல்கள் உள்ளன. அத்துடன் 3 ஆம் தவணைக்கான பரீட்சையும் நடைபெற்று வருகின்றது. இதனால் இன்று பாடசாலை நடைபெறுவதை நிறுத்தி வேறொரு நாளில் வைத்திருக்கவேண்டும். அதுபற்றி அதிகாரிகள் முன்னாயத்தம் செய்திருக்கவில்லை.

இதற்குக் காரணமானவர்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அதிகாரிகளின் இத்தகைய செயற்பாடு தொடர்பில் மத்திய கல்வி அமைச்சுக்கும் மாகாணக் கல்வி அமைச்சுக்கும் முறைப்பாடு செய்யப்பட்

# தடைப்பட்டிருந்த மணல் விநியோகம் இன்று மீள ஆரம்பம்

## பாரவூர்திச் சங்கம் ஊடாக மேற்கொள்ளப்படும்

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். குடாநாட்டில் இதுவரை காலமும் தடைப்பட்டிருந்த மணல் விநியோகம் பாரவூர்திச் சங்கம் ஊடாக இன்று சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மருதங்கேணிப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் மணல் விநியோகம் ஊடாக ஒரு நிறுவனம் அதிக இலாபம் ஈட்டுவதாகவும், பாரவூர்தி உரிமையாளர்களிடம் அறவிடப்பட்ட பணம் மீண்டும் செலுத்தப்படவில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அத்துடன் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களை விடவும் பரவலாக மணல் அகழப்படுவதாகவும், அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிக மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் பிரதேச மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த விடயத்தால் கடந்த ஆறு மாத காலமாக மணல் விநியோகம் தடைப்பட்டது.

மணல் அகழ்வு தொடர்பாகப் பலரும் மருதங்கேணி பிரதேச செயலகத்தில் கொடுத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மணல் விநியோகத்தை முறையான அனுமதியுடன் இன்று சனிக்கிழமை முதல் கோண்டாவிலில் உள்ள பாரவூர்திச் சங்கத்தின் ஊடாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆகவே இதுவரை காலமும் மணல் வேண்டி விண்ணப்பித்தவர்கள். உடனடியாகப் பாரவூர்திச் சங்கத்தில் அதற்கான பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்-என்றார் .

(த-ரி5-101)

# குடிதண்ணீர் விநியோகம் யாழ். நகருக்குள் சீரானது

யாழ்ப்பாணம், நவ.21

யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் குருநகர் பிரதேசம் போன்றவற்றுக்கு குழாய் மூலமாகக் குடிதண்ணீர் விநியோகிக்கும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகராட்சி மன்றத்தின் குடிதண்ணீர் விநியோகிக்கும் பிரதான நீர் இறைக்கும் பம்பி பழுதடைந்ததால் மாநகரப் பகுதி மக்களுக்கான குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டது.

இதனை அடுத்து பவுசர் மூலம் குடிதண்ணீர் விநியோகம் சீராக மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பொம்மைவெளி, சூரியவெளி, பண்ணை போன்ற பகுதிகளில் குடிதண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு அதன் ஊடாகக் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கும், குருநகர் பிரதேச மக்களுக்கும் சிறிய மோட்டார் பம்பியின் உதவியுடன் நிலத்தடிக் குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

பழுதடைந்த பிரதான மோட்டார்ப் பம்பியைத் திருத்தியமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(த-17)

# மாட்டைப் பிடித்தவர் மாட்டிக் கொண்டார்

முள்ளியவளை, நவ. 21

முள்ளியவளை பொலிஸ் நிலையத்துக்குப் பொய்யான முறைப்பாடு ஒன்றைச் செய்யச் சென்ற நபர் வசமாக மாட்டிக் கொண்டார். மேற்படி நபர் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

முள்ளியவளையைச் சேர்ந்த ஒருவர் தனக்குச் சொந்தமான பசு மாடொன்றை இன்னொருவர் பிடித்து வைத்திருக்கிறார் என முறைப்பாடு செய்வதற்காகப் பொலிஸ்நிலையம் சென்றுள்ளார்.

இவர் கமக்கார அமைப்பு வழங்கிய கடிதம் ஒன்றைக் கொண்டு வந்திருந்தார். இவர் ஏற்கனவே தன்னிடம் மாடுகள் உள்ளன எனக் கூறிக் கமக்கார அமைப்பு மற்றும் கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோரிடம் கையொப்பம் பெற்றுள்ளார்.

அந்தக் கடிதத்தில் 7 மாடுகள் தன்னிடம் உள்ளதாகவும் அவற்றின் நிறம் குறி என்பனவற்றையும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் எட்டாவதாகத் தானே இலக்கத்தை எழுதி அந்த மாட்டின் நிறத்தையும் குறியில் 'ஜே' என்ற ஆங்கில எழுத்தையும் மாறி எழுதியுள்ளார்.

இதன் பின்னர் இந்த மாட்டை இன்னொருவர் பிடித்து வைத்துள்ளதாகக் கூறி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றுள்ளார்.



கடிதத்தைப் பார்வையிட்ட பொலிஸார், அதில் 8ஆவதாக குறிப்பிடப்பட்டுள்ள, மாடு குறித்த விவரங்கள் சந்தேகத்துக்கிடமான முறையில் இருந்ததை அவதானித்து அவரிடம் விசாரணை மேற்கொண்டனர். இதன்போது அதை தான் எழுதியதை அவர் ஒப்புக்கொண்டார். இதனையடுத்து இவரைக்கைது செய்த பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(த-433)

# பதில் பாடசாலை இன்று பரீட்சைகள் நடைபெறா

மாங்குளம், நவ. 21

கடந்த 16ஆம் திகதி பெய்த கடும் மழை, சீரற்ற காலநிலை காரணமாக அன்றைய தினம் வடக்கில் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன. அதற்கான பதில் பாடசாலைகள் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளதுடன் தவணை 3ற்கான பரீட்சைகள் இன்று நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அதிபர் சேவை தரம் IIIற்கான ஆட்சேர்ப்பு சேவைக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் இடம்பெறும் பாடசாலைகள் மட்டும் இன்று நடைபெறமாட்டாது என வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த தரம் 9,10 மாணவர்களுக்கான தவணைப் பரீட்சையும், தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினால் தரம் 12,தரம் 13 மாணவர்களுக்கான பரீட்சையும், வலய ரீதியாக நடத்தப்படுகின்ற தரம்6, தரம்7, தரம்8 மாணவர்களுக்கான தவணைப் பரீட்சையும் ஒத்திவைக்கப்பட்டு எதிர்வரும் 3ஆம் திகதி இடம்பெறும் என அவர் மேலும் அறிவித்துள்ளார்.

(த-422)



வவுனியா மாவட்டத்தில் கடந்த 4ஆண்டுகளாக சேவையாற்றி மாற்றலாகிச் செல்லும் அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரவுக்கு பிரியா விடை நிகழ்வு நேற்று முன்தினம் மாலை வவுனியா மாவட்ட பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் கா. உதயராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராமசேவையாளர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், கணக்காளர், திட்டமிடல் உத்தியோகத்தர், நிர்வாக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (து)

# வவுனியாவில் மாவீரர் தின சுவரொட்டிகள்

வவுனியா, நவ 21

வவுனியா மத்திய பஸ் தரிப்பிடத்தில் நேற்றுக் காலை திடீரென மாவீரர் தின சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

மக்கள் கூட்டம் அதிகமாகக் காணப்படும் பஸ் நிலையத்தில் பொது மலசலகூடத்துக்குச் செல்லும் பிரதான வாயிலில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (து)

# வெள்ளம் பாதித்தோருக்கு உலர் உணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம், நவ.21

யாழ். பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்றது.

இதில் மாவட்டக் கூட்டுறவு அலுவலர் திருமதி க.நல்லதம்பி, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.சசீந்திரன், சங்கத்தின் தலைவர் செ.நடராசா ஆகியோர் பாதிக்கப்பட்டவர்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.



அங்கத்தவர், பணியாளர் சமூக, கல்வி மேம்பாட்டு நிதியிலிருந்து பனை,தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் 54 அங்கத்தவர்களுக்கும், 7 உத்தியோகத்தர்களுக்கும் 2ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் இவ்வாறு வழங்கப்பட்டன.

குறித்த பொதியில் 10 கிலோ கிராம் மா, 10 கிலோ கிராம் அரிசி, 1 அங்கர், 2 கிலோகிராம்சீனி, 2கிலோகிராம் பருப்பு, 200 கிராம் தேயிலை, 1 சோயாமீற் பைக்கெற் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-10-20)

# தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பம்

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையால் யாழ்.மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பை மையமாகக் கொண்ட முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சிக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையினர் தெரிவித்தனர்.

இந்தக் கற்கை நெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், சண்டிலிப்பாய், சுன்னாகம், பருத்தித்துறை, கந்தரோடை, கோப்பாய், தீவகம் ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெற்று வருகின்றன.

இந்தக் கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழுக்கான பயிற்சிகள் எனவும், கற்க விரும்புவோர் எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம், முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல 12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அலுவலக நேரத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரசபையின் கணக்காளர் த.சுரேஸ்குமார் அறிவித்துள்ளார்.

(த-ரி6)

# ஆட்சிப்பீடமேற்றியவர்களை திருப்திப்படுத்தவே விடுதலை

## அரசியல் கைதிகள் விடுவிப்பு குறித்து மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, நவ.21

கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின்போது அளித்த வாக்குறுதிகளுக்கு அமைய தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகையில் நேற்றுமுன்தினம் வழிபாடுகளில் ஈடுபட்டு திரும்பிய போது செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்தபோது மகிந்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த அரசு ஆட்சி பீடம் ஏற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய தரப்பினரைத் திருப்திபடுத்த



புலிச் சந்தேக நபர்களை விடுதலை செய்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படமாட்டாது. ஒரு சில திருத் தங்களைச் செய்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடர்ந்தும் நடை முறையில் இருக்கும்.

அவன்கார்ட் நிறுவனம் இந்த நாட்டுக்கு பெரியளவில் சேவையாற்றியுள்ளது. ஏதேனும் பிழைகள் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தால் அவற்றைத் திருத்திக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். மாறாக நிறுவனங்களை மூடி விடுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. நிறுவனத்தை மூடுவதால் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் தொழில்களை இழக்க நேரிடும். ராஜபக்ச குடும்பத்தில் எவரும் ஊழல் மோசடிகளுடன் தொடர்புபடவில்லை. நேரடியாகவோ மறைமுகமாகவோ நாம் ஊழல் மோசடிகளில் ஈடுபடவில்லை. விசாரணை நடத்துவார்கள், விசாரணை நிறைவில் எதுவும் இருக்காது- என்றார். (ற)

# நல்லாட்சி அரசின் முடிவு ஆரம்பம்

க.டி.லால்காந்த கூறுகின்றார்



கொழும்பு, நவ.21

நல்லாட்சி அரசின் முடிவு இன்றுடன் ஆரம்பமாகின்றது என்று ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை துறைமுகப் பொது ஊழியர் சங்க சம்மேளனக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவித்துள்ளதாவது:-

மைத்திரி ரணில் கூட்டு அரசின் பொற்காலம் நேற்றுடன் நிறைவடைந்துவிட்டது. இன்று சமர்ப்பிக்கப்பட உள்ள வரவு செலவுத் திட்டத்துடன் நல்லாட்சி அரசின் முடிவு ஆரம்பமாகும்.

மக்களின் ஆணையை இந்த அரசுசரியாகப்புரிந்துகொள்ளவில்லை. வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்கள், விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு நலன்கள் வழங்கப்படாவிட்டால் இந்த அரசின் ஆயுட் காலம் மிகவும் வரையறுக்கப்பட்டதாக அமைந்துவிடும்.

மகிந்த ராஜபக்ச அரசு அமைத்து ஆட்சி நடத்தினாலும் மைத்திரிபாலவால் நாட்டை ஆட்சி செய்து அதனை முன்னோக்கி நகர்த்த முடியவில்லை.

பல தடவைகள் ரணில் பிரதமராக பதவி வகித்த போதிலும் ஒரு தடவையேனும் பதவிக் காலத்தை [illegible]த்தி செய்ய முடியவில்லை. என்றார். (ற)

# சீருடைக்குப் பதில் வவுச்சர் வழங்கினால் தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயம்

## அஸாத் சாலி கூறுகின்றார்

கொழும்பு, நவ.21

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் சீருடைக்குப் பதிலாக கல்வி அமைச்சு பண வவுச்சர் வழங்கினால் நாட்டில் உள்ள 6 புடைவைத் தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயம் ஏற்படும் என்று சாடியுள்ளார் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அஸாத் சாலி.

நல்லாட்சியில் உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்கவேண்டுமே தவிர அதனை அழித்து விடக் கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப் படுத்தும் இயக்கம் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2004 ஆம் ஆண்டுவரை பாடசாலைச் சீருடையில் பெரும் பிரச்சினை இருந்தது. அதன் பிறகு அமைச்சர்கள் சீருடையில் மோசடி செய்ய ஆரம்பித்தனர். இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் இதுவரை முடிக்கவில்லை. இந்தநிலையில் கல்வி அமைச்சு பண வவுச்சர் வழங்க எடுத்துள்ள தீர்மானம் வேறு பிரச்சினைகளை உருவாக்கும்.

பாடசாலைச் சீருடை தொடர்பாக பிரதமரின் தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட உப குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஒரு மீற்றர் 135 ரூபா வீதம் உள்நாட்டில் உள்ள 6 புடைவைத் தொழிற்சாலைகளில் இருந்து பெற்றுக் கொள்வது என்று அந்தக் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தையும் மீறி கல்வி அமைச்சர் சீருடைக்குபதிலாகபணவவுச்ச்ர் கொடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.

இவ்வாறு பண வவுச்சர் வழங்குவதால் சில பெற்றோர்கள் அதை துஷ்பிரயோகம் செய்வதற்கும் வாய்ப்பு இருக்கின்றது. அத்துடன் பாடசாலை அதிபர்களுக்கும் வீண் பிரச்சினைகள் ஏற்படும். மாறாக உள்நாட்டுப் புடைவைத் தொழிற்சாலைகளில் இருந்து ஒரே நிறம் மற்றும் ஒரே வகையில் வாங்கி சகல பிள்ளைகளுக்கும் கொடுத்தால் அனைவரும் ஒரே மாதிரி அணிந்து வருவார்கள்.

பாடசாலைச்சீருடைக்குப்பதிலாகபண வவுச்சர் வழங்கப் போவதில்லை. உள்நாட்டுக் கைத்தொழிற்சாலைகளில் இருந்தே சீருடை பெற்றுக் கொள்ளப்படும் என நிதி அமைச்ச்ர் எங்களிடம் உறுதியளித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் சீருடைக்கு பதிலாக கல்வி அமைச்சு பண வவுச்சர் வழங்கினால் உள்நாட்டில் உள்ள 6 புடைவைத் தொழிற்சாலைகள் மூடப்படுவதுடன் அங்கு தொழில் புரியும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு தொழில் வாய்ப்பு இல்லாமற் போகும் அபாயம் ஏற்படும். அத்துடன் நல்லாட்சியில் உள்நாட்டு தொழிற்சாலைகள் மூடப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. - என்றார். (ற)

# சாட்சிகள் இன்மையால் சரத்குமார விடுதலை

கொழும்பு, நவ.21

கடந்த பொதுத்தேர்தலின் போது நீர்கொழும்பு நகரில் வைத்து பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு அச்சுறுத்தல் விடுத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுச் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த முன்னாள் அமைச்சர் சரத்குமார குணரத்ன நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

5 லட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும் இரண்டு சரீரப் பிணையிலும் நீர்கொழும்பு பிரதான நீதிவான் பூர்ணிமா பரணகமகே விடுவித்தார்.

பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கமைய நீதிபதியிடம் கொண்டு செல்லப்பட்ட இவ்வழக்கு விசாரணையானது போதுமான சாட்சிகள் இன்மையால் தள்ளுபடி செய்யப்பட்டது. (ற)

# ஆணைக்குழுக்கள் முழு அளவில் சுயாதீனமாக இயங்க வேண்டும்

கரு ஜெயசூரிய வலியுறுத்து

கொழும்பு, நவ.21

சுயாதீன ஆணைக்குழுக்கள் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை வீணடிக்கப்படாத வகையில் ஆணைக்குழுக்கள் முழு அளவில் சுயாதீனத் தன்மையுடன் இயங்க வேண்டுமென அரசியல் அமைப் [illegible] சபை வலியுறுத்தியுள்ளது.

ச[illegible]நாயகரும் அரசியல் அமைப்புச் சபையின் தலைவருமான கரு ஜயசூரியவின் தலைமையில் நேற்று அரசமைப்புச் சபை கூடியது.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணயசபை ஆணைக்குழு உள்ளிட்ட சில ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் அரசமைப்புச்சபையுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

இதன்போது, அனைத்து ஆணைக்குழுக்களும் பூரண சுயாதீனத் தன்மையுடன் இயங்க வேண்டுமென அரசமைப்புச் சபை யின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். (ற)

# மட்டக்களப்பின் கல்வி நிலையை மேம்படுத்த நடவடிக்கை தேவை

## அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ.21

கல்வி நிலையில் பின்தள்ளப்பட்டுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வி நிலையை மேம்படுத்த அரச மட்டுமின்றி, தன்னார்வ சமூக நிறுவனங்களும் முன்வர வேண்டும் எனப் புனர்வாழ்வு மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -


இலங்கையிலுள்ள 90 கல்வி வலயங்களில் கல்வி வலயத் தரப்படுத்தலில் மட்டக்களப்பு மத்திய கல்வி வலயம் 89 ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலே 50, 60 பாடசாலைகளுக்கு ஒரு கல்வி வலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், மற்ற மாவட்டங்களில் 200 பாடசாலைகளுக்கு ஒரு கல்வி வலயம் என்றவாறு அமைக்கப்பட்டிருக்கின்றது. அப்படியிருந்தும் மட்டக்களப்பு மாவட்டம் இந்தளவு கல்வியில் பின்தங்கியிருப்பது கவலையளிக்கிறது.

இந்த நிலைமையைச் சீர் செய்ய அரச நிறுவனங்கள் மாத்திரம் முனைப்புக் காட்டினால் போதாது. ஏனைய தன்னார்வ சமூக அமைப்புக்களும் முன்வரவேண்டும். கல்விக்காக அதிக நேரத்தையும் பணத்தையும் செலவழிக்க வேண்டும்.

கடந்த வாரம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்களுடனான சந்திப்பொன்றில் திடுக்கிடும் தகவல் ஒன்றை ஒரு வலயக் கல்விப் பணிப்பாளர் வெளியிட்டார்.

இம்முறை டிசெம்பரில் நடைபெறவுள்ள ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் ஒரு பாடசாலையில் உள்ள 16 மாணவிகளில் 6 பேர் பரீட்சை எழுத இன்னமும் ஒரு மாதமுள்ள நிலையில் திருமணம் செய்துள்ளனர். இன்னும் பரீட்சைக்கு நாள் நெருங்க நெருங்க மேலும் மீதமுள்ளவர்களில் சில மாணவிகள் திருமணம் செய்து விடுவார்கள். கடைசியில் ஜி.சி.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்கு 4, 5 பேர் மட்டுமே மீதப்படுவர் என ஒரு வலயக் கல்விப் பணிப்பாளர் ஒரு கூட்டமொன்றில் கூறினார். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். - என்றார். (ற)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிர்காலப் பணிகள் சிறப்பாக நடக்க முன் னேற்பாடு செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், உபரி வருமானம் கிடைக்கும். புத்திரர்கள் விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள்.

**இடபம்:** செயலில் முன்யோசனை இருக்கும். தொழில், வியாபாரத்தில் பணவரவு மிதமாக இருக் கும். உறவினர் வகையில் கூடுதல் செலவு ஏற்படலாம். பெண்கள் நகை இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**மிதுனம்:** முக்கியமான செயலை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். புதியவரின் ஆலோசனை, உங்களை நல்வழி நடத்தும். தொழில், வியாபாரத்தில் பணவரவு திருப்திகரமாகும்.

**கடகம்:** முக்கிய பணியை, பிறர் பொறுப்பில் தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான பணவரவு இருக்கும். வாகன பராமரிப்புச் செலவு அதி கரிக்கும்.

**சிங்கம்:** பகைவர் உருவாக்கிய சிரமம், சுவடு தெரியாமல் விலகும். உங்களின் அணுகுமுறை இதம்பதமாக அமையும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். குடும்பத்தில், சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** உங்கள் செயல்திறனை மற்றவர்கள் அறிந்து கொள்வர். தொழில், வியாபாரம் செழிக்க, கூடுதல் மூலதனம் செய்வீர்கள். குடும்பத்தினரின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

**துலாம்:** உங்கள் செயற்பாடுகளில் சிறு தொய்வு ஏற்படலாம். தொழில், வியாபார வளர்ச்சிக்குப் புதிய திட்டம் தீட்டுவீர்கள். எல்லா வகைகளிலும் செலவு அதிகரிக்கும். பெண்கள் வெளியே செல்லும் போது கவனம் தேவை.

**விருச்சிகம்:** நிதானித்துச் செயற்படுவதால், பணியில் குளறுபடி வராமல் தவிர்க்கலாம். தொழி[illegible] வியாபாரம் சுமாரான அளவில் இருக்கும். பணவர[illegible] விட செலவு அதிகரிக்கும்.

**தனுசு:** பிறர்நலன் குறித்து அக்கறை கொள்வீர்கள். சமூகத்தில் நற்பெயர் கிடைக்கும். தொழில், வியா பாரத்தில் பணவரவும், பிற நன்மைகளும் அதிகரிக்கும். வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவீர்கள்.

**மகரம்:** தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் கடும் போட்டியால் சுமாரான பணவரவு கிடைக்கும். உடல்நிலையில் கவனம் வேண் டும். பெண்களுக்குப் புத்தாடை வாங்க வாய்ப்புண்டு.

**கும்பம்:** உங்கள் வாழ்வு வளம் பெற உதவும் ஒருவரைச் சந்திப்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி இலக்குத் திட்டமிட்டபடி நிறைவேறும். ஆதாய பணவரவு கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள்.

**மீனம்:** கவனக் குறைவான செயலால், சில சௌகரி யங்களை இழக்க நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்க[illegible] உங்களுக்கு உதவ முன் வருவர். வீட்டிலும், வெளியிலு[illegible] பொருள்களைக் கவனமாக பார்த்துக் கொள்ளவும்.

# துருவநட்சத்திரத்தில் ரவி



கவுதம் மேனன் இயக்கத்தில் சூர்யா நடித்த 'காக்க காக்க' 'வாரணம் ஆயிரம்' படங்களைத் தொடர்ந்து சூர்யா, நடிக்க இருந்த படம் 'துருவ நட்சத்திரம்.' இந்தப்படத்தின் பூஜைக்குப் பிறகு படப்பிடிப்பு நடைபெறவில்லை. இதில் இருந்து சூர்யா விலகி விட்டதாகக் கூறப் பட்டது. இதையடுத்து அந்தப் படம் அப்படியே நிறுத்தப்பட்டது. தனி ஒருவன்' படத்துக்கு பிறகு ஜெயம்ரவிக்குப் பட வாய்ப்புகள் அதிகமாகி வருகின்றன. அவரை வைத்துப் படம் எடுக்க பல நிறுவனங்களும், இயக்குனர்களும் ஆர்வம் காட்டுகிறார்கள்.

இந்த நிலையில் துருவ நட்சத்திரம்' படத்தின் கதையை ஜெயம்ரவியிடம் கவுதம் மேனன் சொல்லியுள்ளார்.

கதையைக் கேட்ட அவர் நடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். இதையடுத்து துருவநட்சத்திரம் மீண்டும் படமாகிறது. இதில் ஜெயம்ரவி துருவ நட்சத்திர நாயகனாக ஜொலிக்க இருக்கிறார். இந்தப் படத்தை தயாரிக்க ஒரு நிறுவனம் முன் வந்துள்ளது. அதன்மூலம் துருவநட்சத்திரத்தை உருவாக்கித் திரைக்குக் கொண்டு வரும் ஏற்பாட்டில் கவுதம் மேனன் தீவிரமாக இறங்கி உள்ளார். முதலில் தயாராக இருந்த துருவ நட்சத்திரம்' படத்துக்கு ஏ.ஆர்.ரகுமான் இசை அமைப்பதாக இருந்தது. இப்போது உருவாகும் படத்துக்கு ஹாரீஸ் ஜெயராஜ் இசை அமைப்பார் என்று தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. தற்போது, ஜெயம்ரவி மிருதன்' படத்தில் நடித்து வருகிறார். இந்த படப்பிடிப்பு முடிந் ததும் 'துருவ நட்சத்திரம்' படப்பிடிப்புத் தொடங்கும் என்று தெரிகிறது.



# ஆண்களை கவரும் பீட்சா


பொதுவாக மேற்கத்திய நாடுகளில் பீட்சா உட்கொள்வது கவர்ச்சியான பழக்கமாக கருதப்படுகின்றது. இதனால்தானோ, என்னவோ? பெண்களை கவரும் முயற்சியில் ஆண்கள் 93 சதவிகிதத்திற்கும் அதி கமாக பீட்சா உட்கொள்கின்றனர் என சமீபத்திய ஆய்வின் மூலமாகத் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள கார்னெல் பல்கலைக்கழகம், மருத்துவர் கெவின் க்னிஃபின் தலைமையில் பருவம் வந்த 105 பேரிடம் இந்த ஆய்வை நடத்தியது. பீட்சா உள்ளிட்ட இத்தாலிய உணவு வகைகளைப் பரிமாறும் இத்தாலிய உணவகத்தில் இவர்களது உணவுப் பழக்கம் கண்காணிக்கப்பட்டது.

இந்த ஆய்வில், சக ஆண் நண்பர்களுடன் பீட்சா உண்ணும் அளவைக் காட்டிலும், பெண் தோழிகளுடன் உண்ணும் ஆண்கள் தொண்ணூற்று மூன்று சதவிகிதம் அதிகமாக உண்பதாகத் தெரியவந்துள்ளது. அதிலும் பீட்சா மட்டுமன்றி சாலட் வகைகளையும் தமது பெண் தோழிகள் முன்பாக உண்ணும்போது ஆண்கள் எண்பத்து ஆறு சதவிகிதம் அதிகமாக உட்கொண்டுள்ளனர். இந்த ஆய்வில், பெண்களின் உண்ணும் பழக்கம் இருபாலினத்தவருடனும் உண்ணும்போதும் ஒரே மாதிரித்தான் இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆகவே, ஆண்கள் பெண்ணைக் கவருவதற்காக இதுபோல அதீத அளவில் உண்பதாக இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக கெவின் குறிப்பிட்டுள்ளார்.

## பேஸ் புக்கில் பிடித்தவை...



இதுக்கு மேலயும் தலைக்கவசமா





எங்க ஊர்லேயும் மழை வருது ஆனல்
ஒதுங்கத்தான் இப்படி ஒரு இடம் இல்லை

## கொள்ளையர்கள் என்ற சந்தேகத்தில் பெண் உட்பட மூவர் பொலிஸாரால் கைது

### கொள்ளையிடப்பட்ட நகைகளின் சில பகுதிகளும் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.21

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரண்டு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் ஒரு பெண் உட்பட மூவர் யாழ்ப்பாண குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து கொள்கையிடப்பட்ட நகைகளின் சில பகுதிகளும் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஒக்ரோபர் மாதம் கொக்குவில் கிழக்குப் பகுதியில் உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டிலிருந்து பகல் நேரத்தில் 5 லட்சத்து 21 ஆயிரம் பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டன. அதேகாலப் பகுதியில் மருதடி வீதி, யாழ்ப்பாணம் பகுதியில் லண்டனில் இருந்து தன்னுடைய தாயாரின் அந்தியேட்டிக்காக வந்திருந்த பெண்ணொருவருடைய 4 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய நகைகளும் கொள்ளையிடப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருந்தன. இந்த நிலையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின்பேரில் சந்தேகநபர் ஒருவர் இந்த மாதம் 17 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் படி நாவற்குழியைச் சேர்ந்த வேறொரு சந்தேகநபரும் பெண்ணொருவரும் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட பெண் கொள்ளையிடப்பட்ட நகையைச் சாவகச்சேரிப் பகுதியிலுள்ள நகைக் கடையொன்றில் விற்பனை செய்தார் என்றும் - அந்தப் பகுதியில் உள்ள வங்கி ஒன்றில் வேறு சில நகைகளை அடைவு வைத்துள்ளார் என்றும் தெரியவருகின்றது. அந்தப் பெண்ணால் நகைக் கடையில் விற்பனை செய்யப்பட்ட நகைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த மூன்று சந்தேக நபர்களும் பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் முதலாம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஏற்கனவே பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பெயரில் நீண்ட காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டு அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் என்பதுடன் இவர்களுக்கு எதிராக யாழ். மாவட்டத்திலுள்ள பெரும்பாலான நீதிமன்றங்களில் பல வழக்குகள் நிலுவையிலுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-103)

## வவு. பிரசைகள் குழுவினரும் அமைச்சர் மனோவும் சந்திப்பு

### காணாமற் ஆக்கப்பட்டோர் தொடர்பான எதிர்கால வேலைத்திட்டம் குறித்து ஆராய்வு

வவுனியா, நவ.21

காணாமற் ஆக்கப்பட்டோர் - அரசியல் கைதிகள் தொடர்பில் வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட நாடு தழுவிய ரீதியில் எதிர்கால வேலைத் திட்டங்கள் குறித்து, தேசிய கலந்துரையாடல்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான அமைச்சர் மனோ.கணேசன் அவர்களும் - வவுனியா மாவட்ட பிரசைகள் குழுவினரும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்திலும், புதிய ஆட்சி மாற்றச் சூழலிலும் சிவில் சமூக மனித உரிமை சார்பு பணிகளில் வவுனியா மாவட்ட பிர சைகள் குழுவினர் சந்தித்த, சந்தித்துவரும் ஆபத்துகள் - சவால்கள் குறித்து கவனம் செலுத்திய அமைச்சர் அவற்றை நிவர்த்திசெய்து எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் பிரத்தியேகமாக நடைபெற்ற இந்தச் சந்திப்பில், அமைச்சர் அவர்களுடன், ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் பாஸ்கராவும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பிரியாணி குணசேகரவும் உடனிருந்தனர்.

பிரசைகள் குழுவின் சார்பில் தலைவர் கி.தேவராசா, செயலாளர் தி.நவராஜ், ஊடகப்பேச்சாளர் அ.ஈழம்-சேகுவேரா, பொருளாளர் கோ.ராஜா, நகரப்பகுதி இணைப்பாளர் வி.புவிகரன், வவுனியா தெற்கு பிரதேச இணைப்பாளர் தி.உதயன், செயல்குழு உறுப்பினரும் வவுனியா மாவட்ட காணாமற் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் சங்கத்தின் தலைவியுமாகிய திருமதி ஜெயவனிதா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கடந்த காலங்களில் இலங்கையில் மனித உரிமைகள் மேம்பாட்டுக்காக அமைச்சர் மனோ. கணேசன் ஆற்றிய பணிகளுக்காகவும், அவரது ஜனநாயக மக்கள் முன்னணி கட்சியினர் பிரஜைகள் குழுவினரின் செயற்பாடுகளுக்கு வழங்கிய ஒத்துழைப்புகளுக்காகவும் அமைச்சரை, வவுனியா மாவட்ட பிரசைகள் குழுவினர் பாராட்டி மதிப்பளித்தனர். (ற)


9 ஆம் ஆண்டு நினைவலைகள்

இரங்கநாதன் பிரபாசங்கர் (குஞ்சுபவி)



திதி: தசமி

இன்பமும் துன்பமும்
காணுகையில்...
இருந்தீர் எம்முடன் ஒன்றாக....
அன்பிலே தோய்த்து
எமையெல்லாம்
அணைத்து வழியது
காட்டி நின்றீர் ஒன்பது ஆண்டுகள்
எமைப் பிரிந்து ஓடியே போனது
வேதனையுள் காண்பது
எப்போது எனத்துடித்து....
கண்ணீரைக் காணிக்கை
ஆக்குகின்றோம்.

குடும்பத்தினர்.

தோற்றம் 1967.03.16 மறைவு 2006.11.30

உசன் ,மிருசுவில்.


## இழப்பீட்டுக்காக ரீவியை தூக்கியவரை விளக்கமறியலில் வைத்தது நீதிமன்றம்

சாவகச்சேரி, நவ.21

ஓட்டோவால் மோதுண்டு காயமடைந்தவர் விபத்துக் குறித்த வழக்கு நீதிமன்றில் நிலுவையில் இருந்த நிலையில், ஓட்டோ சாரதி தனக்கு இழப்பீடு தரவில்லை என்று தெரிவித்து, சாரதியின் வீட்டுக்குள் இருந்த தொலைக்காட்சியைக் கொண்டு சென்றுள்ளார். வீட்டிலிருந்த உடைமைகளையும் சேதப்படுத்தியுள்ளார். இந்தச் சம்பவம் மிருசுவில் கரம்பகத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த இரண்டு சம்பவங்கள் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் யப்பட்டிருந்தது. விபத்தால் தனக்கு நடக்க முடியாமல் இருப்பதால் தனக்கு இழப்பீடு பெற்றுத் தர வேண்டுமென நீதிமன்றில் பொலிஸார் ஊடாக வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

காயமடைந்தவர் கடந்த ஓகஸ்ட் 18 ஆம் திகதி நடைபெற்ற விபத்து தொடர்பான வழக்கு கடந்த 13ஆம் திகதி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதன்போது ஓட்டோவின் சாரதிக்கு 12 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து, காயமடைந்தவருக்கு இழப்பீடாக 30 ஆயிரம் ரூபா செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

அவ்வேளையில் காயமடைந்தவர் தனது வீட்டில் ஏற்படுத்திய சேதம் மற்றும் தொலைக்காட்சிப் பெட் டியைத் தூக்கிச் சென்றமை தொடர்பாக ஓட்டோ சாரதி நீதிமன்றில் தெரிவித்தார். அதையடுத்து சட்டத்தை வழிநடத்தும் பொறுப்பு பொலிஸாரிடம் உள்ளபோது நீங்கள் அதனை மீறிச் செயற்பட்டது தவறு எனக் கூறிய நீதிவான் காயமடைந்தவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

நீதிவானின் பணிப்பின்பேரில் பொலிஸார் இந்த நபரைக் கைது செய்து, நீதிமன்றில் முற்படுத்தியதுடன் அவரால் எடுத்துச் செல்லப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டியையும் நீதிமன்றில் கொண்டு வந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரை கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன், எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

கடந்த 13 ஆம் திகதி சாரதிக்கு எதிராக நடத்தப்பட்ட வழக்கின்போது பாதிக்கப்பட்ட கால் முழுவதும் துணிகளால் சுற்றி நடக்க முடியாது நொண்டி நொண்டி நீதிமன்றுக்கு வந்து இழப்பீடு பெற்றவர், கடந்த புதன்கிழமை நீதிமன்றுக்கு வழமையாக நடப்பதுபோல வந்தார் என்று அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். (ற-9)


5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

காந்தரூபி (அரியமலர்) சுப்பிரமணியம்



பிறப்பு 05.08.1935

இறப்பு 15.12.2010

திதி: பூர்வபட்ஷதசமி (21.11.2015)

ஆண்டுகள் ஐந்து ஆனபோதிலும் மாறாத நினைவுகளை
மனதிலே வரைந்து கொண்டு தீராத வேதனையில்
தினம் தினம் துடிக்கிறோம்
ஆண்டுகள் பல ஆனாலும் ஆறாது எம் மனம்
நீங்கள் சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்.

சித்தாவத்தை, உடுவில் வடக்கு.

குடும்பத்தினர்.

(54545)(45.6.3)



கண்ணீர் அஞ்சலி



திருமதி பரமேஸ்வரி கதிரவேலு

பக்கவாதப்பராமரிப்பு இல்லம், இரத்தினபுரம், கிளிநொச்சியின் செயலாளர் திருமதி சூரியகுமாரி இராசேந்திரம் (அதிபர் - கிளி/இராமகிருஷ்ண வித்தியாலயம்) அவர்களின் அன்புத் தாயார் திருமதி பரமேஸ்வரி கதிரவேலு அவர்கள் காலமான செய்தி அறிந்து நாமும் கவலை கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

58/1, இரத்தினபுரம், கிளிநொச்சி.

நிர்வாகிகள், பயனாளிகள், பணியாளர்கள்.

Paralyses Nursing Home



கண்ணீர் அஞ்சலி



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தால் நிர்வகிக்கப்படும் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் நல்லூர்க்கந்தன் தேர் உற்சவ அன்னதானத்தை இன்றுவரை செய்து வருகின்ற அம்பிகை களஞ்சியம், ராம் பூட்சிற்றி ஆகியவற்றின் உரிமையாளரும், அன்னை நாக பூட்சிற்றி உரிமையாளர் தம்பிராசா குழந்தைவேல் அவர்களின் சகோதரருமாகிய

தம்பிராசா குகநேசன்

அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.

துர்க்காதேவி மணிமண்டபம், நல்லூர்.



மோக்ஷதீப அழைப்பு



நிகழும் மன்மத வருஷம் ஐப்பசி மாதம் 24 ஆம் நாள் (10.11.2015) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி

ஸ்ரீமதி ராம்ராஜ் ஐயர் தாட்சாயினி அம்மா

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

சிவஸ்ரீ வ.ராம்ராஜ் ஐயர் (கணவர்)
சிவஸ்ரீ சி. கதிர்காமநாதக் குருக்கள் (தந்தை)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சொர்ணம்மா பொன்னுத்துரை




தாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், அச்செழு வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணம்மா பொன்னுத்துரை 20.11.2015 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், பத்மலீலா (கனடா), பத்மராணி (அச்செழு), பத்மசோதி (ஜேர்மனி), பத்மலோஜினி (ஜேர்மனி), பத்மரோகினி (கனடா), காலஞ்சென்ற பத்மநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சர்வேஸ்வரன், பேரின்ப நாயகம் (அச்செழு), சத்தியமூர்த்தி (ஜேர்மனி), சிவநாதன் (ஜேர்மனி), தணிகசேகரம் (கனடா), வனஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கனடாவைச் சேர்ந்த கஜேந்தன், சுயந்தன், தர்சிலா, துஸாந்தி, சகானா, ஆரணி, ஆதித்தன், துஸ்யந்தன் மற்றும் ஜேர்மனியைச் சேர்ந்த சபீனா, பிரசன்னா, மிதுலா, மிதுனன், கஜீபன் (அச்செழு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் புத்தூர் நிலாவரை வீதி, அச்செழு வடக்கு எனும் தற்காலிக இல்லத்தில் நாளை (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணிக்கு அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.பேரின்பநாயகம் (மருமகன்)
புத்தூர் நிலாவரை வீதி,
அச்செழு வடக்கு,
நீர்வேலி.
077 600 3402
(66210) (11.15.17)

## நவரத்தினசாமி கணபதிப்பிள்ளை (தருமையா)



பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும், தொண்டமானாற்றை வசிப் பிடமாகவும் கொண்ட தருமையா என அழைக்கப்படும் நவரத்தினசாமி கணபதிப்பிள்ளை 18.11.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினசாமி - மாசியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - அன்னக்கண்டு தம்பதியரின் அன்பு மருமகனும், நேசரத்தினத்தின் அன்புக் கணவரும், சாந்தகுமார், பாலகுமாரி, உதயகுமார், விஜயகுமார், செல்வக்குமார், ஜீவகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 7.30 மணிக்கு காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
பெரியகடற்கரை,
தொண்டமானாறு.
(66214)(11.15.17)

## திருமதி நல்லம்மா தம்பிமுத்து



பலாலி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் தற்பொழுது பிரான்சில் வசித்த வருமான திருமதி நல்லம்மா தம்பிமுத்து 18.11.2015 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான கதிர்காமு - சின்னம்மா தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற தம்பிமுத்துவின் அன்பு மனைவியும் கென்ஸ்மோகன், லலிதா(லீலா), புவனேஸ்வரி, பரமேஸ்வரி காலஞ்சென்ற பாரதிதாசன் மற்றும் ரஞ்சினி, கண்ணதாசன், மைதிலி ஆகியோரின் அன்புத் தாயாரும் ரஜித்தா, துரைரத்தினம், பரமானந்தம், காலஞ்சென்ற விஜயரத்தினம் மற்றும் நகுலராஜா, மல்லிகா, ரவீந்திரன் ஆகியோரின் மாமியாரும் பிரசன்னா, வினோ, செங்கையன், கௌதம், கீதா, கேதினி, நயோமி, கவிதா, நிலோஜன், பிரசாந், நிஷா, விதுர்சி, லிண்டா, லக்ஷா, லின்ஷா, லிதிஷா, கானுஜன், கானுஷா, ஜினோவின், ஷஞ்யுதன், ஷமீரா, ஷைரா ஆகியோரின் பேர்த்தியும் லியாங்கா, சுகீஷன், சுபீஷன், சுதீஷன், பவிஷா, அபிஷா, அல்வின், அஸ்வின், றீனா, றிசிகா, நிதுசன், எதுறின், எமிறோ, ஜோஸ்சன், ஆதித்தியா, மெல்வின், வெஸ்லே, ஏவ, லிவினா, அலினாஸ், லயானா, அனுசன், செலினா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் 23.11.2015 திங்கட் கிழமை 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மகள்
து.லலிதா(லீலா)
33, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(66208) (14.15.18)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா உமாபதி

(ஓய்வு பெற்ற சிரேஷ்ட முகாமையாளர் - இலங்கை வங்கி )

பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா உமாபதி 18.11.2015 புதன்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், Dr. ஸ்ரீசங்கரின் பாசமிக்க தந்தையும், Dr.ஜெயகௌரியின் மாமனாரும் , மாதங்கன், வேள்மாறன் (மருத்துவ பீடமாணவர்கள், பங்களாதேஷ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளைஜயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 712 6859, 011 251 3562 (66204) (14.15.17) தகவல்: மகன்.

## திருமதி நாகம்மா நடேசு



பிறப்பு: 04.03.1929
இறப்பு: 16.11.2015

மட்டுவில், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொத்தியகாடு தொண்டமானாற்றை வசிப்பிடமாகவும் கொண்ட நாகம்மா-நடேசு 16.11.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடேசுவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற அபூர்வம் மற்றும் இராசதுரை, செல்வரத்தினம், செல்லத்தங்கம் துரைராச[illegible] பொன்னம்மா ஆகியோரின் சகோதரியும், ஜெயராணி, ஜெயவதனி (கனடா) சுந்தரலிங்கம் (டென்மார்க்) பிறைசூடி (ஜேர்மன்) ஜெயவதனா (கனடா) ஜெயமோகன் (கனடா) ஸ்ரீமோகன் (கனடா) ஜமுனாராணி, வசந்தராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், பத்மநாதன், பாலகுமார், ஷாமினி, சுசிகலா, சுதாகர், தயாழினி, காயத்திரி, சிறீதரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(66196) (10)
தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
கொத்தியகாடு, தொண்டமானாறு.
076 881 3195, 077 631 0385

# மரண அறிவித்தல்

## ஆறுமுகசாமி சதானந்தசிவம்

ஓய்வுபெற்ற மின்னியலாளர், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை)



வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், இல.11, குட்செட் வீதி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகசாமி சதானந்தசிவம் 19.11.2015 வியாழக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகசாமி - கஸ்பாஸ்திரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், தயாழினியின் அன்புக் கணவரும் திருமதி யசிந்தா (பிரான்ஸ்), திருமதி வேணுகா, யதுசன் (பிரான்ஸ்), கிருஷிகா (மாணவி - வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பங்கயமணாளன் (பிரான்ஸ்), கோகுலன் (விரிவுரையாளர் - கணித புள்ளி விவரவியற் திணைக்களம் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தேனுகா, ருக்ஷிகா, வர்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும், கருணாநிதியம்மா, செல்வானந்தம், காலஞ்சென்றவர்களான தியாகராசா, பரமானந்தசிவம் மற்றும் வர்ணகுலசிங்கம் (பிரான்ஸ்), மங்களேஸ்வரி, நித்தியானந்தம் (லண்டன்), நிர்மலாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான உமைநாதன், புனிதவதி மற்றும் சரோஜா, சிவசொரூபராணி, மங்களாதேவி (பிரான்ஸ்), மகிழ்நங்கை (பிரான்ஸ்), தயாளசிங்கம், லிங்கதர்சினி (லண்டன்),தங்கவேல் (லண்டன்), நாககனிநாதன் (சுவிஸ்), தயாநிதி (பிரான்ஸ்), தயாநந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 887 3142, 078 532 7874,
077 963 0943, 0033-9543 97450 (பிரான்ஸ்)
இல.11, குட்செட் வீதி,
வவுனியா
(65291)(11.15.17)

## நிரந்தர நியமனம் தொடர்பாக தொண்டராசிரியர் கலந்துரையாடல்

கிளிநொச்சி, நவ.21

நிரந்தர நியமனத்துக்கான ஆவணங்களை வடக்கு அமைச்சுக்கு வழங்குவது தொடர்பான கிளிநொச்சி தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை இடம்பெற உள்ளது என்று கிளிநொச்சி மாவட்டத் தொண்டராசிரியர் சங்கத் தலைவர் ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பாக வடக்கு மாகா[illegible] கல்வி அமைச்சுக்குத் தொண்டராசிரியர்களுடைய ஆவணங்கள் வழங்க வேண்டியுள்ளது. அதனால் கிளிநொச்சி மாவட்டத் தொண்டராசிரியர்கள் அனைவரும் நாளை கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு வருகை தருமாறும் வருகை தரும் போது தேசிய அடையாள அட்டை, உட்பட தொண்டராசிரியராகக் கடமை யாற்றியமைக்கான ஆவணங்கள், பாடசாலை அதிபருடைய கடிதம், பிறப்புச்சான்றிதழ் போன்றவற்றைக் கொண்டு வரவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வருகை தராத தொண்டராசிரியர்களுக்கு நிரந்த நியமனம் தொடர்பில் தொண்டராசிரியர் சங்கம் பொறுப்பேற்காது என்றும் சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-2)

## வர்த்தகர்களுக்கு அபராதம்

சாவகச்சேரி, நவ. 21

பாவனையாளர் களுக்கு தரமான பொருள்களை வழங்காத தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆறு பேருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் தலா 9 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் வி[illegible]கப்பட்டது.

யாழ். மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையால் தென்மராட்சிப் பிரதேசத்தில் எழுதுமட்டுவாழ், கைதடி, சாவகச்சேரி, மிருசுவில், நுணாவில் ஆகிய இடங்களில் நடத்தியதிடீர்சோதனையின் போது திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்தமை, நிறை குறைவாக பொருள்களை விநியோகித்த[illegible] போன்ற குற்றங்களுக்காக வர்த்தகர்கள் 6 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகள் கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 9 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ம-9)

# நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலை குறைபாடுகள் விரைவில் சீராக்கப்படும்

## சாந்தி சிறீஸ்கந்தராசா எம்.பி. உறுதியளிப்பு



கிளிநொச்சி, நவ.21
நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலையின் தேவைகள் தொடர் பில் வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் கேட்டறிந்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா குறித்த தேவைகளை விரைவில் தீர்த்து வைக்கப்படும் என்று வைத்தியசாலை நிர்வாகிகளிடம் உறுதியளித்துள்ளார்.


முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பகுதியில் உள்ள நட்டாங்கண்டல் வைத்தியசாலை நீண்ட காலமாக நிரந்தர வைத்தியர் இல்லாமை உட்பட பல பற்றாக்குறைகளுடன் காணப்பட்டது. அதனால் அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் தங்களுடைய மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இயலாது சிரமப்பட்டனர்.

நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு கோரிப் பல தடவைகள் ஆர்ப்பாட்டங்கள், அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்தனர். அதனடிப்படையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் குறித்த வைத்தியசாலைக்கு என நிரந்த வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

ஆனால் வைத்தியசாலையின் மற்றும் பல தேவைகள் நிவர்த்தி செய்யப்படாமல் இருந்தன. இது தொடர்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசாவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதை அடுத்து குறித்த வைத்தியசாலைக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தபோது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவின் கூரை சீரின்மை, தொடர்பாடல் சாதனங்களின் குறைபாடுகள் மற்றும் வைத்தியர் விடுதியில் நிலவிய குறைபாடுகள் போன்ற பல விடயங்கள் நட்டாங்கண்டல் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முன் வைக்கப்பட்டன.

அதையடுத்து பொதுமக்களுக்குப் பயன் தரும் வகையில் குறித்த வைத்தியசாலையின் தேவைகள் அனைத்தும் உரிய அதிகாரிகளிடம் எடுத்து கூறப்பட்டு விரைவில் நிவர்த்தி செய்யப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (ற-21,ரி7)

# கண்டாவளை பன்றிசுட்டான் வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்



கிளிநொச்சி, நவ.21
கிளிநொச்சி மாவட்ட கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கண்டாவளையில் பன்றிசுட்டான் வீதியை 4 மில்லியன் ரூபா செலவில் தார் வீதியாக்கும் வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கண்டாவளையில் இருந்து பன்றிசுட்டான் வரை செல்லும் 3.7 கிலோமீற்றர் நீளமான வீதியில் 680 மீற்றர் வீதி தார் வீதியாக்கப்படவுள்ளது. வடக்கு வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் குறித்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சி வீதி அபிவிருத்தித் திணைக்களம் குறித்த வீதியில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில் கண்டாவளை மாதர் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்டப் பிரதம பொறியியலாளர் வ.ஜெகானந்தன், கிராம அலுவலர் மற்றும் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-21)

# மர நடுகை மாதத்தை முன்னிட்டு பாண்டியன்குளத்தில் மர நடுகை

## துணுக்காய் பனை, தென்னை அ.கூ.ச ஏற்பாட்டில்

கிளிநொச்சி, நவ.21
மர நடுகை மாதத்தை முன்னிட்டு முல்லைத்தீவு, பாண்டியன் குளம் துணுக்காய் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் பனம் விதைகளும், பயன் தரு மரங்களும் நேற்று துணுக்காய், பாண்டியன்குளம் பகுதியில் நடப்பட்டன.



பனை,தென்னை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பொ.சதீஸ்குமார் தலைமையில் நேற்றுக்காலை 9மணிக்கு இந்த நிகழ்வு நடைபெற்றது.

100க்கும் மேற்பட்ட பனை நாற்றுக்கள் மற்றும் 25க்கும் மேற்பட்ட பயன் தரு மரங்கள், தென்னை போன்றன அந்தப் பகுதியில் நடப்பட்டன.

அத்துடன் முல்லைத்தீவு அனிஞ்சியன் குளத்தில் உள்ள பாண்டியன்குளம் - துணுக்காய் பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்க கிளைக் காணியில் சங்க அங்கத்தவர்களும், கிராம மக்களும் இணைந்து தென்னம் கன்றுகளையும் நட்டனர்.

விரைவில் மாந்தை கிழக்குப் பிரதேசத்துக்குட்பட்ட பல இடங்களில் 30 ஆயிரம் பனம் விதைகளை நடுவதற்கு துணுக்காய்-பாண்டியன் குளம் பனை தென்னைகூட்டுறவு அபிவிருத்தி சங்கத்தினர் திட்டமிட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர் கமலேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் சுபசிங்க மற்றும் முல்லை மாவட்ட பனை தென்னை அபிவிருத்தி இணைப்பாளர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொன்டனர். (ற-ரி7)

# வெள்ளத்தால் இடம்பெயர்ந்தோருக்கு அரச சார்பற்ற நிறுவனங்களால் உதவி

ஒட்டுசுட்டான், நவ.21
கடும் மழை காரணமாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்த பேராறு, பண்டார வன்னியன் கிராமத்தைச் சேர்ந்த 118 குடும்பங்களுக்கு பல லட்சம் ரூபா பெறுமதியிலான உலர் உணவுப் பொருள்கள் உட்பட மற்றும் சில பொருள்கள் அரசசார்பற்ற நிறுவணங்களால் வழங்கப்பட்டுள்ளன என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாகப் பெய்த கடும் மழையின் காரணமாக முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பேராறு, பண்டார வன்னியன் கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்கள் இடம் பெயர்ந்து பொது இடங்களில் தங்கியிருந்தனர்.

அவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளையினரால் 98 குடும்பங்களுக்கு தலா 4ஆயிரம் பெறுமதியான சமையல் உபகரணங்கள், கீற்றாபோர் நிறுவனத்தினரால் 118 குடும்பங்களுக்குமான தலா 640 ரூபா பெறுமதியான உணவு பொருள்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.'

இடம்பெயர்ந்த 118 குடும்பங்களுக்குமான நுளம்பு வலைகளும் ஒட்டுசுட்டான் பொது சுகாதார பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளன என்று பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (ற-500)


Congratulations

யா/ யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை

2015 தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப்

பாராட்டி வாழ்த்துகின்றோம்



இடமிருந்து வலம்

| | | | |
|---|---|---|---|
| த. பவசாயினி - 175 | சி.பிரியங்கா - 166 | ச.தனுசா - 159 | த.தனுஜா - 155 |
| பா. டஸ்சிகா - 169 | ரோ.வஜனிகா - 165 | சு.தரணிகா - 158 | ஜெ. சிவசங்கரி - 154 |
| நா. ஜெயசாலினி - 168 | இ.துஸியந்தி - 162 | ஐ.சங்கவி - 157 | பி. சுபாசினி - 153 |
| தி. விம்மகி - 167 | சி.தீபிகா - 160 | ச.டருணிகா - 155 | சி.சௌமியா - 155 |

70 புள்ளிகளுக்கு மேல் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம. துஜனி -152 | செ.அஜீபா -144 | செ.பிரியங்கா -135 | நே.திபிகா -122 | | |
| இ.காயத்திரி -152 | சி.பானுஜா -143 | டலக்சிகா -132 | சி.கஜனி -122 | | |
| பு.டிலானி -151 | சி.வைஸ்ணவி -143 | க.வைஸ்ணவி -132 | த.நிருஷிகா -121 | | |
| அ.யஸ்வினி -151 | சா.டொனிகா -143 | சா.சங்கவி -132 | வி.மயூரி -121 | | |
| கு.திருஷா -151 | நா.ஜனனி -142 | ர.டுஷானா -132 | த.மதுரிக்கா -121 | | |
| ஜெ.திப்ஷனா -150 | வி.விதுர்ஷனா -142 | ரா.லுக்சிகா -131 | வ.மேகிதா -118 | | |
| ர.டனுசியா -150 | ஜெ. தரணிஜா -142 | ஜெ.ஜெசிந்தா -131 | நி.பிரபாலினி -117 | கு.பவிசா -108 | ச.விஸ்னுகா - 98 |
| சி.யதுர்சிகா -150 | வ.ஆர்த்திகா -141 | சா.ரம்மியா -131 | ம.சஜீரா -117 | உ.கம்சிகா -106 | த.பிரீத்தி 98 |
| க.சாருசா -150 | கே.நிவேதா -140 | க.கஜனி -129 | செ.சரண்யா -117 | அ.கனுஷா -106 | த.ருசாயினி - 97 |
| து.ஜெயந்தனி -149 | இ.மயூரிகா -140 | க.அபிஷாலினி -129 | கெ.அபிநயா -115 | ஜெ.லக்சிகா -105 | த.கம்சாயினி -96 |
| ச.தக்சிகா -149 | சு.திசானா -140 | ஆ.ஆதிரா -128 | ச.நயனிதா -114 | ர.பிரதீபா -104 | த.அர்ச்சனா - 96 |
| கா.அன்மினி -148 | ர.துர்க்கா -138 | கி.தில்யா -127 | சி.மதுசா -115 | சி.பிரவீனா -104 | யோ.நன்சிடினா - 94 |
| சு. கஜிஸ்ரா -148 | அ.அபிநயா -138 | ம.மதுமிதா -126 | இ.நிலக்ஷினி -112 | நா.ஹனுசியா -100 | எ.ஆன்ஜனனி - 90 |
| சி. சிவராஜி -147 | த.டக்சாயினி -137 | ஜெ.லக்சிகா -126 | க.டிலக்சிகா -111 | த.தமிழினி -100 | ந.பிருந்தாயினி - 89 |
| ச.ரம்யா -147 | ஜி.ஐதுர்சியா -136 | க.கம்சிகா -126 | ரி.அஸ்விகா -111 | ர.ரிசானா - 99 | அ.தர்சனா - 88 |
| ர.ஆதித்யா -147 | உ.கவைதினி -135 | கா.தர்சிகா -125 | உ.கோபிஷா -109 | ர.டிலக்ஷிகா - 99 | யோ.மயூரகா - 84 |
| க.நந்திகா -144 | த.துவிகா [illegible] | [illegible] | [illegible] -108 | பி.இந்துஜா - 99 | பி.திரிஷா [illegible] |

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும்
70 புள்ளிகளுக்கு மேல் பெற்று தேர்ச்சியடைந்த மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு
அவர்களை வழிப்படுத்திய
அதிபர், ஆசிரியர்களுக்கும்
நன்றியையும் பாராட்டையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்.

(உ-ஞ) (11.21.11)(18228)

# காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மீள இயக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

## சிறிலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம் விடுத்தது

நாளொன்றுக்கு ஆயிரத்து அறுநூறு மெற்றிக் தொன் சிமந்தை உற்பத்திசெய்யும் திறனைக் கொண்டிருந்த காங்கேசன்துறை தொழிற்சாலையின் உற்பத்திகளை மீளவும் ஆரம்பிப்பதற்காக அந்த நிலப் பிரதேசத்தைமீட்டுத்தருமாறு இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மூவாயிரத்துக்கு மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றியிருந்த இந்த நிறுவனம் போர் காரணமாக 1990ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் உற்பத்திகளை நிறுத்தியிருந்தது. போர் முடிவுற்றதன் பின்வரும் கூட 750 ஏக்கர்கள் வரையிலான தெழிற்சாலைச் சூழல் இன்னமும் பாதுகாப்புப் பிரிவுகளின் வசத்தில் உள்ளது என்று இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு இயக்குநரான ரியாஸ்சாலி தெரிவித்தார் .

நாட்டின் அபிவிருத்திகள் மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு மிகப் பெரும் பங்களிப்பை வழங்கக் கூடிய தொழிற்சாலை செயலிழந்திருப்பதானது பெரும் இழப்பு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர் முடிவுக்கு வந்ததையடுத்து இந்தத் தொழிற்சாலையை அண்டி அரச மாளிகையொன்று அமைக்கப்பட்டது. அதை நடத்திச் செல்வதற்கு சிமெந்து தொழிற்சாலை தடையாக இருப்பதால் அரசின் உயர்மட்டத்து முகாமைத்துவம் தொழிற்சாலையை அந்த இடத்தில் இருந்து அகற்றுவதற்குப் பரிந்துரை செய்துள்ளது என்றும் ரியான் சாலி தெரிவித்துள்ளார். அத்துடன் தொழிற்சாலையின் இயந்திர சாதனங்களின் பெரும் பகுதி வெட்டப்பட்டு இரும்புக்கு விற்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

சிங்கப்பூர், பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இந்தத் தொழிற்சாலையின் உற்பத்திச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளன எனவும், அந்த நாடுகளின் வர்த்தகர்கள் இங்கு வந்து ஏற்கனவே பேச்சு நடத்தியிருந்தனர் என்றும் செயற்பாட்டு இயக்குநரான ரியாஸ் சாலி மேலும் தெரிவித்துள்ளார். (ற-22)

## ஆசிரியர் முதலாமிடம்




வவுனியா,நவ.21

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கணித பாட ஆசிரியர்களுக்கான, கணித செயற்பாட்டு போட்டியில், வவுனியா வடக்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தின் ஆசிரியர் சுதாகரன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (422)

## வெள்ளத்தால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உலர் உணவுப் பொதி

### வடமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டன



மன்னார், நவ.21

கடந்த சில தினங்களாக ஏற்பட்டுள்ள கடும் மழையின் காரணமாக மன்னார் மாவட்டத்தில் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கி இருந்த சுமார் 545 குடும்பங்களுக்கு வடமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

வடமாகாண முதலமைச்சரின் பணிப்புரைக்கு அமைவாக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு சுமார் 13 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்ட 545 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 019 பேருக்கு குறித்த உலர் உணவுப்பொதி வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற குறித்த உலர் உணவுகள் வழங்கும் நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, மன்னார் மாவட் மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல், மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ். வசந்தகுமார், மன்னார் பிரதேச செயலக நிர்வாக அலுவலர் ராதா பெர்னாண்டோ மற்றும் கிராம அலுவலகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒரு குடும்பத்திற்கு ஆயிரத்து 099 ரூபாய் பெறுமதியுடைய உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப் பட்டது. (ற-56)

## இனந்தெரியாத விசமிகளின் செயலால் வைத்தியசாலை விடுதிக்குள் வெள்ளம்

நெல்லியடி, நவ.21

இனத்தெரியாத நபர்கள் செய்த நாசகார வேலையால் வல்வெட்டித்துறை பிரதேச அரச வைத்தியசாலையில் வெள்ளம் புகுந்துள்ளது. அதனால் வைத்தியசாலையின் நிலத்தடி விடுதி, பிரேத அறை உட்பட பல விடுதிகள் பாதிக்கப்பட்டன.

வைத்தியசாலைக்கு அருகிலுள்ள பாதையூடாக வெள்ளம் வழிந்தோடிய நிலையில் இருந்தது. இந்த நிலையில் வைத்தியசாலை மதிலில் துவாரம் ஏற்படுத்தி வெள்ள நீரை வைத்தியசாலைக்குள் திசை திருப்பி விட்டிருந்தனர் . இதனால் அந்தப் பகுதி எங்கும் வெள்ளக்காடாகக் காட்சியளித்தது.

அதையடுத்து வல்வெட்டித்துறை பொலிஸார் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் இணைந்து நீரை அப்புறப்படுத்தினர்.

இருந்தபோதும் வைத்திய சாலைப்பகுதி எங்கும் சேறும் சகதியாகக் காணப்படுகின்றது. நிலக்கீழ் விடுதியில் வெள்ள நீர் தற்போதும் தேங்கி நிற்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-108)

## பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஆணைக்குழுவால் விசாரணை

கொழும்பு, நவ. 21

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் தமயந்தி ஜயரத்ன, ஊழல் மோசடி தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனம் குறித்து வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்வதற்காக இவரிடம் நேற்று வியாழக்கிழமை விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த நிறுவனத்துக்கு இராணுவத்தினரால் வழங்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை, அவன்கார்ட் நிறுவனத்துக்கு விற்பனை செய்த சம்பவம் தொடர்பிலேயே இவரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனமானது, துறைமுக பாதுகாப்பு உள்ளிட்ட பல சேவைகளை வழங்கிவந்தது. எனினும் ஆட்சி மாற்றத்தின் பின்னர் குறித்த சேவைகளை இடைநிறுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (து)

## சர்வதேச வர்த்தக கண்காட்சி கூடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.21

யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சியின் காட்சிக் கூடங்களை அமைப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான முற்பதிவுகளை எதிர் வரும் மார்கழி மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு யாழ். வர்த்தக தொழில்துறை மன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.

வடபகுதிக்கும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கும் இடையே ஓர் இணைப்பு பாலமாக விளங்கும், யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சி அடுத்த ஆண்டு தை மாதம் 29ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

கண்காட்சியை 7 ஆவது முறையாக வர்த்தக தொழில்துறை மன்றமும் வரையறுக்கப்பட்ட இலங்கை கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் சேவைகள் தனியார் நிறுவனமும் இணைந்து நடத்தவுள்ளன.

இந்தக் கண்காட்சியில் காட்சிக் கூடங்களை அமைப்பதற்கான விண்ணப்பங்கள் வடமாகாணத்தைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடம் இருந்தும் கோரப்பட்டுள்ளன. தமக் கான முற்பதிவை இராசாவின் தோட்ட வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழில் துறைமன்றத்தில் மேற்கொள்ள முடியும் என்று யாழ். வர்த்தக தொழில்துறை மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-ரி5)

## வீட்டுக் கேற் உடைத்து 2 சைக்கிள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.21

வீட்டுக் கேற்றை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் 2 சைக்கிள்களைத் திருடிச் சென்றுள்ளனர் என்று யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். புங்கன்குளம் வில்வந்தெரு பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது. வீட்டில் வசிப்பவர்கள் வேலைமுடிந்து வழமைபோன்று வீட்டு விறாந்தையில் 4 சைக்கிள்களை நிறுத்தியுள்ளனர். இரவு 11 மணிக்குப் பின்னர் நித்திரைக்கு சென்றதும், நிறுத்தப்பட்டிருந்த 4 சைக்கிளில் இரண்டை திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

அதிகாலை வீட்டு உரிமையாளர்கள் வெளியில் வந்தபோதே திருடப்பட்டமை தெரியவந்தது. கேற்றின் பூட்டு உடைக்கப்பட்டு வீசப் பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸாருக்கு தகவல் வழங்கிய பின்னர், வீட்டு உரிமையாளரினால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

69785710 என்ற இலக்கமுடைய சைக்கிளையும், மற்றுமொரு சைக்கிளையும் திருடப்பட்டுள்ளன. எந்தப் பிரதேசத்திலாவது சந்தேகத்துக்கு இடமாக சைக்கிள்கள் விற்பனைக்கு வந்தால், அது தொடர்பில் உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்குமாறும் யாழ்ப்பாணப் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளார்கள். (த-4,106)

## பெண் தலைமைக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல்

கிளிநொச்சி, நவ.21

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பெண்களை தலைமைத்துவமாகக்கொண்ட குடும்பங்களுக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால் மாகாணத்துக்கென குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.


முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பிரதேச செயலக பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பத்து பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கே குறித்த உதவி திட்டங் கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அவர்களது குடும்ப வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் ஒரு குடும்பத்துக்கு தலா 7 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.



கோழிக்குஞ்சுகள் மற்றும் பாத்திரங்கள் என்பனவே வழங்கப்பட்டுள்ளன.


மாந்தை கிழக்கு பிரதேச கால்நடை திணைக்களத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சுகாதார அமைச்சரின் சார்பாக அமைச்சரின் பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் நடராசா, அமைச்சரின் வவுனியா வடக்கு இணைப்பாளர் இரா.சஜீவன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, முல்லைத்தீவு மாவட்ட கால்நடை உற்பத்திசுகாதாரத்திணைக்களத்தின் உதவிப்பணிப் பாளர், கால்நடை வைத்தியர் கிரிஜகலா, மாந்தை கிழக்கு கால்நடை வைத்திய அதிகாரி எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ரி7)




# பேஸ்புக்கில் பவர்பொயிண்ட்

மாநாடு, கருத்தரங்கு, அலுவலகக் கூட்டங்கள் என்றால் பவர்பொயிண்ட் காட்சி விளக்கம் தானாக நினைவுக்கு வரும். அலுப்பூட்டக் கூடியது என்று சிலர் விமர்சித்தாலும் மணிக் கணக்காகப் பேச வேண்டிய விடயங்களைக் கூட பவர்பொயிண்ட் காட்சி விளக்கமாக கச்சிதமாக முன்வைக்கலாம். இப்போது பவர்பொயிண்ட் சேவையை மேலும் சுவாரஸ்யமாக்கும் புதிய வசதி அறிமுகமாகியுள்ளது. மைரோசொப்ட் நிறுவனம் 'சோஷியல் ஷேர்' எனும் பெயரில் 'பிளக் இன்' வசதியாக இதை அறிமுகம் செய்துள்ளது. இந்தச் சேவை பேஸ்புக் மற்றும் ருவிற்றர்; ஆகிய சமூக ஊடகச் சேவைகளில் பவர்பொயிண்ட் காட்சி விளக்கங்களைப் பகிர்ந்து கொள்ள வழிசெய்கிறது. தனி ஸ்லைடுகள் ஒளிப்படமாகப் பகிர்ந்து கொள்ளலாம். அல்லது மொத்தக் காட்சி விளக்கத்தையும் ஒளிப்பட அல்பமாகப் பகிரலாம். விரும்பினால் ஒருபடி மேலே போய் வீடியோ வடிவிலும் பகிர்ந்துகொள்ளலாம். இந்த ஸ்லைடுகளைப் பார்த்து ருவிற்றரிலும், பேஸ்புக்கிலும் நண்பர்கள் தெரிவிக்கும் கருத்துக்களையும் பவர்பொயிண்ட் செயலியிலேயே பார்த்துக் கொள்ளலாம். அது மட்டுமல்ல, காட்சி விளக்கங்களை நேரடியாக 'பென்டிரை'வில் கோப்பாக சேமித்துக்கொள்ளலாம்.

# மல்ட்டி ஸ்ராண்ட்



ஐபாட் , டேப்லட் பயன்படுத்துபவர்களுக்கான மல்டி பர்ப்பஸ் ஸ்ராண்டை வடிவமைத்துள்ளது ஒரு நிறுவனம். படுத்துக் கொண்டே டேப்லட் பார்க்கும் பழக்கம் உள்ளவர்கள் இந்த ஸ்ராண்டில் டேப்லட்டை பொருத்திக் கொள்ளலாம். படுத்துக்கொண்டே நெஞ்சின் மீது ஸ்ராண்டை வைத்துக் கொள்ளலாம், மடியில் வைத்துக் படிக்கவும், சாதாரணமாக மேசையில் வைத்துப் படிப்பதற்கு ஏற்பவும் இந்த ஸ்ராண்டை மடக்கிக் கொள்ளலாம். பல வகைகளிலும் இதன் வடிவமைப்பை மாற்றலாம். நிறையும் 500 கிராமைவிடக் குறைவு என்பதால் கையாள எளிதாகவும் இருக்கும்.

# மர நடுகை மாதம்

## மரம் வளர்ப்போம்!

*"உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும் செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயல்களின் பிரதிபலிப்பே."* மகாத்மா காந்தி (இந்திய தேசபிதா)

ஒரு மனிதன் சுவாசிப்பதற்கு எவ்வளவு பிராணவாயு அதாவது ஒக்சிசன் தேவை என்று தெரியுமா? சராசரியாக ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு நாளைக்கு 53 லீற்றர் ஒக்சிசன் கண்டிப்பாகத் தேவைப்படுகிறது.

ஒருமரத்தில் உள்ள இலையானது 5 மி.லீற்றர் அளவுக்கு ஒக்சிசனை வெளிவிடுகிறது. ஒரு குடும்பத்தில் நான்கு பேர் உறுப்பினர்கள் என்றால்.. நீங்கள் சுவாசிக்க அதாவது உயிர் வாழ குறைந்தபட்சம் 50000 இலைகள் கொண்ட ஒரு மரம் அவசியம். காற்றிலே ஒக்சிசன் உண்டு என்றாலும், கூடவே கரியமில வாயு எனப்படும் கார்பன் டை ஒக்சைட் மற்றும் மீத்தேன், நைட்ரஜன் வாயுக்கள் சுவாசித்தலை நிலை குலையச் செய்கின்றன.

கூடவே இரசாயன வாயுக்கள், கார்ப்பன் மோனாக்சைடு போன்ற நச்சுப் பொருள்களை வெளிப்படுத்தும் வாகனங்களின் கரும்புகை என்று காற்று கடுமையாக மாசுபட்டிருக்கிறது. இதனால் மனிதன் உயிர் வாழக் குறைந்தபட்சம் வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்பது இன்றியமையாததாகும்.

குறைந்தபட்சம் வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்பது கார்பன் டை ஒக்சைட் எடுத்துக்கொண்டு ஒக்சிசனையும் வெளிப்படுத்துகிறது. ஒக்சிசனை அதிகமாக வெளியிடுவதில் துளசியும், மூங்கிலும் பெரும் பங்கு வகிக்கின்றன.

இதில் துளசி பகலில் மட்டுமல்ல.. இரவிலும் கூட ஒக்சிசனை வெளியிடுகிறது. அதனால், வீட்டுத் தோட்டத்தில் இவைகளை அதிகமாக வளர்க்கலாம். ஒக்சிசன் சிலிண்டர்களை ஆளாளுக்கு மாட்டிக் கொண்டு சுற்றும் நாள் வரும் முன்பு மரங்களை வளர்த்து அதை இயற்கையாகப் பெறுவதே புத்திசாலித்தனம்.

இணையவள்.

# அனுராதபுரம் விவேகானந்த ம.வியின் காணியைக் கையகப்படுத்த முயற்சிகள்

## விவேகானந்த சபை குற்றச்சாட்டு

அனுராதபுரம், நவ, 21

அனுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயக் காணியை வேறு தேவைகளுக்காகக் கையகப்படுத்துவதை நிறுத்தவேண்டும். தற்போது ஒரு ஏக்கர் காணியை கணினி மத்திய நிலையத்தை உருவாக்க அரசு பொறுப்பேற்றசட்டவிதிகளுக்கு மாறாக கையகப் படுத்த ஒழுங்குகள் மேற்கொள் வதாக அறியக் கிடைத்ததையிட்டு மிகவும் அதிர்ச்சி யும் கவலையும் அடைகிறோம் என அனுராதபுரம் விவேகானந்த சபையினர் தெரி வித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் குறிப்பிடுகையில்,

அனுராதபுரம் மாவட்டத்தில் 69 தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் இந்துச் சிறார்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரே ஒரு வித்தியாலயமாக இருக்கும் அனுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலத்தை தொடர்ந்தும் இயங்க வைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வித்தியாலய நிர்வாகத்தின் குறுகிய மனப்பான்மையிலான நடவடிக்கையினால் தமிழ் மாணவர்களுக்குப் பல அநீதிகள் இழைக்கப்பட்டமையினாலும், எமது சமயத்தை இழிவுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டதனாலும் இவர்கள் தற்போது சிங்கள மொழியில் கல்வி கற்கின்றனர்.

இந்துக் கடவுள் படம் இல்லாத– இந்துமத வழிபாட்டிடம் இல்லாத இந்துப்பாடசாலை உலகத்திலேயே இதுவாகத்தானிருக்கும். தற்பொது மிகவும் குறைவான எண்ணிக்கையிலான தமிழ் மாணவர்கள் கல்வி கற்பதும் குறிப்பிடத்தக்கது. இதுவே நிர்வாகத்திற்கும் தேவையாயிருந்தது. அவ்வவ்போது இது சம்பந்தமாக எழுத்து மூலம் வடமத்திய மாகாண முதலமைச்சர், கல்வியமைச்சர், வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் உட்படப் பலருக்கு விண்ணப்பித்தோம். சம்பந்தப்பட்டவர்களுடன் நேரடி யாகவும் கலந்துரையாடினோம். இருந்தபோதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எதுவும் ஏற்பட வில்லை. பிரச்சினைகளும் தீர வில்லை.

தற்போது நகர்ப்புறப் பாடசாலைகள் இடநெருக்கடியை எதிர்நோக்கியுள்ளன. இப்படியான நடவடிக்கையினால் எமது வித்தியாலயமும் எதிர்காலத்தில் இடநெருக்கடியை எதிர்நோக்க வேண்டியேற்படும். இந்த வித்தியாலயக் காணிகள், விடுதிகள் போன்றவை எமது சபை இயங்காத காலத்தில் வேறு தேவைகளுக்காகக் கையகப்படுத்தப்பட்டதாக அறிகிறோம். அந்த நேரத்தில் பாடசாலை நிர்வாகத்தின் கவனவீனமே இன்னுமொரு கையகப் படுத்தலுக்கு வித்திட்டது என்பது எமது கருத்தாகும். நல்லாட்சி நடைபெறும் காலகட்டத்தில் இந்த வித்தியாலயக் காணியை வேறு தேவைகளுக்காக எடுப்பது இன மத நல்லிணக்கத்தை சீர்குலைத்து அனுராதபுரத்துக்கு மீள வரும் இந்துத் தமிழ் மக்களைத் தடுக்கும் ஒரு நட வடிக்கையாகவே கருதும் நாம் எமது கடுமையான எதிர்ப்பை இந்து மக்கள் சார்பாகத் தெரிவிக்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளனர். (து–ரி 6)

# நீக்கப்பட்டது வகுப்புத்தடை

மட்டக்களப்பு, நவ, 21

கிழக்குப் பல்கலைக்கழகக் கலை கலாசாரக் கற்கைநெறியின் இரண்டாம்,மூன்றாம்வருடமாணவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வகுப்புத் தடை நீக்கப்பட்டுள்ளது. நேற்று வெள்ளிக்கிழமை முதல் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்கள் வகுப்புகளுக்குச் சமுகமளிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ள தாகக் கிழக் குப் பல்கலைக்கழக பதிவாளர் ஏ.பகீரதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு வந்தாறுமூலை வளாகத்தின் இரண்டு மாணவர் குழுக் களிடையே ஏற்பட்ட கைகலப்பை அடுத்து மறுஅறிவித்தல்வரை கலை கலாசாரக் கற்கைநெறியின் இரண்டாம், மூன்றாம் வருட மாண வர்களுக்கு கடந்த மாதம் 20 ஆம் திகதி முதல் வகுப்புத்தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த மாணவர்கள் தொடர்பில் பல்கலைக்கழக மட்டத்திலான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதிலும், மாணவர்களால் முன்வைக்கப்பட்ட மேன்முறையீட்டைக் கவனத்திற்கொண்டு அவர்களின் வகுப்புத் தடையை நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் விடுதிகளில் இருந்து வெளி யேறியிருந்த மாணவர்களுக்கும் மீண்டும் விடுதிகளுக்கு திரும்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது–என்றார்.(து-10)

# உலக மீனவர்கள் தின நிகழ்வு இன்று யாழில்

உலக மீனவர் தினம் இன்று மு.ப 9.00 மணிக்கு யாழ். இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மேலுமொரு வழியாக நடைபெறும் இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (து–ரி 6)

# தவணைப் பரீட்சை மாற்றம்

யாழ்ப்பாணம், நவ 21

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த தரம் 9, 10, 12, 13 ஆகியவற்றுக்கான தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் தவணைப் பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (து–ரி6)

# உதவிப் பொருள் கையளிப்பு

வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் காட்டுயானைத் தாக்குதலால் உடைமைகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பிரதேச செயலாளரினால் உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் உன்னிச்சை, பன்சேனை, பாவற்கொடிச்சேனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த–அண்மையில் காட்டு யானைத் தாக்குதலுக்கு இலக்காகி வீடுகள் சொத்துக்கள் பாதிக்கப்பட்ட 15 குடும்பங்களுக்கு மேற்படி உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. வவுணதீவு அபிவிருத்தி நிதியத்தின் உதவியில் இவர்களுக்கான பொருள்களைப் பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் மற்றும் இடர் முகாமைத்துவ உத்தியோகத்தர் என்.சிவநிதி மற்றும் வவுணதீவு அபிவிருத்தி நிதியத்தின் உத்தியோகத்தர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு வழங்கினர். (து-10)

# ஏசியான் மாநாட்டை முன்னிட்டு கோலாலம்பூரில் பாதுகாப்பு பலம்



கோலாலம்பூர், நவ.21

மலேசியாவில் இன்று நடைபெறவுள்ள ஏசியான் உச்சிமாநாட்டின் நிமித்தம் மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உச்சிமாநாட்டில் ஆஸ்திரேலியா, சீனா, ஜப்பான், நியூசிலாந்து, ரஷ்யா, தென் கொரியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் கலந்துகொள்ளவுள்ளன.

தீவிரவாதத் தாக்குதல் நடைபெறக் கூடும் எனும் அச்சத்தின் காரணமாக, கோலாலம்பூரில் பாதுகாப்புப் பணியில் பெரும் தொகையான பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று உள்ளூர்ச் செய்திகள் தெரிவிக்கின்றன.

10 நாடுகள் கலந்து கொள்ளும் இந்த ஏசியான் உச்சிமாநாட்டில், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும் இந்தத் தலைவர்களின் பாதுகாப்பு நிமித்தம் மலேசியத் தலைநகரில் ஏறக்குறைய 2 ஆயிரம் ராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் மேலும் 2 ஆயிரத்து 500 ராணுவத்தினர் தயாராக உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மலேசியாவில் நடத்தப்படும் இந்த ஏசியான் உச்சி மாநாடானது 27 ஆவது உச்சிமாநாடு ஆகும். இந்த உச்சிமாநாடு நாளை நிறைவுபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# ஐ.எஸ். அழிக்கப்படும் சீனா கடும் எச்சரிக்கை

பீஜிங், நவ.21

சீன பணயக் கைதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளதை அடுத்து ஐ.எஸ் அமைப்பினர் அழிக்கப்படுவார்கள் எனச் சீனா எச்சரிக்கை செய்துள்ளது.

இது குறித்து தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ள சீன அரசு, கொடுமையான மரணம் என்று தெரிவித்துள்ளதோடு, இவர்கள் நீதிக்கு முன் நிறுத்தப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளது.

அதேபோல நோர்வே நாட்டைச் சேர்ந்த ஒருவரையும், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் கொலை செய்துள்ளனர். முன்னதாக இந்த இருவரின் சடலங்கள் எனக் கூறி அந்த ஜிகாதிக் குழு புகைப்படங்களை வெளியிட்டிருந்தது.

எனினும் எங்கே அல்லது எப்போது அந்தக் கொலை நடைபெற்றன என்பது பற்றி ஐ.எஸ். அமைப்பு எந்தவிதத் தகவலும் வெளியிடவில்லை.

மேலும் இது குறித்து சீனா வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், கொஞ்சமும் மனசாட்சி இல்லாமல் செயல்படும், தீவிரவாத அமைப்புகள், நிச்சயமாக ஈவு இரக்கமின்றி, ஒழிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)



பிரான்ஸ் தலைநகர் பரிஸில் அண்மையில் நடந்த தொடர் தாக்குதல்கள் காரணமாகப் பல பொதுமக்கள்
நேற்றுமுன்தினம் காலை பிரான்ஸ் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டு, அவன் த[illegible]யிருந்த
மோப்ப நாய் ஆகும். பதுங்கியிருந்த தீவிரவாதிகளின் இடத்தில் மோப்பம் பிடித்தபடி புகுந்ததில், அ
தாக்குதல் நடத்தப்படாமல் பல உயிர்களைக் காப்பாற்றியுள்ளது. பிரான்ஸில் இன்று பெரும்பாலான
அளவுக்கு உயர்ந்துள்ளது. பலரும் குறித்த நாய்க்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

# இஸ்ரேலிய உளவாளி விடுதலை

வொஷிங்டன், நவ.21

அமெரிக்காவால் கைது செய்யப்பட்ட இஸ்ரேலிய உளவாளி நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இது தொடர்பில் இஸ்ரேலிய அதிகாரிகளை அவதானத்துடன் இருக்குமாறு கூறியுள்ளார். ஜொனதன் பொலார்ட் எனும் நபரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பொலார்ட்டுக்கு 1987 ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இதனையடுத்து பொலார்ட் நேற்று விடுதலை செய்யப்படுவார் என அவரது வழக்கறிஞர் எலியட் லாவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த 60 வயது நிரம்பிய பொலார்ட், தான் விடுதலை அடைந்த பின்னர், தனது இரண்டாவது மனைவி வசிக்கும் இடத்திற்கு செல்லவுள்ளேன் என்று தெரிவித்திருந்தார். (ற)

# வெள்ளை மாளிகை கறுப்பாக்கப்படும்

## ஐ.எஸ். அமைப்பு எச்சரிக்கை

வொஷிங்டன் , நவ.21

அமெரிக்க வெள்ளை மாளிகையை நெருப்பு இன்றி கறுப்பாக்குவோம் என ஐ.எஸ்.தீவிரவாதிகள் மீண்டும் மிரட்டல் விடுத்துள்ளனர்.

பரிஸ் தாக்குதலை அடுத்து நியூயோர்க் நகரில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட உள்ளது என்று ஐ.எஸ்.தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது அமெரிக்க வெள்ளைமாளிகையைத் தகர்ப்போம் என ஐ.எஸ். தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்து அடுத்த காணொலிப் பதிவை வெளியிட்டுள்ளனர். ஐ.எஸ்.தீவிரவாத அமைப்புகளால் வெள்ளை மாளிகை கறுப்பாக மாறவுள்ளது என்றும், அதுவே அல்லாஹுவின் விருப்பம் எனவும் இந்த காணொலிப் பதிவில் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதிகளை மிரட்டிப் பதிவிட்டுள்ள தீவிரவாதிகள், அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாடுகளை தாங்களே வழி நடத்த உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர். பிரான்ஸ் நாட்டில் தொடங்கப்பட்ட இந்தத் தாக்குதலை அமெரிக்காவில் முடிக்க இருப்பதாகவும் அவர்கள் அதில் குறிப்பிட்டுள்ளனர். தங்களை ஆதரிப்பவர்கள் உலகெங்கிலும் இருப்பதாகத் தெரிவிக்கும் அவர்கள், அமெரிக்கா இனி தங்களிடம் இருந்து தப்ப முடியாது எனவும் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக ஐ.எஸ்.தீவிரவாதிகள் வெளியிட்ட காணொலியில் நியூயோர்க் மற்றும் வொஷிங்டன் நகர் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்படவுள்ளது என்று மிரட்டல் விடுத்திருந்தனர்.

அதேவேளை, பரிஸ் தாக்குதலை அடுத்து சிரியா மற்றும் ஈராக் பகுதியில் அமைந்துள்ள ஐ.எஸ். மறைவிடங்கள் மீது பிரான்ஸ் மற்றும் ரஷ்யா கடுமையான தாக்குதலை நடத்தி வருகின்றன. (ற-ரி4)

# நைஜீரியாவில் பெரும் எரி

அபுஜா, நவ.21

நைஜீரியாவில் பெரும் எரிபொருள் பற்றாக்குறை நிலவி வருகிறது. அதனால் நைஜீரியாவின் முக்கிய நகர்களில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனச் சாரதிகள் வரிசையில் பல மணிநேரம் காத்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசுடனான கட்டணச் சர்ச்சை காரணமாகப் பெற்ரோல் இறக்குமதியை இறக்குமதியாளர்கள்
நிறுத்தியதை அடுத்து இந்
கடி ஏற்பட்டுள்ளது என்று
நைஜீரியாவில் ஜனாதிப
கடந்த மே மாதம் பதவிக்
வாறானதொரு பெரும் எ
நிலவியமை இதுவே முத
ஆபிரிக்காவின் முக்கிய
நாடாக நைஜீரியா விளங்
போதிய சுத்திகரிப்பு வசதி

# மரத்தால் அமைக்கப்பட

அமெரிக்காவில் டென்னெஸீ நகரில் க்ராஸ்வில்லே கிராமத்தில் பீஹைவ்
வீதியில் உள்ள வீடு ஒன்று பலரது கவனத்தையும் ஈர்த்து வருகின்றது.
இந்த வீட்டின் உரிமையாளரும், அமைச்சருமான ஹோரஸ் புர்கஸ், கடவு
ளோடு தனக்கு ஏற்பட்ட தனிப்பட்ட ஒப்பந்த உரிமையின் அடிப்படையில்
இந்த வீட்டை அமைத்துக்கொண்டிருப்பதாக தெரிவித்து வருகிறார்.
இந்த வீடு 10 தளங்களைக் கொண்டுள்ளது. 3 ஆயிரம் சதுர மீற்றருக்கு
மேல் இடவசதி இருக்கிறது. பார்க்க பிரமிக்க வைக்கும் இந்த பிரம்மாண்
வீடு, உயிருள்ள 6 ஓக் மரங்களின் ஆதாரத்தில் அமைக்கப்பட்டுள்ளது
இந்த வீடு முழுவதுமே மரப்பலகைகளாலும் சட்டங்களாலுமே அமை
கப்பட்டுள்ளது என்று தெரிகின்றன. 1993ஆம் ஆண்டிலிருந்து இதுவரை
2 லட்சத்து 50 ஆயிரம் ஆணிகள் வீடு அமைக்கப் பயன்படுத்தப்பட்
டுள்ளன. இந்த வீடு முழுமையாக கட்டிமுடிக்க 14 ஆண்டுகள் ஆகியுள்ளன.
இது மரவீடு என அழைக்கப்பட்டாலுமே மரங்கள் இந்த வீட்டுக்கு தூண்
கள் போல மட்டுமே இருக்கின்றன. மொத்த வீடும் மரத்துக்கு வெளியிலே
அமைந்திருக்கிறது. கட்டி முடிக்க ஆன செலவு 12,000 டொலர் என்றும்
மதிப்பிடப்பட்டுள்ளது. (ற)




# பரிஸ் தாக்குதல் சூத்திரதாரி அபாவூத் கொல்லப்பட்டான்

## பிரான்ஸ் பொலிஸ் அறிவிப்பு

பரிஸ், நவ.21

கடந்த வெள்ளிக்கிழமை பரிஸில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான ஐ.எஸ். அமைப்பின் அப்தெல்ஹமீத் அபாவூத் கொல்லப்பட்டுள்ளார் என்று பிரான்ஸ் பொலிஸார் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர்.

பரிஸின் புறநகரான செய்ன்ட் டெனிஸில் உள்ள குடியிருப்புப் பகுதியொன்றில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது, தீவிரவாதிகள் பொலிஸாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து பொலிஸாரும் அவர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தினர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தின் போது, இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். மேலும் எட்டுப்பேர் கைது செய்யப்பட்டனர். அவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர்



களில் ஒருவராகவே அப்தெல்ஹமீத் அபாவூத் இருந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரைக் கண்டுபிடிக்கும்பொழுது அவரின் உடலில் தோட்டாக்கள் மற்றும் சில காயங்கள் என்பன இருந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது. அவரின் கைரேகையை வைத்தே அபாவூத் என தாம் உறுதி செய்துகொண்டனர் என்றும் பிரான்ஸ் பொலிஸார் குறிப்பிட்டிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தீவிரவாதிகளின் தொடர் தாக்குதல்களில் 130க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதுடன், 150க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். (ற)

...பாதுமக்கள் கொல்லப்பட்டனர். அந்தத் தாக்குதல்களை வழிநடத்திய சூத்திரதாரி, ...யிருந்த ...டத்தில் தாக்குதல் நடத்த பெரிதும் உதவியது டிசெல் என்கிற ...ததில், அவர்களின் துப்பாக்கிச் சூட்டில் முதலில் கொல்லப்பட்டதால் அடுத்த ...ம்பாலானவர்களுக்கு டிசெல் பல உயிர்களைக் காத்த கதாநாயகன் என்கிற (ற)

# தீவிரவாதத்தில் ஐ.எஸ்ஸையே ஓரம்கட்டியது போகோ ஹராம்

தக்கார், நவ.21

ஐ.எஸ். தீவிரவாத அமைப்பை விடவும் மிகப் பயங்கரமான அமைப்பாக ஆபிரிக்காவின் போகோ ஹராம் தீவிரவாத அமைப்பு உருவெடுத்துள்ளது. போகோ ஹராம் தீவிரவாத அமைப்பு ஆபிரிக்க நாடான நைஜீரியா மற்றும் அதன் அண்டை நாடுகளில் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. இந்த தீவிரவாத அமைப்பு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பை விடவும் பயங்கரமானது என்று உலகப் பயங்கரவாத குறியீடு தரவு ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட இந்த 2014 ஆம் ஆண்டுக்கன இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

உலகில் 80 சதவீதம் தீவிரவாதம் அதிகரித்துள்ளது. அந்த வருடத்தில் மட்டும் உலகளாவிய ரீதியில் 32 ஆயிரம் பேர் தீவிரவாதத் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர். இது வரை இல்லாத அளவுக்கு கடந்த 15 வருடங்களில் தீவிரவாதம் பெரிய வளர்ச்சியடைந்துள்ளது. பாகிஸ்தான், சிரிய, நைஜீரியா மற்றும் ஈராக் போன்ற நாடுகளில் 78 சதவீதம் தீவிரவாத தாக்குதல்கள் இடம்பெறுகின்றன.

ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களில் சென்ற ஆண்டு மட்டும் உலகின் பல்வேறு இடங்களில் 6 ஆயிரத்து 073 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் அதே நேரம் போகோ ஹராம் நடத்திய தாக்குதல்களினால் 6 ஆயிரத்து 664 பேர் உயிரிழந்துள்ளனர். உலகில் நடக்கும் தீவிரவாத தாக்குதல்களில் பாதியளவுக்கு மேல் போகோ ஹராம், ஐ.எஸ். தீவிரவாதிகளால் தான் நடத்தப்படுகிறது. – என்றுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு நைஜீரியாவில் போகோ ஹராம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குலில் 50 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். தொடர்ந்து நைஜீரிய மக்கள் எச்சரிக்கையோடு இருக்குமாறு அந்த நாட்டுப் பிரதமர் மூஹம்மது புகாரி அறிவுறுத்தியுள்ளார்.

அண்மையில், தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலை அந்த நாடு துரிதப்படுத்தியிருந்த போதிலும் போகோ ஹராம் தீவிரவாதிகளின் திடீர் தாக்குதலை தடுத்து நிறுத்த முடியவில்லை. (ற– ரி4)

# சிரியாவில் தேர்தல் சாத்தியமே இல்லை

### ஜனாதிபதி அல் அசாத் தெரிவிப்பு

டமஸ்கஸ், நவ.21

சிரியாவில் தற்பொழுது நிலவுகின்ற சூழ்நிலையில், அங்கு தேர்தல் நடத்தி ஆட்சி மாற்றமொன்றை எதிர்பார்ப்பது சாத்தியமற்ற விடயம் என்று அந்நாட்டு ஜனாதிபதி பர் அல் அசாத் தெரிவித்துள்ளார்.

இத்தாலி தொலைக்காட்சி ஒன்றுக்கு



கருத்து தெரிவிக்கும்பொழுதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

துருக்கி, சவூதி அரேபியா, கட்டார் போன்ற இன்னும் பல வெளிநாடுகளின் உதவியுடனேயே ஐ.எஸ். தீவிரவாதிகள் செயற்பட்டு வருகின்றனர். அவர்களின் உதவியுடன் பயிற்சி பெற்றவர்களே சிரியாவில் தாக்குதல் நடத்துகின்றனர்.

முழு உலகையும் அச்சுறுத்தி வரும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் ... வதற்கு சிரியா ஒரு களமாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்... இதனை நாம் முற்றாக ...கின்றோம்.

சிரியாவின் ஒரு பகுதி தற்பொழுது தீவரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்த நிலையில் சிரியாவில் தேர்தல் மூலம் இடைக்கால ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவரும் ... வடிக்கையை முன்னெடுக்க ...யாது. – என்றார்.

# எரிபொருள் தட்டுப்பாடு

...அடுத்து இந்த எரிபொருள் நெருக்...ளது என்று கூறப்படுகிறது.

...ல் ஜனாதிபதி முஹம்மது புஹாரி ...தம் பதவிக்கு வந்த பின்னர் இவ்...ரு பெரும் எரிபொருள் தட்டுப்பாடு இதுவே முதல் தடவையாகும்.

...ன் முக்கிய எண்ணெய் ஏற்றுமதி ...ஜீரியா விளங்குகின்றது. ஆனால் ...கரிப்பு வசதியின்மை காரணமாக நைஜீரியா பெற்றோலை இறக்குமதி செய்து வருகிறது. மானிய விலையில் பெற்றோலை வழங்குவதற்கு இறக்குமதியாளர்களுக்கு அரசு 2.1பில்லியன் அமெரிக்க டொலர் வழங்குவதற்கு இம்மாத ஆரம்பத்தில் ஒப்புதல் அளித்திருந்தது.

ஆனால் அதனை வழங்குவதற்கு நாடாளுமன்ற ஒப்புதல் அளிக்கப்படாத நிலையில் நிதி வழங்கத் தாமதமாகி வருகின்றது. (ற)

# ...ட பிரமாண்டமான மாளிகை



...ல் பீஹைறவ் ...ருகின்றது. ...ர்கஸ், கடவு ...ப்படையில் ...ருகிறார். ...மீற்றருக்கு ...பிரம்மாண் ...பட்டுள்ளது ...மே அமைக் ...து இதுவரை ...பபடுத்தப்பட் ...கியுள்ளன. ...டுக்கு தூண் ...வெளியிலே ...லர் என்றும் (ற)

# இரசாயன தாக்குதல் ஐ.எஸ். நடத்தக் கூடும்

## பிரான்ஸ் பிரதமர் எச்சரிக்கை

பரிஸ், நவ.21

இஸ்லாமிய தேச தீவிரவாதிகள் என்று அழைக்கப்படும் ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து இரசாயன அல்லது உயிரியல் தாக்குதலை எதிர்கொள்ள நேரிடும் என்று பிரான்ஸ் பிரதமர் மனுவல் வோல்ஸ் எச்சரித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் அவசரகால நிலைமையை நீடிக்கச் செய்யும் விவாதங்கள் நடைபெற்றபோது பிரான்ஸ் பிரதமர் மனுவல் வோல்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இந்தத் தாக்குதல் அச்சுறுத்தல் குறித்த எச்சரிக்கையை விடுத்தார்.



இதேவேளை பயங்கரவாதிகளின் பரிஸ் தாக்குதல்களுக்குப் பின்னர் பெல்ஜியத்தின் தலைநகர் ப்புருஸல்சில் தாக்குதல்களோடு தொடர்புடைய பிலால் ஹட்பி மற்றும் சலாஹ் அப்டெல்சலாம் ஆகியோரைத் தேடி பெல்ஜியப் பொலிசார் 6 வீடுகளில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

கந்தப்பு பரமேஸ்வரன்



# வடக்கு மாகாண சபையும் துறைசார் உற்பத்தி நிறுவனங்களின் அபிவிருத்தித் தேவையும்

இலங்கையில் நீண்ட காலமாக நிலவிவந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வாக பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டன. அரசியல் அமைப்பு ரீதியாக டொனமூர் அரசியல்திட்டம், சோல்பரி அரசியல் திட்டம், என்பனவும் அரசியல் அமைப்புக்குப் புறம்பாக பண்டா–செல்வா ஒப்பந்தம், டட்லி–செல்வா ஒப்பந்தம், மாவட்ட அபிவிருத்திச் சபைகள் என்பனவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும். இவை அனைத்தும் தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யாத காரணத்தால் தமிழர்கள் தமது விடுதலைக்கான தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து, ஜனநாயக ரீதியில் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தினர். ஈற்றில் ஆயுத ரீதியான போராட்டமாகப் பரிணமித்திருந்தது. இந்த நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்திய அரசு முன் வந்திருந்தது. இந்திய அரசின் வற்புறுத் தலின் பெயரில் 1987 ஜூலை 29 ஆம் திகதி அப்போதைய இலங்கை–ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையில் கொழும்பில் வைத்து இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசியல் அமைப்புக்கு கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் கீழ், மாகாண சபை முறை முதன் முதலாக உருவாக்கப்பட்டது. இதன் பிரகாரம் இலங்கையில் 7 மாகாணங் களாகவும் வடக்குகிழக்கு இரண்டும் கூடுதலாக தமிழர்கள் வாழ்கின்ற காரணத்தால் இணைந்த வடகிழக்கு மாகாணம் என எட்டு மாகாணங்களைக் கொண்டதாக மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டது.

இத்தகைய பின்னணியில் வடக்குகிழக்கு மாகாணங்கள் இணைந்ததான இந்தத் திட்டத்துக்கு முதலமைச்சர் தலைமையிலான நான்கு அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையும் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு உருவாக்கப்பட்டது. ஆனால்துரதிர்ஷ்டவசமாக அப்போதைய அரசின் அசமந்தப்போக்கினாலும் அதிகாரப் பரவலாக்கமற்ற தன்மையின் காரணமாகவும் இந்த மாகாண சபை செயலிழந்து போனது. 2009 ஆம் ஆண்டுஉள்நாட்டுப்போர்முடிவுக்குகொண்டு வரப்பட்டதும், 2011 ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு9மாகாணசபைகளாகஅப்போது ஆட்சியிலிருந்த அரசு ஆக்கிக் கொண்டது. இதன் நிமித்தம் 2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்திய வேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2/3 பெரும் பான்மை பலத்துடன் ஆட்சியைக் கைப் பற்றியதுடன் முதலமைச்சரான முன்னாள் பிரதம நீதியரசராகிய க.வி.விக்னேஸ்வரனின் கீழ் விவசாயம், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் மீன்பிடித்துறைகளாகிய நான்கு அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையாக இந்த மாகாண சபையானது இரண்டு வருடகாலம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஏறக்குறைய மூன்று தசாப்த காலமாக நிலவிய போராட்ட காலத்தில் பல்வேறு உயிரிழப்புக்கள், உடைமையிழப்புக்கள், இடப்பெயர்வுகள், உறவுகள்பிரிவு, அகதிவாழ்க்கை, சிறை வாழ்க்கை எனச் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வந்த மக்களிடத்திலே இந்த மாகாண சபையினூடாக தமது அன்றாடப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை அவர்களின் மனங்களிலிருந்து விடுபடுமளவுக்கு சென்றுள்ளது. குறிப்பாக இரண்டு வருடத்தினுள் இந்த மாகாண சபையால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளும் அபிவிருத்தித் திட்டம் சார்ந்த முன்மொழிவுகளும் எழுத்துருவில் மட்டுமே காணப்படுகின்றதே தவிர, செயற்பாட்டு ரீதியான முன்னெடுப்புகளாக அமையவில்லை. எனவே, எமது மாகாணத்தில் காணப்படும் பல்வேறு தொழில் துறை சார்ந்த நிறுவனங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் கிடைக்கும் வளங்களைக் கொண்டு திட்டமிட்ட வகையில் முன்னெடுப்பதற் கான முன்னகர்வுகளை மேற்கொள்வது காலத்தின் தேவையாகும்.

மாகாண சபைகளுக்கெனப் பகிர்ந்தளிக்கப்பட்ட முக்கிய விடயங்களுள் ஒன்று ஒரு மாகாணத்தினுள் அல்லது மாவட்டத்தினுள் விவசாயத்திட்டத்தைத் தயாரித்து ஒழுங்குபடுத்தல், வளங்களையும் சேவைகளையும் ஒழுங்குபடுத்தல் விளைபொருள்களை சந்தைப்படுத்தல் என்பவற்றுடன் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பாக ஒரு தேசியக் கொள்கையை உருவாக்கி அறி முகப்படுத்தல் என்பனவாகும். இது மத்திய அரசுக்குரியதாயி னும் இந்தக் கொள்கைக்கு உட்பட்டு தமது சொந்தப்பகுதியிலுள்ள தொழில்சார் அமைப்புக்களை நிறுவுவதற்கும் மேம்படுத்துவதற்கும் மாகாண சபை அதிகாரத்தை கொண்டிருக்கின்றது. இதனடிப்படையில் வடமாகாண மாவட் டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே காணப்பட்ட தொழில்சார் துறைகளைப்புனரமைப்பதுடன்புதியதொழில் துறைகளைக் கண்டறிந்து செயற்படவேண்டியுமுள்ளது.

விரிவடைந்து வரும் பொருளாதாரமொன்றின் தேவைகளுக்குப் பொருந்தக்கூடிய வகையில் நாட்டினது பௌதிக வளங்களைத் திட்டமிட்டவாறு பயன்படுத்துவதை உறுதி செய்தல் அரசினதும் மக்களினதும் தார்மீகக் கடமையாகும். இந்தத் தேவைப்பாட்டை நிறைவு செய்யும் பொருட்டு வடக்கு மாகாணத்தில் திட்டமிடப்பட்டிருக்கும் தொழில்துறை சார்ந்த செயற்பாட்டுத் திட்டங்கள், மானிட மூலவள அபிவிருத்திக்கு அடிப்படைக் கட்டமைப்பில் பங்களிப்பை வழங்குவது மட்டுமல்லாமல் பிரதேச வளங்களின் பயன்பாடு இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்பு, துணைச் சேவைகளின் வளர்ச்சி என நாட்டினது பொருளாதார வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பை வழங்கமுடியும். எனவே வடமாகாணத்தில் ஏற்கனவே இயங்கி வந்த பின்வரும் தொழில்துறை சார்ந்த நிறுவனங்களையும் புதிய தொழில்துறை நிறுவனக் கட்டமைப்புக்களையும் உருவாக்கிக் கொண்டு எமது பிரதேசங்களின் துறை சார்ந்த அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு முன்வர வேண்டும். இதற்கான ஆலோசனைகள் வழிகாட்டல்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வவுனியா வளாகம் மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் பல்துறை சார்ந்த பீடங்களையும் துறைகளையும் தன்னகத்தே கொண்ட யாழ். பல்கலைக்கழகத்தின் நிபுணத்துவ ஆலோசனை கள், உதவிகளையும் பெற்றுக் கொள்வதனால் முழுமையான துறை சார்ந்த அபிவிருத்தியைப் பெற்றுக்கொள்ளலாம் . இதற்கான பின்வரும் தெரிவு செய்யப்பட்ட திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன் பிரதேசத்தில் 50 வருடங்களுக்கு மேலாக இந்தத் தொழிற்சாலை இயங்கி வந்தது. 1990 ஆம் ஆண்டின் பின்னர் இது செயலிழந்து போனது. தற்போது 2011 ஆம் ஆண்டு மீள ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் இன்றுவரை செயற்பாடு அற்றிருக்கின்றது. எனவே துரித கதியில் இந்தத் தொழிற் சாலையை மீள ஆரம்பித்தல் வேண்டும்.

2. உப்பு உற்பத்தி நிறுவனங்கள்
மன்னார், மாந்தை, யாழ்ப்பாணம், செம்மணி, ஆனையிறவு ஆகிய பிரதேசங்கள் உப்பு உற்பத்திக்கான புவியியல் காரணிகளைக் கொண்ட பிரதேசங்களாகக் காணப்படுகின்ற போதிலும், இன்றுவரை உப்பு உற்பத்தி நடை பெறாமல் உள்ளது. எனவே கால தாமதம் இன்றி உப்பு உற்பத்திச் செயற்பாட்டை மீள ஆரம்பித்தல் வேண்டும்.

3. காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை: இதுவும் 1990க்குப் பின்னர் செயலிழந்து காணப்படுகின்றது. இதனை மீளப் புனர மைத்து குடாநாட்டுக்குத் தேவையான சிமெந்து உற்பத்திகளை மேற்கொள்ள முடியும்.

4. கைத்தொழில் பேட்டைகளை விஸ் தரிப்புச் செய்தல்: தற்போது அச்சுவேலியுள்ள கைத்தொழில் நிறுவனத்தில் மட்டும் தொழில்சார் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதனை மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்கும் விஸ்தரித்து கைத்தொழிற் பேட்டைகளை உருவாக்கிக் கொள்ள முன்வருதல் வேண்டும்.

5. விவசாயம் சார்ந்த முன்னெடுப்புக்கள்: கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் விவசாயப் பண்ணைகள் அமைத்தல். இதில் கால்நடை வளர்ப்பு, மண் ஆராய்ச்சி மற்றும் நவீன விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்தல்.

6. மீன்பிடித்துறை சார்ந்த நிறுவனங்களில் படகு, வலை தயாரிப்புத் தொழிற் சாலைகள், மீன்பிடித்துறைமுகம், பதனிடல் நிலையங்கள், மீன்வளர்ப்பு, இறால் வளர்ப்புத்திட்டங்கள் என்பவற்றுடன் துறை சார்ந்த ஆராய்ச்சி அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்தல்.

7. துறைமுகங்கள் அபிவிருத்தியில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் துறைமுகங்களைச் சர்வதேச தரத்துக்கு ஏற்ப புனரமைத்து சர்வதேசக் கப்பல்களின் வருகையை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

8. பனைவளம் சார் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் பனம்பொருள் உற்பத்தித் தொழிற்சாலைகளைக் கிராமங்கள்தோறும் அமைத்து, இந்தத் துறைசார்ந்த பொருள்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்தல்.

9. நீர்வேலியில் அமைந்துள்ள கண்ணாடித் தொழிற்சாலையை மீள்புனரமைத்து கண்ணாடிகள் உற்பத்தியை மேற்கொள்ளல்.

10. ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள ஓடு உற்பத்தித் தொழிற்சாலையை மீள ஆரம்பித்து மட்பாண்ட உற்பத்திகளையும் மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

11. ஆடை தயாரிப்பு நிலையங்களை ஆரம்பித்து, குறிப்பாக பெண்களுக்கான தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ளல்.


12. பழங்கள் பதனிடும் நிலையங்களில் பழங்கள் பதனிடல் செயற்பாடுகளை ஆரம்பித்தல்

என்பன அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய துறைசார்ந்த அபிவிருத்தித் திட்டங்களாகும்.

அரை நூற்றாண்டு காலமாக எமது மாகாணத்தில் ஏற்பட்ட போர்ச்சூழல் மற்றும் சுனாமிப் பேரலை இடர் என்பன காரணமாக பொருளாதாரம் சார் செயற்பாடுகள் சீரழிந்திருப்பதுடன் மீளக்கட்டியெழுப்ப முடியாத அளவுக்கு அழிந்து போயுள்ளன. அழிவுகளிலிருந்தும் சிதைவுகளிலிருந்தும் எமது பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் தார்மீக கடமை எம்முன்னே காத்துக் கிடக்கின்றது. 2ஆம் உலகப்போரில் பெரிய அழிவைச் சந்தித்த யப்பான் இன்று உலக கைத்தொழில் வல்லரசாக மாறியதைப் போலஎமது வடமாகாணமும் மீள்கட்டியெழுப்பப்படுதல் அவசியமாகின்றது. இதற்கு அரச உதவிகள், வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர்ந்த அமைப்புக்கள் மற் றும் சர்வதேச நாடுகளின் உதவிகள், தன்னார்வ நிறுவனங்களின் உதவிகளைக் கொண்டு புனரமைப்பு செய்யப்படுமாயின், எமது பிரதேசவளங்களை முழுமையாகப்பயன்படுத்துவதுடன் வேலை வாய்ப்புக்கள், தொழில் துறை நிறுவனங்களின் வளர்ச்சி என்பன அதிகரித்து மொத்த உள்நாட்டு உற்பத்திக்குக் கணிசமான பங்களிப்பை வடமாகாணம் வழங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

# தம்பட்டம் வேண்டாம்

## வாசகர் திருமுகம்



உலகில் மிகச்சிறந்த வங்கி நாங்கள்தான் என தம்பட்டம் செய்யும் ஒரு வங்கியால் நான்பட்ட துன்பியல் உண்மைச் சம்பவத்தைக் கூறி இப்படியான நிலைமை வேறு மக்களும் அனுபவிக்கக்கூடாது என்கின்ற நல்ல எண்ணத்துடனே இதனை எழுதுகின்றேன்.

சென்ற வியாழனன்று (05.11.2015) நான் கொழும்பு நகர் போயிருந்தேன். எனது கடைக்குத் தேவையான பொருள்களை வாங்கப் போயிருந்தேன். நான் கொண்டு சென்ற பணத்துக்கு அதிகமாக பொருள்கள் வாங்கிவிட்டேன். முற்பகல் 11.50 மணிக்கு ரயிலில் வருவதாக முடிவு செய்து பொருள்களை தூக்க முடியாமல் வந்தேன். ரயிலுக்குத் தேவையான ரிக்கற் பணம் என்னிடம் இல்லை. என் கையில் தனியார் வங்கி ஏ.ரி.எம். அட்டை இருந்தது. ரயில்வே ஸ்ரேசனில் வங்கியின் ஏ.ரி.எம். தானியங்கி நிலையம் இருந்தமையால் அதிலே கொஞ்சம் பணம் எடுக்கலாமென நம்பி வந்தேன். ரயில் புறப்படும் நேரம் மு.ப. 11.50 என்பதால் 11.20 மணிக்கே வந்தேன்.

காலை உணவு கூடச் சாப்பிடவில்லை. பணத்தை எடுத்துக்கொண்டு ஏதாவது ஒரு சிற்றுண்டி உண்ணலாமென அவசர அவசரமாக ரயில் நிலையம் வந்து பொருள்களை இறக்கிவிட்டு தனியார் வங்கி ஒன்றின் ஏ.ரி.எம். அறைக்குள்ளே போன போது ஏ.ரி.எம். தொலைக்காட்சி வெளிச்சமாக இருந்தது. ஆனால் எது வுமே ஓடவில்லை. நல்லவேளை எனது அட்டையை உள்ளே செலுத்தவில்லை. அதில் எந்தவொரு பட்டனும் வேலை செய்யவில்லை.

நேரம் மு.ப. 11.30 மணி ஆகிவிட்டது. 20 நிமிடத்துக்குள்ளே பணத்தை எடுத்தாலே அந்த ரயிலில் நான் யாழ். வரமுடியும். இல்லை எனில் பகல் முழுவதும் வீணே தெருவில் நின்று இரவு தான் வர முடியும். நல்லவேளை ஒரு முஸ்லிம் ஓட்டோ உரிமையாளர் எனது நிலைமையைக் கண்டு தன்னுடைய ஓட்டோவில் என்னை கூட்டிச்சென்று வேறு இடத்தில் உள்ள ஏ.ரி.எம். அறையில் பணம் எடுக்க வைத்து, மீண்டும் ஸ்ரேசன் கொண்டுவந்து விட்டார். அதற்கான கூலி 150 ரூபா என வாங்கிக் கொண்டார். அது அவரது தொழில் விடயம்.

நேரம் போதாமையால் உண்ணாமல் அவசரமாக 11.45மணிக்கு ரயிலில் ஏறி வந்தேன். முக்கியமான இடங்களான ரயில்வே, விமான நிலையம், பஸ் நிலையம் இந்த இடங்களில்உள்ள ஏ.ரி.எம். அறையை வேலை செய்வதை அடிக்கடி வங்கியாளர்களின் கவனிப்பு வேண்டும். சாதாரண இடமானால் ஓரளவு சமாளிக்கலாம். இப்படியான இடங்களை கவனியாது இருப்பதால் எனக்குஎவ்வளவுசிரமமும்மனஉளைச்சலும் தெரியுமா?

நான் தனியாகப் போனதால் சமாளித்தேன். குடும்பமாக பிள்ளைகளுடன் போய் இருந்தால் எப்படி இருக்கும்? வெளிநாட்டில் இருந்து வரும் மக்களும் என்ன பாடு படுவார்கள். இந்த வங்கி மட்டுமல்ல ஏனைய வங்கியாளர்களும் அடிக்கடி தானியங்கி வேலை செய்கின்றதா என பரிசீலிக்க வேண்டும். அப்போதுதான் ஏனைய மக்களும் அவஸ்தைப்படாமல் வங்கிக்கு நல்ல பெயர் கிடைக்கும். சாதாரண ஊர் என்றால் பரவாயில்லை. தலைநகரான கொழும்பு நகரில் அதுவும் பல ஊர் மக்கள் கூடும் கோட்டை ரயில் நிலையத்தில் ஏ.ரி.எம். வேலை செய்யாமல் இருப்பது எவ்வளவு கேவலம்! எனவே மக்கள் கவர விளம்பரம் செய்வதை விட்டு வாடிக்கையாளர் நலன்கருதி இப்படியான கவனக் குறைவுகளை சீர்செய்து மக்களால் புகழ்பாட முனையுங்கள். இதனை சகல வங்கியாளர்களும் ஏற்று சீர் செய்து கொள்வார்களென நம்புகின்றேன். வங்கியைக் கேவலப்படுத்த இதனைச் சொல்லவில்லை. அவர்களதுகவனக்குறைவைச்சீர்செய்யத்தூண்டுகின்றேன். குறையெனில் மன்னிக்கவும். தவறை இனியாவது சீர்செய்யுங்கள். அப்போதுதான் மக்கள் உங்களை நம்புவார்கள். என்னைப்போல் எந்த மக்களும் துன்பப்பட வைக்காதீர்கள். இது அன்பான வேண்டுகோள்.

**- யாழ். வீமன்.**


# மழைநீர் தேங்கி போக்குவரத்துச் சீர்கேடு

கந்தர்மடம் -பலாலி வீதியில் ஆரம்பமாகி அரசடி வீதியில் முடிவடைகின்ற இந்து மகளிர் கல்லூரி வீதி, போக்குவரத்தில் முக்கிய இடம் வகிக்கின்றது. இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, இந்து மகளிர் கல்லூரி, இந்து ஆரம்பப் பாடசாலை, இந்துக் கல்லூரி, நாவலர் வித்தியாசாலை, வைத்தீஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் பயில்கின்ற மாணவர்கள் பாடசாலை ஆரம்பமாகின்ற நேரத்திலும் பாடசாலை முடிவுறுகின்ற நேரத்திலும் இந்த வீதியினூடாகவே போக்குவரத்துச் செய்கின்றார்கள்.

இந்த வீதியின் ஆரம்ப இடமாகிய பலாலி வீதியிலிருந்து சிறிது தூரத்துக்கு மழை காலங்களில் வெள்ளம் தேங்கி போக்குவரத்துச் செய்கின்ற மாணவர்களுக்கும், ஏனையவர்களுக்கும் பல இன்னல்களை ஏற்படுத்துகின்றன. இந்த வீதியின் ஆரம்பத்தில் அமைந்துள்ள விறகு விற்பனை நிலையம், அரைக்கும் ஆலை, அதனுடன் இணைந்த பல்பொருள் விற்பனை நிலையத்துக்கும் வருகின்றவர்கள் பல்வேறு சிரமங்களை அனுபவிக்கின்றார்கள். எனவே, நீண்ட காலமாகச் செப்பனிடப்படாத இந்த வீதியின் முற்பகுதியைப் புனரமைப்புச் செய்து பலரும் நன்மை பெறச் செய்யவும். சம்பந்தப்பட்டவர்களுக்கு எனது பணிவான சமர்ப்பணம்.

- இ.இராஜேந்திரா
சமாதான நீதிவான் (தீவு முழுவதும்)

## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# வீதி விபத்துக்களால் இழக்கப்படும் உயிர்கள்

பத்தி எழுத்து

இழந்த இழப்புக்கள் போதாதென்று இப்போதும் இழந்து கொண்டிருக்கிறோம் உறவுகளையும் அங்கங்களையும் விபத்துக்களில். அண்மைக்காலமாக அளவு கணக்கின்றி அதிகரிக்கின்றன வீதி விபத்துக்கள். எதிர்பாராமல்தான் ஏற்படுகின்றன இந்த விபத்துக்கள். ஆனால் கொஞ்சம் நிதானித்தால் நிச்சயமாகத் தவிர்க்கலாம்.

ஏற்படும் விபத்துக்களில் இவற்றில் பெரும்பாலானவை வீதி விபத்துக்கள் மற்றும் கவனமின்மையால் வீடுகளில் ஏற்படும் விபத்துக்கள்தான். நாட்டில் திடீர் விபத்துக்கள் காரணமாக பாதிக்கப்படுபவர்களில் பெரும்பாலானவர்கள் 20 தொடக்கம் 50 வயதிற்குட்பட்டவர்கள் எனச் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது.

வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு உரிய தரப்பினர் உரிய சேவையை வழங்கிக்கொண்டுதான் உள்ளனர். நாங்கள் அவர்கள் அறிவுறுத்தலை பின்பற்றினாலே விபத்துக்களில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம். நம்மிடம்தான் அடுத்தவர் சொல்வதில் உள்ள நன்மைகளைச் செவிமடுக்கும் எண்ணமே இல்லையே...! இது கவலைக்குரிய விடயம்தான்.

பொதுமக்கள் இவ்வாறான விபத்துக்களைத் தடுப்பதற்கு அவதானத்துடனும் பொறுப்புடனும் செயற்படவேண்டியது அவசியம். குறிப்பாக வீதிப் பாதுகாப்பு என்பது இன்று மிகமிக அவசரமானதும் அவசியமானதுமாகின்றது. ஒரு [illegible] விபத்துக்குள்ளாகின்றனர்? ஒரு நாளில் உங்கள் கிராமத்தில் எத்தனை பேர் விபத்துக்கு உள்ளாகின்றனர் என்று கணக்கிட்டாலே ஒரு நாளுக்குக் குறைந்தது 5 பேராவது உள்ளடங்குவர். அப்படியாயின் உங்கள் நகரத்தில், மாவட்டத்தில், மாகாணத்தில், நாட்டில்;....? வேகம் விவேகம் இல்லை என்பதை பல இடங்களில் கேட்டிருக்கின்றோம். ஆனால் பின்பற்றியுள்ளோமா?.

பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலிச் செய்திகள் என தினமும் ஊடகங்கள் மூலமாகவும் விபத்துச் செய்திகளை அறிகிறோம். அறிந்து கொள்வதோடு சரி. எந்த விடயமும் உங்களுக்கு நடக்கும் வரை அது ஒரு சம்பவம்தான். உங்களுக்கு ஏற்படும்போது அதன் தாக்கம், இழப்பு, வலி தெரியும். அதன் பின்னர் நிதானித்து என்ன பயன்?

ஏன் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று யோசித்தால் கூட 'நான் சரியாகத்தான் சென்றேன். எதிர்ப்பக்கத்தில் வந்தவர்தான் என்னில் மோதிவிட்டார்' என்று அடுத்தவரில் குற்றம்சாட்டிவிட்டு நகர்வோம். என்ன இருந்தாலும் சாரதிகளின் கவனவீனம், பாதசாரிகளின் கவனவீனம், வீதிப் பாவனை தொடர்பான அறிவு குறைவாக உள்ளமை போன்றவைதான் விபத்துக்களுக்குக் காரணம்.

அண்மையில் நடைபெற்ற வீதி விபத்துக்கள் தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்வொன்றில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உபயோகமான பல கருதுக்களை-அறிவுரைகளை வழங்கியிருந்தார். அவர் தனது உரையில், பரிச்சயமில்லாத வாகனப் பாவனை, வீதி ஒழுங்கு பற்றி முறையாக அறிந்திருக்காமை, வாகனத்தைச் செலுத்தும்போது தொலைபேசிப் பாவனை, வீதியில் போதிய கவனம் செலுத்தாது வாகனத்தைச் செலுத்துதல், மிதமிஞ்சிய வேகத்தில் வாகனத்தை செலுத்துதல் போன்றனவே விபத்துக்களுக்கு முக்கிய காரணம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

காப்பெற் வீதியைக் கண்டதும் வாகனம் ஓட்டுபவர்கள் நிதானத்தை குறைத்துக்கொண்டார்கள். கண் மண் தெரியாமல் பறக்கின்றன வாகனங்கள் மட்டுமல்ல, உயிர்களும்தான்.

முதலமைச்சர் தன் உரையில் 'முன்னர் ஆண் - பெண் இருபாலாரும் சைக்கிள்களைத் தமது பிரயாணத்துக்குரிய வாகனங்களாகப் பயன்படுத்தினர். இதன் காரணமாக விபத்துக்கள் குறைவாகவே காணப்பட்டன. மக்களின் தேக சுகமும் பாதுகாக்கப்பட்டு வந்தது. இன்று வீதிகள் திருத்தப்பட்டு காப்பெற் வீதிகள் அமைக்கப்பட்டு அளவுக்கதிகமான வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டு அவை அதிவேகத்தில் பயணிக்கத் தொடங்கியுள்ளன. இன்று அளவுக்கதிகமான வாகனங்கள் தொடர் விபத்துக்களுக்குக் காரணமாக அமைந்துள்ளன-என்றார். அதுதான் உண்மையும்.

வீதிப்பாதுகாப்புத் தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு அவசியம். இழப்பு ஏற்பட்ட பின்னர் என்ன செய்தும் இழப்புக்களை ஈடுசெய்ய முடியாது. விபத்துக்கள் நேரமுன் கவனமாக இருந்து கொள்வதே விபத்துக்களைத் தடுக்க வழி.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 - 492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021 - 493 1111
விநியோகம் : 021 - 493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழரைப் பீடித்துள்ள பீடை அகல எத்தனை காலந்தான் பிடிக்கும்?

வடக்கில் பணிபுரியும் வனபரிபாலனத் திணைக்களத்தின் அதிகாரிகளில் சிலரைத் தம்மால் கட்டுப்படுத்த இயலவில்லை என்று கவலை தெரிவித்துள்ளார் முல்லைத்தீவின் அரச அதிபர். இது குறித்து வடக்குமாகாண முதலமைச்சரின் கவனத்துக்குக்கொண்டு வந்துள்ளார் அரச அதிபர்.

எனினும் மத்திய அரசின் கீழ் இயங்கும் திணைக்களத்தை, மாகாண முதல்வரால் எந்த வகையிலும் கட்டுப்படுத்த இயலாது. வன பரிபாலனத் திணைக்களத்தில் வடமாகாண சபையைச் சாராதவர்களே அதிக எண்ணிக்கையில் மத்திய அரசினால் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இங்குள்ள இயற்கை வளங்கள் குறித்து அக்கறை காட்டுவதில்லை. இது குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டு வந்திருக்கிறேன் என்று முதலமைச்சர் மாகாண சபைக் கூட்டம் ஒன்றில் வெளிப்படுத்தி உள்ளார்.

மத்திய அரசின் திட்டங்களை நடைமுறைப்படுத்தவே அரச அதிபர்கள் மற்றும் அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்கள். அதே வேளை அரச கட்டமைப்புக்கள் வீரியத்துடனும், மக்களின் தேவைகளை நிறைவேற்றவும் பணியாற்ற வேண்டும் என்பது நியமம்.

அதனைச் செயற்படுத்தும் பொருட்டு அரச நிர்வாகங்களுக்கு நிர்வாக ஒழுங்கு விதிகள் (ஏ.ஆர்) நிதி ஒழுங்கு விதிகள் (எவ்.ஆர்) என்பன மிக நீண்ட காலமாக வகுக்கப்பட்டு நடைமுறையில் உள்ளன. அவரவர் தமது கடமைகளைப் பழுதின்றிச் செய்வதற்கு, நிர்வாகக் கட்டமைப்புக்கு அமைவாக செயற்படத் தக்கவாறே அரச ஆளணியினர் நியமிக்கப்படுகின்றனர். அவ்வாறு இருந்தபோதிலும் --

அதிக அளவுமிக்க அதிகாரம் உள்ளவர்களுக்கும் மேலாக, அரைமட்ட மற்றும் கால்மட்ட அதிகாரவான்கள் தாம் நினைத்தவாறு ஆட்டம் போடுவதற்கு ஓர் உதாரணமே, வடக்கின் வனபரிபாலன திணைக்கள அதிகாரிகள் நடத்தும் "கூத்துக்கள்"!

இவை எல்லாவற்றையும் கூட்டிக் கழித்து, பெருக்கிப் பிரித்துப் பார்த்தால், கொழும்பு அரசினால் அந்தக் கூத்துக்களைத் தடுத்து நிறுத்தமுடியாத நிலை தோன்றி வளர்ந்துள்ளமை -- ஜனாதிபதி முகிழ்க்க வைத்த "நல்லாட்சி" என்ற அரசியல் சிந்தாந்தத்தைத் தவிடு பொடியாக்கும் போக்கையே, காட்சியையே வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

புதிய, மைத்திரி - ரணில் அரசின் ஆட்சியில் தமிழர்களுக்கு "நக்கத் தண்ணீர்" தானும் கிடையாது என்பதற்கான, முன்னூட்டலே முல்லைத்தீவு அரச அதிபருக்கு ஏற்பட்டுள்ள நிலைமை என்பது ஒரு புறத்திலும் --

நாள்கள், மாதங்கள் நகர நகர மகிந்த ராஜபக்சவின் எதேச்சதிகார ஆட்சியை ஒத்த ஒன்று இப்போதைய ஆட்சிக் காலத்தில் கட்டவிழ்ந்தாலும் ஆச்சரியமில்லை!


இலங்கையையும், அதன் மக்களையும், குறிப்பாகத் தமிழ் மக்களைப் பீடித்துள்ள பீடை அகல்வதற்கு எத்தனை காலம் எடுக்குமோ? எவரும் கணிக்க முடியாத சோதிடம் அது.

# திருப்பங்கள் நிறைந்த தமிழ்நாடு தேர்தல் களம்

■ ராஜராஜன்

இந்தியாவின் தமிழ்நாட்டில் அடுத்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல்கள் இடம் பெறுமெனத் தெரிய வருகின்றது. இதனால் பிரதான அரசியல் கட்சிகள் தொடக்கம் சிறிய கட்சிகள் வரை தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளன. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வை.கோபாலசாமி விடுதலைச் சிறுத்தைகள், இடதுசாரி கம்யூனிஸ்ட், வலதுசாரி கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளை இணைத்து ஒரு கூட்டணியை அமைத்துள்ளார். இதில் சேருமாறு வேறு அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியான அ.தி.மு.கவும், கலைஞரின் தி.மு.கவும் கூட்டணி அமைப்பது தொடர்பாக இதுவரை வெளிப்படையாக அறிவிக்கவில்லை. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 39 இடங்களில் 37



இடங்களைக் கைப்பற்றிய ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. சட்ட மன்றத் தேர்தலிலும் அவ்வாறு போட்டியிடுவதற்கு எண்ணியிருக்கலாம். ஆனால், நாடாளுமன்றத் தேர்தலைப் போன்று சட்ட மன்றத் தேர்தலிலும் வெற்றிக் கனியைப் பறிப்பதில் சில இடையூறுகள் காணப்படுகின்றன. சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு எதிரான தீர்ப்பு உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படுமாயின், அவர் தேர்தலில் போட்டியிட முடியாததொரு நிலை உருவாகும். இந்த வழக்கின் தீர்ப்பு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெயலலிதா இல்லாத தேர்தல் அ.தி.மு. கவினருக்குச் சாதகமாக அமையவே மாட்டாது. ஏனென்றால் அந்தக் கட்சியின் ஆணிவேரே அவர்தான். தேர்தல் வியூகங்களை வகுத்து கட்சியை வெற் றிப்பாதைக்கு இட்டுச் செல்வதில் ஜெயலலிதாவுக்கு நிகர் அவரேதான். அவர் இல்லாவிட்டால் அ.தி.மு.க. தலைவன் இல்லாத கப்பலின் நிலைக்குத் தள்ளப்பட்டு விடும்.

கலைஞர் தலைமையிலான தி.மு.க. இன்னமும் லட்சக் கணக்கான தொண்டர்களின் ஆதரவைப் பெற்ற நிலையில் காணப்படுகின்றது. ஊழல் வழக்குகள், உள்வீட்டுப் பூசல், கட்சியின் அடுத்த தலைவர் யார் என்பது தெரியாத நிலை என்பன பாதிப்பை ஏற்படுத்தினாலும், கட்சிப் பொருளாளர் மு.க.ஸ்ராலினின் சூறாவளிப் பயணங்களும், பரப்புரைகளும் அந்தக் கட்சிக்கு வலுச் சேர்க்கப் போவது நிச்சயமாகும்.

இதைவிட தேசியக் கட்சிகளான காங்கிரஸ், பா.ஜ.க. என்பனவும் களத்தில் இறங்கப் போகின்றன. ஆனால், இவை தனித்துப் போட்டியிட்டால் ஓர் ஆசனத்தையாவது பெறுவதற்கு முடியாத



நிலையே ஏற்படும். இந்த நிலையில் இந்தக் கட்சிகள் தி.மு.க. அல்லது அ.தி.மு.க வின் தயவை நாடவேண்டிய தொரு நிலை உருவாகும். ஆனால், இதற்கான சாத்தியங்களும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. பீகார் சட்டமன்றத் தேர்தலிலும் பா.ஜ.க. அடிவாங்கியதால் அந்தக் கட்சியின் இமேஜ் குறைந்து காணப்படுகின்றது. இதனால் இதனைக் கூட்டணியில் சேர்த்துக் கொள்வதற்கு ஏனைய கட்சிகள் பின்னடிக்கவே செய்யும். காங்கிரஸ் கட்சியும் தமிழ் நாட்டில் அடிமட்டச் செல்வாக்குடன் காணப்படுகின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போதும் இந்தக் கட்சி சீண்டுவார் எவருமில்லாத நிலையிலேயே காணப்பட்டது. இதேவேளை- வாசனின் புதிய கட்சிக்கு மக்களிடையே ஆதரவு இருப்பதைக் காணமுடிகின்றது. இதனால் இந்தக் கட்சியுடன் கூட்டணி அமைத்துக் கொள்வதற்கு வை கோ ஆர்வம் காட்டலாம்.

தமிழகத்தில் ஒரு காலத்தில் அதிக செல்வாக்குடன் காணப்பட்டது விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி.க. கட்சி கடந்த சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்துக் கொண்டதால் இந்தக் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்று எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தையும் பெற்றுக்கொண்டது. தற்போது இந்தக் கட்சியைச் சேர்ந்த சில சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளும் தரப்புடன் இணைந்து கொண்டபோதிலும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் விஜயகாந்தே தொடர்கின்றார். இந்த நிலையில் அவருடன் கூட்டணி அமைத்துக் கொள்வதற்கும் ஏனைய கட்சிகள் ஆர்வம் காட்டும் என்பதில் ஐயமில்லை.

சிலவேளை, விஜயகாந்தும், வாசனும் வைகோ அணியினருடன் கூட்டணி அமைத்துக் கொண்டால் அந்தக் கூட்டணி ஒரு மெகா கூட்டணியாகவே அமைந்து விடும். இதில் மருத்துவர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சியும் இணைந்து கொண்டால் இந்தக் கூட்டணியின் வெற்றி வாய்ப்புத் தொடர்





பாகக் கூறவே தேவையில்லை. ஆனால், தமது மகனான அன்புமணியை முதலமைச்சராக ஏற்றுக்கொள்பவர்களுடனேயே கூட்டணி வைத்துக் கொள்ளப்படுமென ஏற்கனவே இராமதாஸ் அறிவித்து விட்டதால் கூட்டணி அமைவதில் தடைகள் ஏற்படலாம்.

தமது கட்சி ஆதரவாளர்களை தி.மு.க பக்கம் இழுப்பதில் ஸ்ராலின் முழு அள [illegible] ஏற்கனவே

தி.மு.க. மீது கடுப்பில் உள்ளார். இதனால் வைகோ அமைத்துள்ள கூட்டணியில் தி.மு.க. இணைவதற்கான வாய்ப்புக்கள் அறவே இல்லையென்றுதான் கூறவேண்டும். இதைப்போன்றே அ.தி.மு. கவுடன் கூட்டணி அமைப்பதற்கான வாய்ப்புக்களும் இருக்கப்போவதில்லை.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் மறைந்த எம்.ஜி.ஆரைத் தவிர, அவருக்குப் பின்னர் எந்தவொரு கட்சியும் அடுத்தடுத்து ஒரு தடவைக்கு அதிகமாகப் பதவி வகித்ததில்லை. அ.தி.மு. கவும், தி.மு.கவும் மாறி மாறி ஆட்சியை அமைப்பதே வழக்கமாக இருந்து வருகின்றது. ஆனால் இந்தமுறை அதை முறியடிப்பதற்கு ஜெயலலிதா விரும்புவாரென நம்பலாம். ஆனால், அவருக்கு எதிரான வழக்கின் தீர்ப்பைப் பொறுத்தே இது சாத்தியமாகும். மேலும் நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த வெற்றியை சட்டமன்றத் தேர்தலிலும் அவர் எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் எம்.ஜி.ஆர். காலத்தில் கூட இந்த இரண்டு தேர்தல்களிலும் ஒரேமாதிரியான வெற்றியை அவர் பெற்றுக் கொள்ளவில்லை. ஆகவே ஜெயலலிதா இந்தத் தேர்தலிலும் வெற்றி பெறுவாரென எதிர்பார்க்க முடியாது.

இந்த நிலையில் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைக்கப்போவது யார் என்பதை இப்போதே கூறமுடியாததொரு நிலைதான் இன்று காணப்படுகின்றது. முதலில் ஜெயலலிதாவின் வழக்குத் தொடர்பான தீர்ப்பு வெளிவர வேண்டும். கட்சிகள் அமைக்கின்ற கூட்டணி விவரம் தெளிவாகத் தெரிய வேண்டும். இவை தெரிந்த பின்னரே தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதைக் கூறமுடியும்.

வைகோ வேறு கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ளமை ஜெயலலிதாவுக்கு உவப்பான செய்திதான். ஏனென்றால் எதிர்க்கட்சிகள் பிளவுபடுவதை அவர் விரும்பவே செய்வார். வைகோவுடன் சமரசம் செய்து கூட்டணி அமைத்துக் கொள்வதற்கு தி.மு.க. முயற்சி செய்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

எது என்னவோ தமிழ்நாட்டில் இடம் பெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தல் ஆவலை ஏற்படுத்தும் ஒன்றாகவே அமைந்து விடப்போகின்றது.

மு. ஈழத்தமிழ்மணி


# தமிழர்களின் சாத்வீகப் போராட்டங்கள் அரசின் கண்களைத் திறக்குமா?




ஈழத்தமிழர்களினது அடிப்படைப் பிரச்சினைகளில் ஒன்றான தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம், கடந்த வாரம் அரசியல் களத்தில் சூடுபிடித்திருந்தது. 217 தமிழ் அரசியல் கைதிகளில் 31 கைதிகள் விடுவிக்கப்பட்டிருந்தனர். 11 ஆம் திகதி திங்கட்கிழமை விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் 27 பேர் மட்டும் தமிழ்க் கைதிகளாவர். இருவர் பெண்களாவர். மிகுதி நான்கு பேர் சிங்களவர்கள். மிகுதி 185 தமிழ் அரசியல் கைதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து தொடர்ச்சியாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பத்துக்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் சோர்வுற்று மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முழு அடைப்புப் போராட்டத்தை நடத்தியிருந்தனர். தமிழ் அரசியல் கைதிகள் சாகும்வரை மேற்கொண்ட உணவு தவிர்ப்பு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையில் முழு அடைப்புப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

போராட்டத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் - மாணவர் ஒன்றியம், வர்த்தக சங்



கங்கள், தனியார் போக்குவரத்துச் சங்கம் உட்பட பல அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்தன. கடைகள் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள், வங்கிகள் செயலிழந்திருந்தன. கூட்டுமொத்தமாக வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் முற்றிலும் செயலிழந்திருந்தது. தமிழினத்தின் உரிமைகளுக்காகப் போராடுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீண்ட காலத்துக்குப் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சியில் இப்படியொரு பெரிய போராட்டத்தை நடத்தியிருந்தது.

தமிழ் அரசியல் கைதிகளின் சாகும் வரையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்துக்கு ஆதரவு கொடுத்து வருகின்ற வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உட்பட உறுப்பினர்களும் முழுஅடைப்புப் போராட்டத்துக்கு முழு ஆதரவையும் வழங்கியிருந்தனர்.

12 ஆம் திகதி வடக்கு மாகாணசபை முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் உட்பட ஏனைய நான்கு அமைச்சர்களைக்கொண்ட குழுவினர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து உரையாடினர். அப்போதைய சந்திப்பில் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம் மற்றும் விடுதலை தொடர்பாகவும் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியதாகவும், அப்போது கைதிகளின் விடயத்தில் உரிய பதில் தரப்படும் என ஜனாதிபதியால் கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே ஜனாதிபதிதான் கடந்த மாதம் தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் நவம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன் உரிய முடிவைத் தருவேன், போராட்டத்தை நிறுத்துங்கள் என கைதிகளிடம் உறுதிமொழி அளித்திருந்தார். ஜனாதிபதியின் உறுதிமொழியின் பிரகாரம் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாத நிலையில் நம்பிக்கை இழந்தனர்.

எதிர்க் கட்சித் தலைமையை வகித்து வருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழினத்தின் அடிப்படைப் பிரச்சினைகள் எவை என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பல வேண்டுகோளுக்கு இணங்க ஜனாதிபதி பதவிக்கு வந்த ஆரம்பத்தில் வடக்கு ஆளுநரை மாற்றி தமிழரை நியமிக்காமல் பெரும்பான்மை இனத்தின் சார்பிலான சிங்கள உயர் அதிகாரியை ஆளுநராக நியமித்தது. மாகாணசபைச் செயலாளரை மாற்றியது. வலி.வடக்கில் சுமார் 1,500 ஏக்கர் நிலங்களை இராணுவத்தின் பிடியில் இருந்து சொந்த மக்களிடம் வழங்கியது. வன்னியிலும் தமிழ் மக்களின் காணிகளை சில பகுகளில் சிறியளவில் படையினரிடமிருந்து மீட்டு வழங்கியது. திருகோண மலை மாவட்டத்தில் உள்ள சம்பூரில் இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியமர்வு செய்தது.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான நாடாளுமன்ற ஆட்சி, தேசிய அரசாக நாட்டில் மலர்ந்தது. எதிர்க் கட்சித் தலைமைப் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டது. நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியும் கூடவே கிடைத்தது. இரண்டு பதவிகளையும் தன் வசப்படுத்தியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மைத்திரியுடனோ பிரதமரான ரணிலுடனோ எந்த வகையிலும் முட்டி மோத விரும்பமாட்டார்கள். இதனால்தானோ என்னவோ தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் நவம்பர் ஏழாம் திகதிக்கு முன்னர் ஒரு பகுதியினர் விடுவிக்கப்படுவர் என்ற ஜனாதிபதியின் உறுதிமொழியின் அடிப்படையில் நவம்பர் ஏழாம் திகதியன்றோ தீபாவளித்தினத்தன்றோ விடுவிக்கப்படாது, 11 ஆம் திகதி பிணையில் கடும் நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டனர். பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்படும் என்ற நம்பிக்கையும் தமிழ் அரசியல் கைதிகள் மத்தியில் நிராசையாகி விட்டதுடன், கடும் ஏமாற்றத்தையும் அளித்திருந்தது.

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளனர். அதே ஜனாதிபதியை வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் தலைமையிலான அமைச்சர் குழுவும் சந்தித்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் விடயம் என்பது முக்கியமானது. முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டியதுமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையில் இடம்பெற்ற முழுக்கடையடைப்புப் போராட்டமானது பெரிய வெற்றியைத் தந் துள்ளது. மக்கள் போராட்டம் மூலம் அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்கலாம். போருக்கு முன்னர் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைகள் இப்படிப்பட்ட பல போராட்டங்களை 1958 தொடக்கம் 1983 வரை சிங்கள அரசுக்கு எதிராக நடத்தியிருந் தனர். அப்போது தமிழ் மக்கள் ஒன்று திரண்டு ஆதரவளித்திருந்தனர்.

அதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் நடைபெற்ற ஒரு நாள் முழுக் கடையடைப்புப் போராட்டம் புதிய அரசுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளது. தமிழர்கள் போராட்டத்துக்குச் சளைத்தவர்கள் அல்ல என்பதையும் உறுதிபடத் தெரிவித்துமுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒழுங்கு செய்து நடத்திய போராட்டம் மைத்திரி - ரணில் ஆகியோரது நல்லாட்சி என்ற பெயரில் ஆட்சி செய்து வருகின்ற தேசிய அரசுக்குத் தோல்வியை வழங்கியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் வரையில் தந்தை செல்வாவின் வழியில் மைத்திரி அரசுக்கெதிராக போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். தமிழ் மக்கள் அரசுக்குச் சார்பாக எப்போதுமே இருக்கமாட்டார்கள். ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்களின் பெரும்பான்மையான வாக்குகளால் பதவிக்கு வந்ததாகவும், தான் எப்போதுமே தமிழ் மக்களுக்கு நன்றிக்கடனுள்ளவர் என்றும் அண்மைக்காலத்தில் விளம்பியிருந்தார். அதே தமிழ் மக்களைப் போராட்டத்துக்குள் தள்ளிவிட்டுள்ளார். இந்தப் போராட்டத்தையும் அரசு புறம் கூறாமல் மனிதாபிமானத்துடன் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

நல்லாட்சி அரசுக்கு தமிழர்களின் முழு அடைப்புப் போராட்டமானது அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் கொடுத்திருப்பதால் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் விடுதலை கிடைக்குமா? அல்லது இனவாதிகளின் சிந்தனைக்குள் அரசு வீழ்ந்து கிடக்குமா?

1. தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம்.
2. 28 தமிழ் அரசியல் கைதிகள் பிணையில் விடுதலை.
3. வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான அமைச்சர் குழு ஜனாதிபதியைச் சந்தித்தது.
4. காணாமற் போனோர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமை ஐக்கிய நாடுகள் வதிவிட காரியாலயத்தின் முன்பாகக் கறுப்புத் துணிகளால் வாய்களைக் கட்டி காணாமற் போனவர்களுக்கான போராட்டம்

என மைத்திரியின் நல்லாட்சி அரசுக்கு கடந்த வாரம் தமிழர்கள் பிரச்சினைகள் யாவும் சோதனையாகவே அமைந்திருந்தது.

வெள்ளிக்கிழமை தமிழ் மக்களால் மேற் கொள்ளப்பட்ட முழுநாள் முழு அடைப்புப் போராட்டத்தை தமிழர்களின் பிரச்சினைக்குச் சவாலாக மைத்திரிபால சிறிசேன எடுத்துக் கொள்வாரா...?

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | சாவகச்சேரி | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | யாழ்ப்பாணம் | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 600 | 700 | 600 | 500 |
| நண்டு | 300 | 400 | 200 | 400 | 200 | 500 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 600 | - |
| பாரை | - | 500 | 350 | 500 | 400 | 300 |
| சுறா | - | 500 | 350 | 600 | 450 | 400 |
| சீலா | 300 | 400 | 300 | 400 | 200 | 250 |
| விளை | 400 | 400 | 260 | 450 | 550 | 300 |
| முரல் | 400 | 350 | 250 | 300 | 250 | - |
| கும்பிளா | 300 | 350 | 200 | 300 | 200 | 200 |
| கிழாக்கன் | - | 800 | - | 400 | 350 | - |
| ஒரா | 400 | 300 | 220 | 400 | 300 | 250 |
| திரளி | 150 | 200 | 150 | 300 | 150 | - |
| நகரை | 200 | 200 | 100 | 300 | 150 | 200 |
| சூடை | 100 | 100 | 50 | 100 | 150 | - |
| ஒட்டி | - | 150 | 180 | 300 | 200 | 150 |
| திருக்கை | 200 | 300 | 150 | 250 | 150 | 100 |
| பாலை | 300 | 200 | - | 400 | 350 | - |
| வாழை | 150 | 150 | 150 | 300 | 100 | 150 |
| கொய் | 50 | 100 | 40 | 120 | 100 | - |
| மதனம் | 200 | 200 | 130 | 250 | 150 | 200 |

# நோய்களைக் குணப்படுத்தும் வேப்பமரம்



சாதாரணமாகக் கிராமங்களிலும், நக ரங்களிலும் வளரும் வேப்ப மரத்தை மருத்துவ குணம் வாய்ந்த மூலிகை மரம் என்று சொல்லலாம். இந்த வேப்ப மரம் எமக்கு ஒரு சிறந்த வரப் பிரசாதம். இந்த வேப்ப மரத்தின் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு பயனைத் தரும். அதி லும் இந்த வேப்ப மரத்தின் இலையை 4,000 வருடங்களாக ஆயுள்வேதத்தில் பயன்படுத்தி வரு கின்றனர். ஆயுர் வேத மருத் துவத்தை மேற்கொண்டால், சரிசெய்ய முடியாத நோயையும் சரிசெய்யலாம் என்று சொல் வதற்கு வேப்பிலையும் ஒரு காரணம் என்று சொல்ல லாம். இதன் பயன்பாடு கள்:-

வேப்பம் இலை: புழு, பூச்சி களால்நேரிடும்துன்பங்களை ஒழிக் கும்.வேப்பங் கொழுந் தும், எள்ளும் சேர்த்து அரைத் துப் பூசிவர, ஆறாத நாள்பட்ட புண்கள் ஆறும். வேப்பிலைக் கொழுந்தைச் சிறிதளவு தின மும் சாப்பிட்டு வர எந்த நோயும் அணுகாது.

வேப்பிலைச் சாறு: பழச்சாறு கலந்து படுக்கபோகும் முன் அருந்தினால், ஆழ்ந்த உறக் கம் உண்டாகும். வேப்பம் பூவை குடிநீரிட்டு குடிக்க குன்ம நோய் தீரும். வேப்பம் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டால், தோல் நோய் தீரும்.

வேப்பம் இலை, நோய்க் கிருமிகளை மட்டும் அழிக்கும் ஆற்றல் பெற்றுள்ளது. வேப் பம் பிசின் மேக நோயைப் போக்கும். பூவைத் தலையில் வைக்க ஈறும் பேனும் தீரும். 100 வயதான வேப்பமரத்தின் பட் டையை நிழலில் உலர்த்திச் சூர ணித்து பாலில் சாப்பிட்டு வர, நரம் புத் தளர்ச்சி நீங்கும். நோய் அணுகாது.

வேப்பம் பூச்சாறு: நெல்லிக்காய் சாறு கலந்து அருந்த எந்த நோயும் அணுகாது. தோல் பளபளக்கும். குருதி சுத்தமாகும். வேப்பமுத்து, மிளகு, கருஞ்சீரகம் மூன்றையும் அரைத்து எண் ணெய்யில் கலந்து தலைக்குத் தேய்த்து குளித்து வரப் புழுவெட்டு மாறும். முடி செழித்து வளரும்.

வேப்பிலையை நன்கு பேஸ்ட் போல் அரைத்து, அதில் சிறிது தேன் கலந்து, தலைக்குத் தடவி, சாம்பு போட்டுக் குளித்தால், பொடுகு நீங்கி, கூந்தல் பட்டுப் போன்று மின்னும். இந்த முறை 'ஹேர் கண்டினர்' போன்றது.

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | – | 100 | – | 80 | – | 40 |
| கத்தரி | 150 | 140 | 160–200 | 200 | 140 | 180 | 90 |
| கரட் | 120 | 100 | 80–160 | 140 | 240 | 370 | 250 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 50 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 120 | 150 | 250–350 | 200 | 240 | 220 | 300 |
| பாகல் | 350 | 240 | 300 | 200 | 300 | 220 | 350 |
| கருணைக்கிழங்கு | 70 | 100 | 100 | 100 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 150 | 150 | 160 | 150 | 140 | 120 | 130 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 140 | 120 | 200 | 50 |
| பூசணி | 50 | 50 | 60 | 50 | 50 | 80 | 50 |
| தக்காளி | 150 | 140 | 240 | 140 | 180 | 240 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 50 | 60 | 80 | 40 |
| கீரை | 50 | – | 50 | 20 | 40 | 40 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | – | 30 | 40 | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 500 | 600 | 600 | 500 | 400 | 600 |
| புடோல் | 140 | 100 | 160 | 120 | 120 | 80 | 120 |
| கோவா | 150 | 140 | 160 | 160 | 160 | 200 | 120 |
| வெண்டி | 200 | 100 | 120 | 120 | 120 | 80 | 100 |
| போஞ்சி | 200 | 240 | – | 180 | 240 | 220 | 100 |
| லீக்ஸ் | 150 | 140 | 120 | 140 | 140 | 160 | 160 |
| தேங்காய் | 50 | 45 | 50 | 50 –60 | 45 | 60 | 40–45 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 110 | 120–140 | 120 | 120 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 350 | 280 | 400 | 250 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 15 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 200 | 240 | 400 | 180 | 220 | 280 | 300 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 250 | 200 | 400 | 140 | 240 | – | 200 |

## நாளை

கார்த்திகை-6 ஞாயிற்றுக்கிழமை (22.11.2015)

திதி:
ஏகாதசி: பி.ப. 1.23 வரை
நட்சத்திரம் :
உத்தரட்டாதி: பி.ப. 12.19 வரை

சுபநேரம்:
09.10 - 10.40 வரை
இராகு காலம்:
04.40-06.10 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### இலட்சியத்தில் இருந்து விலகாதீர்கள்

இறைவனுக்காகவே ஒவ்வொரு செயலும் நடைபெறட்டும். உண் பதும், உறங்குவதும், காண்பதும் ஆகிய அனைத்தும் அவ னுக்காகவே. நமக்கென உள்ளதைப் பிறருக்குக் கொடுப்பதில் மகிழ்ச்சி உண்டாகும். பிரதிபயன் எதிர்பார்த்துச் செயலாற்றினால் நன்மை உண்டாவதில்லை. உங்களை உலகம் தூற்றினாலும், கொண்ட இலட்சியத்திலிருந்து விலகாமல் உறுதியுடன் செயற் படுங்கள். நிச்சயம் உங்களால் சாதிக்க முடியும்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 4 | | | 3 | | | |
| 8 | | 7 | | | | 3 | | 5 |
| 9 | | | 1 | | | | | 4 |
| | | 6 | 4 | 3 | | 9 | | |
| | | | | | | | | |
| | | 9 | | 2 | 7 | 8 | | |
| 5 | | | | | 2 | | | 6 |
| 7 | | 8 | | | | 5 | | 2 |
| | | | 9 | | | 7 | 3 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 2 | 9 | 7 | 6 | 3 | 5 | 4 |
| 5 | 6 | 9 | 1 | 4 | 3 | 8 | 2 | 7 |
| 3 | 7 | 4 | 5 | 8 | 2 | 6 | 1 | 9 |
| 7 | 9 | 5 | 6 | 2 | 4 | 1 | 8 | 3 |
| 1 | 4 | 3 | 7 | 5 | 8 | 2 | 9 | 6 |
| 6 | 2 | 8 | 3 | 1 | 9 | 7 | 4 | 5 |
| 4 | 3 | 1 | 8 | 6 | 5 | 9 | 7 | 2 |
| 9 | 5 | 7 | 2 | 3 | 1 | 4 | 6 | 8 |
| 2 | 8 | 6 | 4 | 9 | 7 | 5 | 3 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதி யான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண் டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ் வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரை யான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# கார்த்திகை மாத பலன்கள்

## 17.11.2015 தொடக்கம்; 16.12.2015 வரை

### மேடம்

கூட்டுக் குடும்பமாய் வாழ விரும்பும் நீங்கள், அசைக்க முடியாத தெய்வ பக்தி உள்ளவர்கள். தனது சொந்த உழைப் பால் உயர விரும்பும் நீங்கள், பாதை மாறிச் சென்று பணம் சம்பாதிக்கத் தயங்கு வீர்கள். இந்த மாதம் முழுக்க உங்கள் ராசி, செவ்வாய் 6 ஆம் வீட்டிலேயே தொடர்வதால் உங்களுடைய ஆளுமைத் திறன் அதிகரிக்கும். புதிய பதவிக்கு உங் களது பெயர் பரிந்துரை செய்யப்படும். பிரபலங்களின் நட்புக் கிடைக்கும். ராகு வும் 6 ஆம் இடத்தில் நிற்பதால் அயல் நாடு செல்ல நுழைவிசைவு கிடைக்கும். குடும் பத்தில் உங்கள் கை ஓங்கும். பணம் வரும். மேடராசி செவ்வாய் ராகுவுடன் சேர்ந்து நிற்பதால் குருதியில் கீமோ குளோபின் குறைபாடு, தலைச்சுற்றல், சிறுசிறு விபத்துக்கள் வந்து போகும். உங்களின் தனசப்தமாதிபதியான சுக் கிரன் 6 இல் மறைந்து கிடப்பதால் கண வன்-மனைவிக்குள் ஈகோ பிரச்சினை கள் வரக்கூடும். சுக்கிரன் 7 ஆம் வீட்டில் நுழைந்து உங்கள் ராசியைப் பார்க்க இருப்பதால் அழகு, ஆரோக்கியம் கூடும். மனைவியுடனான மோதல்கள் விலகும். அவருக்கு இருந்த நோய் குண மாகும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். குரு 5 இல் நீடிப்பதால் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். மக ளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு வேலை கிடைக்கும். ஆனால், 8 இல் நிற்கும் சனியுடன் இந்த மாதம் முழுக்க உங்களின் பூர்வ புண்யாதிபதி சூரியனும் சேர்வதால் பிள்ளைகளால் கொஞ்சம் அலைச்சல், செலவுகள் இருக்கும். அரச விடயங்கள் தாமதமாக முடிவடையும். புதன் சாதகமான நட்சத்திரங்களில் செல்வதால் உறவினர், நண்பர்களின் ஆத ரவு பெருகும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள்.

மாணவர்களுக்கு, அவ்வப்போது மந்தம், மறதி வந்து நீங்கும். கன்னிப் பெண்க ளின் நீண்ட நாள் கனவுகள் நனவாகும். பெற்றோருக்குத் தெரியாமல் எந்த நட்பும் வேண்டாம். அரசியல்வாதிகளுக்கு சகாக் களின் ஒத்துழைப்புக் குறையும். தலைமையைப் பகைத்துக் கொள்ளாதீர் கள். வியாபாரத்தில் சந்தை நிலவரத்தை அறிந்து புது முதலீடுகள் செய்வீர்கள். பழைய வாடிக்கையாளர்கள் தேடி வரு வார்கள். யாருக்காகவும் கடன் தர வேண் டாம். அனுபவமிக்க வேலையாள்களை பணியில் சேர்ப்பீர்கள். நெல், கரும்பு, காய், கனி வகைகளால் இலாபமடைவீர்கள். உத் தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங் கீகாரம் கிடைக்கும். அலுவலகத்தில் மரி யாதை கூடும் என்றாலும், அஷ்டமத்துச் சனி தொடர்வதால் நேர்மூத்த அதிகாரி களால் மறைமுக தொந்தரவுகள் வந்து போகும். சம்பள மீதி கைக்கு வரும். விவ சாயிகளுக்குத் தண்ணீர் வரத்து அதிகரிக் கும். நவீன ரக உரங்களைப் பயன் படுத்தி விளைச்சலை அதிகப்படுத்தப் பாருங்கள்.

**பரிகாரம்:** முருகனைத் தரிசித்து வாருங்கள். ஏழைப் பெண்ணின் திரும ணத்துக்கு உதவுங்கள்.

### இடபம்

திட்டமிட்டு குறிக்கோளுடன் வாழும் நீங்கள், இருட்டிலிருப்பவர்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவர விரும்புவீர்கள். உண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள், தடம்மாறி தரம் குறைய மாட்டீர்கள். உங்கள் ராசியில் சுக்கிரன் சாதகமாக இருப்பதால் புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். சுக்கிரன் ராசிக்கு 6 ஆம் வீட்டில் சென்று மறைவதால் சளித் தொந்தரவு, காய்ச்சல், தொண்டைப் புகைச் சல் வந்து போகும். இந்த மாதம் முழுக்க சூரியன் 7 இல் நிற்கும் சனியுடன் சேர்ந்து உங்கள் ராசியைப் பார்ப்பதால் உடல் உஷ் ணத்தால் வேனல் கட்டி, அடி வயிற்றில் வலி வந்து போகும். முன்கோபம் அதிகமாகும். மனைவிக்கு தைரொயிட் பிரச்சினை, சிறு சிறு அறுவை சிகிச்சைகள் வரக்கூடும். அரச விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். உங்களை அறியாமலேயே தாழ்வுமனப் பான்மை தலைதூக்கும். வழக்கில் தீர்ப்புத் தள்ளிப் போகும். ராகுவும், செவ்வாயும் இந்த மாதம் முழுக்க 5 ஆம் இடத்திலேயே தொடர்வதால் பிள்ளைகள் இன்னும் கொஞ் சம் கூடுதலாக உழைத்தால், நன்றாக இருக்குமே என்று நினைப்பீர்கள். அவர் களின் உயர்கல்வி, உத்தியோகம், திரும ணம் சம்பந்தப்பட்ட கவலைகள் வந்து போகும். கர்ப்பிணிப் பெண்கள் பயணங் களைத் தவிர்ப்பது நல்லது. சகோதரர்கள் உங்களைத் தவறாகப் புரிந்து கொள்வார்கள். பூர்வீக சொத்துப் பிரச்சினை வெடிக்கும். கேது இலாப ஸ்தானத்தில் வலுவாக அமர்ந் திருப்பதால் எல்லாப் பிரச்சினைகளையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். அயல் நாட்டிலிருப்பவர்களால் உதவிகள் உண்டு. புது வேலை கிடைக்கும். புதன் சாதகமான நட்சத்திரங்களில் செல்வதால் நட்பு வட்டம் விரிவடையும். உறவினர்கள் மதிப்பார்கள். மாணவர்கள், விளையாட்டுத் தனத்தை குறைத்துப் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்தப் பாருங்கள். கன்னிப் பெண் கள், காதல் விவகாரத்தில் சிக்கிக் கொள் ளாதீர்கள். உங்களுக்குக் கண்ணில் கரு வளையம், முடி உதிர்தல் வரக்கூடும். அரசி யல்வாதிகளே! உங்களைப் பற்றிய விமர் சனங்கள் அதிகமாகும். சகாக்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண் டாம். வியாபாரம் சுமாராக இருக்கும். போட்டிகளைச் சமாளிக்க வேண்டிவரும். புது முதலீடுகளைத் தவிர்க்கப்பாருங் கள். வேலையாள்களை அவர்கள் போக் கிலேயே விட்டுப் பிடிப்பது நல்லது. வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பேசுங்கள். பங்குதாரர்களில் சிலர் தங்களது பங்கைக் கேட்டு தொந்தரவு தருவார்கள். புடவை, உணவு வகை களால் ஆதாயமடைவீர்கள்.

உத்தியோகத்தில் சவால்களைச் சந்திக்க வேண்டி வரும். அதிகாரிகளால் அலைக் கழிக்கப்படுவீர்கள். எதிர்பார்த்த சலு கைகள் தாமதமாகும். சக ஊழியர்களால் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். விவசாயிகளே! கடன் பிரச்சினையை நினைத்துக் கலங்குவீர்கள். மஞ்சள், எண்ணெய் வித்துக்களால் இலாபம டைவீர்கள்.

**பரிகாரம்:** கும்பேஸ்வரரை தரிசித்து வாருங்கள். ஏழை மாணவனின் கல்விச் செலவை ஏற்றுக் கொள்ளுங்கள்.

# ஆணும் பெண்ணும் நண்பர்களாக...






(நேற்றைய உதயனின் மிகுதி தொடர்ச்சி...)

அதனால் தான், சமுதாயத்தில் இப்படியானதொரு நட் புறவு கொச்சைப்படுத்தப்படுகிறது. அப்படியானால் ஓர் ஆணுக்கும், பெண்ணுக்குமிடையே ஓர் ஆரோக்கியமான நட்பு நிலவ முடியாதா? அது ஓர் உண்மையான நட்பாக இருக்க முடியாது என்று துணிந்து கூறலாம். இன்றைய சமுதாயத்தின் குறை நிலைக்கட்டமைப்பு நியதி கள் அப்படியானதொரு நட்பை வலு இழக்கச் செய் வதோடு, அதற்குத் தவ றான அர்த்தங்களையும் கற்பிக்க முற்பட்டுவிடுவதை நாம் யாதார்த்தமாகக் காண முடிகிறது. ஏனெ னில், ஆண், பெண் என்ற இருபாலாரும் ஈர்க்கும் கவர்ச்சியுள்ளவர்களாகப் படைக்கப்பட்டுள்ளார்கள். அதனால், இந்த நட்பு தவ றான உறவுகளுக்கே வழிவகுத்துள்ளதை நாம் அன்றாடம் காணமுடிகிறது. பாடசாலைகளில், பல்கலைக்கழகங் களில் ஆண்கள், பெண்கள் என்று நட்பை ஏற்படுத்திக் கொள்கின்றனர். பின்னர் அது காதலாகப் பரிணமித்து, பல விளைவுகளை ஏற்படுத்துகிறது. ஓர் ஆண் எப்போதும் ஒரு பெண்ணிடம் கொள்ளும் காதல் சதை வசப்பட்டது. நட்பு எப்போதும் முழுக்க முழுக்க மனவசப்பட்டது. நல்ல நட்புக்கு அமாவாசையோ, தேய்பிறையோ இல்லை என்று சொல்வார்கள். நட்பு அந்திமாலை நிழல் போன்றது. வாழ்க்கைக் கதிரவன் அஸ்தமிக்க அஸ்தமிக்க நட்பு நிழல் அடர்த்தியாகி, அழகொளிர வேண்டும்.

இது ஆண்-பெண் இருபாலாரிடையே அசாத்தியமானது. எனவே, காதலை விட நட்பு உயர்ந்தது, காதலை விட நட்பு வலியது, பாடசாலைகளில், பல்கலைக் கழகங்களில் நட்பு என்று ஆண்களால் ஏமாற்றப்பட்டு, கற்பு சூறையாடப்பட்ட பெண் கள் ஏராளம். அதே போல் தற்கொலை செய்து கொண்டவர்களும் அதிகம்.

# பனை மரமும் பச்சைக் கிளியும்...



தெற்கு காரசேரி எனும் கரிசல்காட்டுப் பகுதியில், ஒரு பனைமரம் இருந்தது. அதன் உடல் கறுப்பாகவும் ஓலைகள் பச்சைப் பசேல் என்றும் இருந்ததால் அந்தப் பனைமரம் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. பலவிதமான பறவைகள் அந்தப் பனைமரத்துக்கு வந்து தங்கிச் செல்லும் என்றாலும் ஓர் அழகான பச்சைக்கிளி மட்டும் அந்தப் பனைமரத்துடன் பாசத்தோடு பழகியது. இரை தேடிச்செல்லும் சமயங்கள் தவிர, மற்ற நேரங்களில் அந்தப் பச்சைக்கிளி அந்தப் பனைமரத்திலேயே தங்கிக் கொண்டது. பனைமரமும் பச்சைக் கிளியும் மனந்திறந்து பேசி மகிழும். கிளி இரை தேடும்போது ஏற்படும் அனுபவங்களைப் பனைமரத்தோடு பகிர்ந்து கொள்ளும். அந்த அனுபவங்கள் பனைமரத்தை மெய்சிலிர்க்கச் செய்யும். ஒருநாள் வேடன் ஒருவன் விரித்த வலையில் சிக்கவேண்டிய நிலையில், பச்சைக்கிளி அதிலிருந்து மயிரிழையில் தப்பித்து வந்தது. அந்த அனுபவத்தைக் கிளி சொல்லக் கேட்டதும் பனைமரம் பதறியது. "கிளியே, கிளியே, உனக்கு ஏதாவது ஒன்று என்றால் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. இனிமேல் இரை தேடிச் செல்லும்போது கவனமாகப் போய் வரவேண்டும்" என்று ஆலோசனையும் சொன்னது பனைமரம்.

இரை தேடிச் செல்லும்போது கிடைக்கும் அழகிய பழங்களை கிளி பனைமரத்துக்குக் கொண்டுவந்து கொடுக்கும். பனைமரமும் அந்தப் பழங்களை ஆசையோடு தின்று மகிழும். "கடவுள், உன்னைப்போல எனக்கும் இறக்கைகள் கொடுத்திருந்தால் நானும் வானில் பறந்து வட்டமடிப்பேன்" என்ற தன்னுடைய ஆசையைக் கிளியிடம் அடிக்கடி பனைமரம் சொல்லும். தனது இனிய பதநீரை கிளிக்குத் தந்து மகிழும். ஒருநாள் கிளி இரை தேடிச் சென்றபோது தனது அணில் நண்பனை தன்னுடன் அழைத்து வந்து பனைமரத்திடம் அறிமுகம் செய்து வைத்தது. அணிலும் பனைமரமும் நீண்டநேரம் பல விடயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தன. தன்னிடமுள்ள இளம்நுங்குகளை அணிலுக்குத்தந்து மகிழ்ந்தது பனைமரம். அணிலும் நுங்கை ரசித்து ருசித்தது. "ருசியான நுங்கை சுமக்கும் நீ உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவன். உனது உடல் கறுப்பு என்றாலும் உள்ளம் வெள்ளை" என்று புகழ்ந்தது அணில். அடிக்கடி வந்து தன்னைச் சந்தித்துச் செல்லும்படி அணிலிடம் கேட்டுக்கொள்ள அதுவும் சம்மதித்தது. பின்பு பனை மரத்திடமிருந்து பிரியாவிடை பெற்றது. ஒருநாள் கிளி, பனைமரத்துக்குத் திரும்ப வெகுநேரமாகி விட்டது. வெளிச்சம் மங்கி இரவாகத் தொடங்கியது. கிளியைக் காணாத பனைமரத்துக்கு அழுகை அழுகையாய் வந்தது. வெகுநேரம் கழித்து வந்த கிளியைப் பார்த்த பின்புதான் வாடியிருந்த அதன் முகம் மலர்ந்தது. "ஏன் இவ்வளவு நேரம்?" எனக் கேட்டது பனைமரம். "உனக்காக அத்திப் பழங்களைக் கொண்டுவர வெகுதூரம் போய்விட்டேன். அதனால் நேரமாகிவிட்டது" என்றது கிளி. "இனிமேல் இப்படியெல்லாம் செய்யக்கூடாது" என்ற பனைமரம், கிளி கொடுத்த அத்திப்பழங்களை ஆவலோடு உண்டது. 'நீ வரவில்லை என்றதும் பதறிப்போய் விட்டேன் என்றது' பனை. மற்றொரு நாள், ஆலமரத்தின் கனிகளைக் கிளி ஆசையோடு கொத்தித் தின்று கொண்டிருந்தபோது மேகம் சூழ்ந்தது. இடி இடித்தது. மின்னல் மின்னியது. மழை வரும் போலிருந்தது. அதற்கு முன் பனை நண்பனிடம் சென்றுவிட வேண்டும் என்ற முடிவில் கிளி வேகமாகக் கரிசல் காட்டை நோக்கிப்பறந்தது. அப்போது சற்றுத்தொலைவில் ஒரு பெரிய இடி விழும் சத்தம் கேட்டது. இடி இடித்த சத்தத்தில் பயந்துபோன கிளி மேலும் வேகமாகப் பறந்தது. பனைமரத்தை நெருங்கிக் கொண்டிருந்த நேரத்தில், இடிவிழுந்து பனைமரம் தீயில் எரிந்து கொண்டிருந்த காட்சியைக் கண்டது கிளி. "ஐயோ... அம்மா வலிக்கிறதே" என்று அலறிக் கொண்டிருந்தது பனைமரம்.

பனை மரத்தின் அழுகுரலைக் கேட்டதும், அதிர்ச்சியில் உறைந்துபோன பச்சைக் கிளி, பனைமரத்தை நெருங்கி, தீயை அணைக்க முயன்றது. "கிளியே... வேண்டாம். தீயை அணைக்க முயலாதே. தீ உன்னையும் சுட்டுவிடும். தள்ளிப் போ" என எச்சரித்தது பனைமரம். இருந்தாலும் கிளி தீயை அணைக்க முயன்றது. அதனால் முடியவில்லை. கிளியின் கால் ஒன்று தீயில் கருகிப் போனது. கிளி நொண்டிக் கிளி ஆனது. "கிளியே, எனது விதி அவ்வளவுதான். நான் மடிந்து போவதைப் பற்றிக் கவலைப்படவில்லை. பாசக்கார கிளியான உன்னைவிட்டுப் பிரிந்து போவதை நினைத்துத்தான் வேதனைப்படுகிறேன்" என்ற பனைமரம் கொஞ்சம், கொஞ்சமாக உயிரைவிட்டது. கிளி தேம்பித் தேம்பி அழுதது. அதைத் தேற்ற அங்கு யாரும் இல்லை. இடி விழுந்த பனைமரம் மொட்டைப்பனை ஆகிப்போனது என்றாலும் பனைமரத்தைப் பிரிய மனமில்லாத பாசக்கார பச்சைக்கிளி மட்டும் மனதில் நம்பிக்கையோடு காத்திருந்தது. பல கடவுள்களை வேண்டியது. எப்படியாவது மீண்டும் எனது பனை நண்பனை துளிர்க்கச் செய்து விடுவார் கடவுள் என உறுதியாக நம்பியது. ஒருநாள் அந்த வழியே முனிவர் ஒருவர் வந்தார். தனது ஞானதிருஷ்டியால் பனைமரத்துக்கு ஏற்பட்ட நிலையையும் அதைக் காப்பாற்ற முனைந்த கிளியின் கால் ஒன்று கருகியதையும் உணர்ந்தார். மொட்டைப்பனையில் இருந்த கிளியைப் பார்த்து, தன்னைப் பற்றியும், தனது ஞானதிருஷ்டியைப் பற்றியும் பனைமரத்துக்கு இடியால் ஏற்பட்ட நிலையையும் எடுத்துச்சொல்லி, "உனக்கு, நான் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறாயோ அதை எனது தவ வலிமையால் செய்வேன்'' என்றார். உடனே கிளி, "நான் ஒற்றைக்காலோடு அலைந்து திரிந்தால் கூட பரவாயில்லை. எனது பனை நண்பன் உயிர்பெற வேண்டும். உதவுங்கள்" என்றது கிளி.

உடனே முனிவர், "உன்னுடைய நல்ல எண்ணம் பாராட்டுக்குரியது. இழந்த காலைக் கேட்காமல், உனது பனைமர நண்பன் உயிர் பெற உதவக் கேட்டாயே! இதுதான் உனது நல்ல எண்ணத்துக்கு அடையாளம். எனவே உனது பனை நண்பன் எனது; தவ வலிமையால் மீண்டும் உயிர்பெறுவான். நீயும் இழந்துபோன காலைத் திரும்பப் பெறுவாய்" எனக் கூறி ஏதோ மங்கள வார்த்தை ஒன்றைச் சொல்ல, பனைமரம் மீண்டும் துளிர்த்தது. கிளியின் ஒற்றைக் காலும் குணமானது. பனைமரமும் பாசக்காரக் கிளியும் ஒன்றையொன்று தழுவிக்கொள்ள, அந்தப் பாச நிகழ்வுகளை ரசித்துக் கொண்டிருந்தார் முனிவர். கடவுள்தான் முனிவர் வடிவில் வந்ததாக உணர்ந்தது கிளி.

நீதி: கடவுளை நம்பினோர் கைவிடப்பட மாட்டார்கள்.







## ஆசானுக்கோர் வாழ்த்துப்பா

அகர முதலாய்
ஆகுடி வரைக்கும்
எங்கள் சிந்தை மறவா
சிகரங்களில்!
வாழ்த்துகின்றோம்
வணங்குகின்றோம்
வல்லவராய் நின்றுமைப்
போற்றுகின்றோம்
போதாது எனத் தெரிந்தும்
சாற்றுகின்றோம் கவி மாலை
சாகா வரம் கொண்ட ஆசான்களே!
கற்றது களிமண்ணளவாயினும்
கடலளவு நிறைவோடு
பெற்ற தாய்க்கும்
பிறந்த பொன்னாட்டுக்கும்
நல்லது செய்வோம்
நாங்களிங்கே
கல்வியெனும் செல்வத்துக்காய்
சொல்கொண்டு போர்தொடுப்போம்
அன்றி
வில்கொண்டும் வீற்றிருப்போம்
நல்லாசிரியர்களே
உங்களுக்காய்
நாங்கள் தவமிருப்போம்

*இ.கம்சியானி,*
*தரம் – 11,*
*கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தி.*



## சிறுவர்களே உணர்ந்திடுங்கள்

மனித வாழ்வில் பல பருவங்கள்
மழலைப் பருவம் தாண்டி
மகிழ்ந்திடும் சிறுவர் பருவம்
மனதிலே இன்றும் இனிக்கிறது.

கவலை என்பதே தெரியாது
கண்ணீரின் வலி அறியாது
காலம் தந்த பரிசு இது
வாழும் போது புரியாது

வாழ்வில் இலட்சியங்கள் அடைந்திட
வழிசமைக்கும் அத்திபாரம் இட்டிட
கல்வியும் ஒழுக்கமும் ஓங்கிட
கருத்தாய் எண்ணிடும் சிறுவரே

பாதை மாறினால் துன்பமே
மாயைகள் வாழ்வைத் தொலைக்குமே
மாற்றிடாதே உந்தன் இலக்கை
மீறிடாதே உயர்ந்தவர் வாக்கை

உண்மையாய் உனக்காய் உழைத்திடு
உலகும் உறவும் வியந்திடும்
உயரும் மட்டும் உன்னால் உயர்ந்திடு
உலகமே காலடியில் கண்டிடு

*ஜெ.வெலிசிற்றா றமணி*
*சில்லாலை*

# ஆஸிக்கு படகில் சென்ற 52 பேரைக் காணவில்லை

லண்டன், நவ.21

இலங்கையின் போர்ச் சூழலில் காணாமற்போயிருப்பவர்களின் பிரச்சினை ஒருபுறமிருக்க, இறுதிப் போர் நடைபெற்ற கடந்த 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டுச் சென்றவர்களில் 52பேரைக் காணவில்லை என்று அவர்களுடைய உறவினர்கள் தேடிக்கொண்டிருக் கின்றார்கள்.

–இவ்வாறு லண்டன் பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி இந்தியக் கடற்பரப்பில் இருந்து புறப்பட்டுச் சென்ற படகொன்றில் பயணம் செய்ததாகக் கூறப்படுகின்ற 52 பேருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய தகவல்கள் இதுவரை தெரியவில்லை.

இதனால் அவர்களின் உறவினர்கள் அவர்கள் இருக்குமிடத்தை அறிவதற்காக அலைமோதிக் கொண்டிருக்கின்றார்கள்.

இலங்கையிலும் இந்தியாவிலும் அப்போது செயற் பட்டுவந்த முகவர்களின் உதவியுடன் இந்தப் பயணத்தை மே ற்கொள்ளத் துணிந்திருந்தபோதே 52 பேர் காணாமற் போயிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆபத்து மிக்க அதேநேரம் பின்னர் தடை செய்யப்பட்ட இந்தப் படகுப் பயணத்துக்கு, பயணி ஒருவருக்கு இலங்கைப் பணம் 25 லட்சம் ரூபா கட்டணமாகக் கேட்கப்பட்டதாகவும், முற்பணமாக ஒரு லட்சம் ரூபா செலுத்திப் பயணத்தை மேற்கொள்ளலாம் என்றும், ஆஸ்திரேலியாவைச் சென்றடைந்த பின்னர் மிகுதிப் பணத்தைச் செலுத்தவேண்டும் என்றும் அவர்கள் நிபந்தனை விதித்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், 52 பேருடன் புறப்பட்டுச் சென்ற படகுக்கு என்ன நடந்தது என்பதுதெரியாமல் போனதையடுத்து, இலங்கையில் யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வந்த முகவர் தலைமறைவாகியிருப்பதாகப் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றார்கள்.

அதேநேரம் இந்தியாவில் இருந்து செயற்பட்ட முகவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், காணாமற்போன படகும், அதில் இருந்தவர்களும் எங்கு சென்றார்கள், அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல், அவர்களின் குடும்ப உறவினர்கள் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## ராஜிதவின் மகன் மீது நடவடிக்கை?

அமைச்சர் ராஜித சேனாரத்னவின் மகனும் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சதுர சேனாரத்னவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வது குறித்து அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அவன்காட் குறித்து அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவினால் வெளியிடப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, ஹரீனின் அலுவலகத்துக்குள் நுழைந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ள முயற்சித்ததாகச் சதுர சேனா


விற்பனைக்கு

1½மாத, 1மாத, 3கிழமை, 2கிழமை, 1கிழமை, 1நாள் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 999 4655


## மரண அறிவித்தல்

### தில்லைநாயகம் ஆறுமுகம்



பன்னாலை தெல்லிப்பழையைச் சேர்ந்தவரும் தற்போது இந்தியாவில் வசித்தவருமாகிய தில்லைநாயகம் ஆறுமுகம் நேற்று (20.11. 2015) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி தில்லைநாயகம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா ஞானாம்பிகை மற்றும் வேலாயுதம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நகுலாம்பிகையின் மைத்துனனும் சுப்ரதீபன், சபாரட் ணம் ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் இடம்பெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(66223)
(14.15.17)

தகவல் :வேலாயுதம்(சகோதரன்)
ஆஸ்திரேலியா

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா பசுபதி




புங்குடுதீவு - 12ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா பசுபதி கடந்த (17.11.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகமுத்து தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பர் - பூரணம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பசுபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தனபாக்கிய லெட்சுமி மற்றும் நிர்மலாதேவி காலஞ்சென்ற சாரதாதேவி மற்றும் சரோசாதேவி காலஞ்சென்ற விநாயக மூர்த்தி (கிராம சேவையாளர், புங்குடுதீவு) மற்றும் கலைமதி (சுவிஸ்) காலஞ்சென்ற சாந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ஓங்காரநாதன் மற்றும் சேனாதிராசா, சண்முகம், ஜெயகுமாரன் (அருணகிரி புங்குடுதீவு முன்னாள் தனியார் வாகன உரிமையாளர்), யோகராணி (புங்குடுதீவு அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை அதிபர்), யோகராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12ஆம் வட்டாரம், புங்குடுதீவு. தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி ஞானேஸ்வரி இராமநாதன்

விநாயகர்வீதி, நல்லூர் வடக்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி இராமநாதன் 20.11.2015 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், செல்லத்துரை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், இராமநாதனின் (இளைப்பாறிய உதவி விவசாயப் பணிப்பாளர் - திருநெல்வேலி) அன்பு மனைவியும், உஷானி (பயிலுநர் ஆசிரியர் - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), கிரிஷாணி (மாணவி - இராஜரட்டை பல்கலைக்கழகம் ) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரமணானந்தன் (நமீபியா), இரத்தினேஸ்வரி, இராஜராஜேஸ்வரி, சர்வானந்தன் (லண்டன்), மகாதேவன் (யாழ்.மாநகரசபை), சத்தியானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலராணி (நமீபியா), சண்முகலிங்கம், ராஜேந்திரன், வனஜா (லண்டன்), பத்மினி (யா/இந்து மகளிர் கல்லூரி), தங்கமணி (லண்டன்), விநாயகம்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சண்முகநாதன் (கனடா), கனகரட்ணம் (பிரான்ஸ்), கோகிலாதேவி, கோணேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
நல்லூர்.


(66226)
(11,15,17)

தகவல்:
குடும்பத்தினர்.
077 653 1820

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சிவநாதன் (கணநாதன்)

மண்ணில்: 26.05.1955 விண்ணில்: 16.11.2015



யாழ். புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Thun ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவநாதன் **16.11.2015** திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை நல்லதங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பாக்கியராணியின் (ராணி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற பத்மராணி, தனசிங்க நாதன் (இலங்கை), காலஞ்சென்ற தில்லைநாதன், தவராணி(இலங்கை), நவராணி (கனடா), விஜயராணி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மாணிக்க வாசகர் (கனடா), பரமேஸ்வரி (சுவிஸ்), இராஜேஸ்வரி (சுவிஸ்), மகேஸ்வரி(இலங்கை), காலஞ்சென்ற குணமணி, ஜெகநாதன் (பிரித் தானியா), செல்லையா (கனடா), நிர்மலா(இலங்கை), பரிமளாதேவி (இலங்கை), காலஞ்சென்ற சாந்தலிங்கம், சிற்ஷரூபன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தங்கலட்சுமி(கனடா), பாலசிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் (சுவிஸ்), சின்னத்துரை மற்றும் குணேந்திரன் (சுவிஸ்), புஸ்பலாதேவி (பிரித்தானியா) ஆகியோ ரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.11.2015 திங்கட்கிழமை சுவிஸ்சில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகேஸ்வரி குடும்பம்.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகரத்தினம் இரஞ்சிதமலர்



05ஆம் வட்டாரம், வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி **கனகரத்தினம் இரஞ்சிதமலர்** அவர்கள் 19.11.2015 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகரத்தினம் (மண்டைதீவு - 4) அவர்களின் அன்பு மனைவியும், மண்டைதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை அரியமணி தம்பதிகளின் அன்பு மருமகளும், முகுந்தன் (கொழும்பு), தர்சினி (கரிகணன் தனியார் நிறுவனம்), சுகந்தன் (கொழும்பு), அயந்தன் (சைபிரஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும், செல்வக்குமாரி (கொழும்பு), ஜென்சி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிஷாந், டனுஷாந், ரஸ்மிகா ஆகியோரின் ஆருயிர் பேத்தியும், காலஞ்சென்றவர்களான துரைராசா (தபால் ஊழியர் - வேலணை), யோகராசா மற்றும் இராதநாயகி, கமலாதேவி, மல்லிகாதேவி, கேதீஸ்வரன் (புங்குடுதீவு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வரத்தினம், காலஞ்சென்றவர்களான பத்மநாதன் (ஆசிரியர்- மண்டைதீவு), பன்னீர்ச்செல்வம் மற்றும் குலசிந்தாமணி (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) ஆகியோரின் அருமை மைத்துணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22.11.2015 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மு.ப. 10.00 மணியளவில் சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

கந்தன் கருணை,
வேலணை-5

## அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பு

கடந்த 22.10.2015 வியாழக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

அமரர்

**துரைசிங்கம் கமலம்மா** (கமலம்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 19.11.2015 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் புனித வில்லூன்றியில் நடைபெற்றன. சபிண்டீகரணம் இன்று (21.11.2015) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

'கன்னா வாசா'
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னப்பிள்ளை கதிரமலை



அம்பனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், 06, இராணி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை கதிரமலை நேற்று (20.11.2015) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவி-பூதாத்தை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான வைரவி-சீதேவி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கதிரமலையின் (ஓய்வுபெற்ற விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், Dr. இராஜசேகரன் (கோப்பாய் அரசினர் வைத்தியசாலை), சுமதி (லண்டன்) சுகந்தி (லண்டன்) சுகுணா (கனடா) சுதர்சனா (World Vision-Colombo) ஆகியோரின் அன்புத் தாயும், Dr. திருமகள் (யாழ்.போதனா வைத்தியசாலை), திலகேந்திரன் (லண்டன்) சற்குணம் (லண்டன்), உதயகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, வல்லிபுரம், லட்சுமிபிள்ளை, அப்பையா மற்றும் பசுபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தாக்ஷாயினி, பிரகலாதன், கேதாரணி, பாகுலன், பாரிதன், கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Dr. K. இராஜசேகரன் (மகன்)
(0777 167 929)

(66235) (10.17)

### திருமதி தங்கம்பிள்ளை வல்லிபுரம்



விக்கினேஸ்வரா வீதி தையிட்டியை பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி தாவடி வடக்கை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்பிள்ளை வல்லிபுரம் நேற்று (20. 11. 2015) வெள்ளிக் கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ் சென்ற முன்னாள் இ.போ.ச சாரதியான வல்லிபுரத்தின் மனைவியும் கமலினி, பாமினி (கனடா), சிவகுமார், யசோதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வரத்ணம், சண்முகராஜா (கனடா), ஜெய தர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர் களான துரைச்சாமி, இராசையா, அமிர்தலிங்கம் மற்றும் வேலாயுதம், சிங்கராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : மகன்
சிவகுமார்
(மினிபஸ் உரிமையாளர்)
077 5488 849

மானிப்பாய் வீதி,
தாவடி வடக்கு.

(66231)

# பிரதமரிடம் கேள்வி கேட்க, எம்.பிக்களுக்குச் சந்தர்ப்பம்

## வியாழக்கிழமைகளில் 30 நிமிடங்கள் அவகாசம்

கொழும்பு, நவ 21

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் தன்னிடம் நேரடியாகக் கேள்விகளைக் கேட்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக் கிரமசிங்க தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

அதன்பிரகாரம் ஒவ்வொரு வியாழக்கிழமையும் நாடாளுமன்றத் தொடர் ஆரம்பமாகியதும் 30 நிமிடங்கள் இதற்காக ஒதுக்கப்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபா நாயகருக்கு கடிதமூலம் அறிவித் துள்ளதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரதமரிடம் கேட்கவுள்ள கேள்விகளை முன்கூட்டியே பிரதமரின் காரியாலயத்துக்கு அனுப்பிவைக்க வேண்டுமென சபாநாயகர் கரு ஜயசூரிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்கவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

உறுப்பினர்கள் பிரதமரிடம் நேரடியா கக் கேள்விகளைக் கேட்பதற்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளமை ஜனநாயக நாடொன்றில் மேற்கொள்ளப்படும் பயனுள்ள முன்மாதிரியாகும் என சபாநாயகர் தெரிவித்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (த)


நியத்த ஜய
வெற்றி வாரம் : 412
திகதி : 2015-11-20
வர்ணம் : நீலம்

19 22 53 59 C

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
16,629,660/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு: 1919

லக்கின
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 20.11.2015 | வெற்றி வாரம் 1905 | வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள்
14 28 30 31
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி
3,140,300/=

பெறுமதியான "டீ-செட்" வென்ற டிக்கட் தொடரிலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| குருநாகல் | 500761296-8-18 | கொழும்பு | 500780769-1-01 |
| களுத்துறை | 500765284-8-18 | மாத்தறை | 500760756-9-09 |
| குருநாகல் | 500766041-0-40 | பதுளை | 500766458-2-12 |
| களுத்துறை | 500773612-2-32 | திருகோணமலை | 500767900-3-23 |
| கம்பஹா | 500774059-1-01 | யாழ்ப்பாணம் | 500769849-8-38 |
| கண்டி | 500777829-4-34 | அம்பாறை | 500769964-1-21 |
| கண்டி | 500778546-7-37 | மட்டக்களப்பு | 500770505-1-01 |
| கொழும்பு | 500780735-5-05 | | |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 1919



## வேலைவாய்ப்பு


1). Web Designer
2). PHP Programmer
3). Marketing Reps

மேற்படி பணிநிலைகளுக்கு தகுதியானவர்கள் தங்களது சுயவிபரக் கோவையினை கீழுள்ள தபால் முகவரி அல்லது மின்னஞ்சலுக்கு உடனடியாக அனுப்பி வைக்கவும்.

551A, Kasthuriyar Road, Jaffna.
Tel: 021 221 6 222
email : onlinew4u@gmail.com

2Lanka.com Good Gift


## துயர் பகிர்கின்றோம்



உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின்
கௌரவ ஆலோசகர்

**சின்னத்துரை தில்லைமகாராசன்**

அவர்கள் 17.11.2015 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

உடுவில்
இந்து இளைஞர் மன்றம்.

(66228)

## மரண அறிவித்தல்

### திருமதி லட்சுமி சின்னத்துரை



தண்ணித்தாழ்வு கட்டுவனைப் பிறப்பிடமாகவும் சுதுமலை மேற்கு மானிப்பாயை வசிப்பிடமாவும் கொண்ட திருமதி லட்சுமி சின்னத்துரை நேற்று (20.11.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியினரின் மகளும் ஐயம்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற சின்னத்துரையின் மனைவியும் காலஞ்சென்றவர்களான நல்லம்மா, சின்னத்துரை மற்றும் நாகம்மா, அன்னம்மா, செல்வராணி காலஞ்சென்றசெல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சூரிய குமார (பிரான்ஸ்), ரஞ்சினி (ஜேர்மனி), ஜெயக்குமார் (சுவிஸ்), லலிதாதேவி (பிரான்ஸ்), நந்தினி, பாமினி (பிரான்ஸ்), ராஜ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் ரஞ்சினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற அகிலன் மற்றும் சாந்தகௌரி (சுவிஸ்), சாந்தரூபன் (பிரான்ஸ்), சிவானந்தன், அருள்நேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பில்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பிள்ளைகள்.
T.P No : 0777 042 698, 077 482 4609

(66239)

## பல்கலை மாணவர்களுக்கு உதவித்தொகை அதிகரிப்பு

கொழும்பு, நவ.21

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்விக்கான உதவித்தொகை 1500 ரூபாவால் அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வாறு உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

இதன் பிராகாரம் தற்பொது 2ஆயிரத்து 500 ரூபாவாக வழங்கப்படும் கல்விக்கான உதவித்தொகை 4ஆயிரம் ரூபாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வருடாந்த கல்விக்கான உதவித் தொகை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 25ஆயிரமாக உள்ளீர்க்கப்படுவதாக உயர்கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (து-வ)

## பொதுக்கூட்டம்

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுச் சபையின் விசேட பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத்தின் நெறியாளர் குழுவுக்கு எதிராகப் பொதுச்சபை உறுப்பினர்கள் 61 பேர் கையொப்பமிட்டுச் சமர்ப்பித்த நம்பிக்கை இல்லாப் பிரேரணை விசேட பொதுக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது. (கு-11)


## வீடு/அறை வாடகைக்கு உண்டு

யாழ் நகரில் அமைதியான சூழலில் வீடு மற்றும் அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 367 3309



## மணமகள்கள் தேவை

◆ 83 இல் பிறந்த 4 இல் செவ்வாய், 53 பாவமுடைய MBBS டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

◆ 83 இல் பிறந்த 2 இல் சூரியனும், செவ்வாயும், 49½ பாவமுடைய அரச நிறுவனத்தில் தொழில் நுட்பவியலாளராகப் பணிபுரியும் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.

◆ 78 இல் பிறந்த 7 இல் சூரியனும் செவ்வாயும் 25 பாவமுடைய ஜேர்மன் பிரஜா உரிமை பெற்ற இஞ்சினியர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.

◆ 84 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 10 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை.

◆ 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 35 பாவமுடைய அமெரிக்க பிரஜா உரிமை பெற்ற இஞ்சினியர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.

கமலக்கண்ணன் திருமண சேவை
இல.62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முாவடி.

## பத்து வருடங்களின் பின்னர் 31 ரயில் சாரதிகள் நியமனம்

கொழும்பு, நவ.21

சுமார்பத்துவருடங்களுக்குப் பிறகு இலங்கை ரயில்வே திணைக்களம் வெளியிலிருந்து 31 ரயில் சாரதிகளைப் பணியில் அமர்த்தியுள்ளது.

தேசிய உயர்தொழில்நுட்பக் கல்வியில் டிப்ளோமா பெற்றவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இவர்கள் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இரண்டு வருடப் பயிற்சிக்காலத்தின் பின் நிரந்தர மாக்கப்படுவார்கள் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 180 பேர் தோற்றியதாகவும், அவர்களுள் சித்தியடைந்த 88 பேரில் உயர்சித்தி பெற்ற 31 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களுக்கு ரயில் எஞ்சின்கள், ரயில் பாதைகள், சமிக்ஞைகள் உள்ளிட்ட பல விடயங்களில் தீவிர பயிற்சி அளிக்கப்படும் எனவும் ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் விஜய அமரதுங்க தெரிவித்தார்.

எதிர்காலத்தில் மேலும் 29 பேர் ரயில் சாரதிகளாகத் தேர்ந்தெடுக் கப்படவுள்ளனர் எனவும், ரயில்சேவையை மேலும் மேம்படுத்த சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (து-சி)

## ஐ.ம.சு. முன்னணியை பலமாக்க மேலும் சில கட்சிகள் இணைப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியை மேலும்பலப்படுத்துவதற்காகத் தற்சமயம் அந்த முன்னணியிலுள்ள மூன்று கட்சிகளுக்கு மேலதிகமாக மேலும் சில கட்சிகளைச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம செயலாளர், அந்தக் கட்சியின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தொகுதி அமைப்பாளர்களுக்கும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிச் சபையில் அங்கம் வகிக்கும் கட்சி உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம செயலாளர் துமிந்த திஸாநாயக்க, கடந்த 12ஆம் திகதி அனுப்பியுள்ள கடிதத்தில் எதிர் வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் முன்னணி வெற்றி பெறுவதை உறுதிசெய்து கொள்வதற்காகவே மேலும், சில கட்சிகளுடன் இணைந்து தனது பலத்தைப் பெருக்கிக்கொள்ள முடிவு செய்துள்ளதாகவும் இந்தவிடயத்தில் கட்சி அங்கத்தவர்கள் சகலரினதும் உச்சபட்ச ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரி

New Lovers Corner

Grand opening

காகில்ஸ் சதுக்கத்தில்

New Lover's Corner இன்

3 ஆவது Beauty Parlour (பியூட்டி பாலர்)

திறப்பு விழா

**23.11.2015 திங்கட்கிழமை ந.ப. 12.11 - ந.ப. 12.29** வரையுள்ள சுபநேரத்தில் எமது 3ஆவது அழகுகலை நிலையத்தை (பியூட்டி பாலர்) அதி நவீன வசதிகளுடன் **யாழ்ப்பாணத்தில் காகில்ஸ் சதுக்கத்தில்** திறக்கவுள்ளதை எமது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்றைய தினத்தில் இருந்து 23.12.2015 வரை 1000/- இற்கு மேல் அழகு சேவையைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு 15% விலை கழிவு வழங்கப்படும் என்பதையும் மிகவும் அனுபவமுள்ள நேர்த்தியான அழகு கலை நிபுணர்களால் சேவை வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

- எமது சேவைகள் சில -

- மணப்பெண் அலங்காரம்
- முடி ஸ்ரேட்டநிங் பேர்மிங்
- கெயார்கட் கெயார்கலர்
- கால் கை நக ஒப்பனை

மற்றும் Facial ரீட்மெண்ட்



அத்துடன் திருமண வைபவங்கள் மற்றும் பூப்புனித நீராட்டு விழாவிற்குரிய சகலவிதமான மணப்பெண் நகை ஆபரணங்களை எமது எந்தவொரு கிளையிலும் மலிவாக வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

(அண்மையில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை)

அருகில் உள்ள எமது Lover's Corner கிளைக்கு விஜயம் செய்யுங்கள்

**New Lover's Corner & Beauty Parlour**

No:12, 1ஆம் மாடி. காகில்ஸ் சதுக்கம். யாழ்ப்பாணம்.

021 222 3020 021 222 7070

New Lover's Corner & Beauty Parlour

No:4, ஆலடிச்சந்தி, மானிப்பாய்.

021 225 6444

New Lover's Corner & Beauty Parlour

No:9, கனகபுரம் வீதி, உதயநகர், கிளிநொச்சி.

021 228 5111

நவீன, எடை குறைந்த இலகுவாகச் செயற்படக் கூடிய செயற்கைக் கால்கள் வழங்கல்

Rotary

Be a gift to the world

றோட்டறி மாவட்டம் 2982 – சேலம் மற்றும் யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் ஆகிய இணைந்து போரினால் கால்களை இழந்தவர்களுக்காக ஒரு தொகுதி செயற்கைக் கால்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



- நவீன தொழில் நுட்பத்தில் வடிவமைப்பு
- பாரம் குறைந்த கால்கள்
- இலகுவான பராமரிப்பு
- உறுதித் தன்மை கூடியது

இந்தியாவிலிருந்து வருகை தரும் சிறப்பு வைத்தியர் குழுவினரால் எதிர்வரும் 23.11.2015, திங்கட்கிழமை, முற்பகல் 08.30 மணி முதல் கால் அளவுகள் எடுக்கப்படவுள்ளன.

**பதிவுகளுக்கு : 021 493 6666**

**யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்**

359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்






**கடஹபொல பேன் மருந்து**

100 வீதம் ஆயுர்வேத வேதியியல் பொருள்கள் மூலம் தயாரிக்கப்பட்டது. பெரியவர்கள் சிறியவர்களது தலையில் உள்ள பேன் மற்றும் பேன் முட்டைகளை நீக்கும் திறன் கொண்டது.

வடபகுதி ஏக விநியோகஸ்தர்:-

**சிவசம்பு மருந்தகம்**

இல.03, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**021 222 1783**

077 87 52 491

**Kadahapola Dharmaratna Ausadalaya (Pvt)Ltd.**

Kuliyapittiya Road, Kadahapola, Narammala. Ay.Reg.No:6/2/1/09/2

**உடன் தேவை**

உரும்பிராய் கற்பகவிநாயகர் திருமண மண்டபத்துக்கு கீழ்வரும் பதவிகளுக்கு உடனடியாக வேலையாள்கள் தேவை.

1) **நிர்வாக உத்தியோகத்தர் (ஆண்)** (Office Clerk)
2) **வரவேற்பாளர் (பெண்)** (Receptionist)

மேலே குறிப்பிட்ட பதவிகளுக்கு தகுதியானவர்கள் தங்கள் சுயவிவரக்கோவை அடங்கிய விண்ணப்பத்தினை கீழ் உள்ள முகவரிக்கு 30.11.2015 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும். தகுதியானவர்களுக்கு அவர்களின் திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

(66212)(10.15.17)

**கற்பக விநாயகர் திருமண மண்டபம்**

இல.69, பலாலி வீதி, உரும்பிராய்.



சுவாமியே சரணம் ஐயப்பா

**கந்தர்மடம்**

**ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை**

கந்தர்மடம் ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபையின் 18ஆவது ஆண்டு மகரஜோதிப் பெருவிழாவை முன்னிட்டு ''மணிகண்ட மணியமுதம்'' எனும் இறுவெட்டு வெளியீடும் ''மணிகண்ட நாதம் பாகம் II'' நூல் வெளியீட்டு விழா

**காலம் : கார்த்திகை 5ஆம் நாள் 21.11.2015 சனிக்கிழமை**
**நேரம் : முற்பகல் 10.00 மணி**
**இடம் : கந்தர்மடம் செட்டியந்தாழ்வு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்**

எமது சபையின் குருசாமி சிவஸ்ரீ நா.பாலஸ்கந்தரூபக் குருக்கள் (ரூபன் குருசாமி) அவர்களுடைய 18ஆவது ஆண்டு தொடர் சபரிமலை யாத்திரையை முன்னிட்டு இவ்விழா நடைபெறுகிறது.

**இறுவட்டு ஆக்கம்**
திருவாளர் செ.திருமாறன் (நாச்சிமார் கோவிலடி பிரபு சாமி)

**முகவுரை**
கலைமாமணி நாகை முகுந்தன் (தென் இந்தியா)

**பாடலாசிரியர்**
திரு. வேலணையூர் சுரேஸ்

**பாடியவர்கள்**
பக்திமாமணி சாஸ்தாதாசன் (தென் இந்தியா)
செ.திருமாறன், தி. வைராஜ். (நாச்சிமார் கோவிலடி)

**இசை**
கலைமாமணி கே. வீரமணி சோமு (தென் இந்தியா)

**வரவேற்புரை**
மாணிக்கவாசகர் கஜேந் சுவாமி அவர்கள்

**தலைமை**
பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஸ்ண ஐயர் அவர்கள்
(வாழ்நாள் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்)

**ஆசியுரை**
சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக் குருக்கள்
(போசகர், ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட ஆலயம்)
சிவஸ்ரீ தானுமகாதேவ சிவாச்சாரியர்
(அதிபர் தர்மசஸ்தா குருகுலம் இணுவில்)

**பிரதம விருந்தினர்**
திரு. வேதநாதன் அவர்கள்
(தலைவர் இந்து நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழம்)

**சிறப்பு விருந்தினர்கள்**
செல்லத்துரை இராஜேஸ்வரி
(கோண்டாவில் இராஜேஸ்வரி உரிமையாளர்)
திருவாளர் வேலணையூர் சுரேஸ் (பாடலாசிரியர்)
திருவாளர் க. தர்மசேகரம்
(தலைவர் கருவிமாற்றுத்திறனாளிகள் சமூகவளநிலையம்)

**கௌரவ விருந்தினர்கள்**
சிவஸ்ரீ கி. ஹரிஹரசுதசிவாச்சாரியார்
(குருசாமி, கோண்டாவில் சபரிச ஐயப்ப தேவஸ்தானம்)
சிவஸ்ரீ சாமி ஜெகதீஸ்வர சிவாச்சாரியார்
(18ஆம் படி ஐயப்பன், குருசுவாமி கோண்டாவில்)
சிவஸ்ரீ தா.வாசுதேவ சிவாச்சாரியார்
(தாவடி ஐயப்பன் குருசாமி, உரும்பிராய் சிவதர்ம சாஸ்தா தேவர்தானம்)
சிவஸ்ரீ ச.குகனந்தன சிவாச்சாரியார்
(புன்னாலைக்கட்டுவன் ஐயப்பன் ஆலய)
பிரம்மஸ்ரீ சுந்தரேஸ்வர சர்மா குருசுவாமி
(நவிண்டில் ஐயப்பன் ஆலயம்)
திரு. அமுர்த கடேஸ்வரன் (செல்வம் சுவாமி)
(18ஆம் படி குருசுவாமி)
திரு. செல்வம் குருசுவாமி (இணுவில் ஐயப்பன் ஆலயம்)
திரு. க. பாலசுப்பிரமணியம்
(குருசுவாமி, விளான் மணிகண்டன் ஆலயம்)
அமரர் இந்து தாசன் சுவாமி அவர்களின் மகன்
தா. பிரசன்னா (தாவடி மதுரை சடகேவசேவா சங்கம்)
ஸ்ரீலஸ்ரீ அருணாச்சலக் குருக்கள் (கட்டுவன் ஐயப்பன் ஆலயம்)

- குருசுவாமி, தட்டாதெரு ஐயனார் ஆலயம்
- குருசுவாமி, அராலி ஐயப்பனார் ஆலயம்
- குருசுவாமி, சுன்னாகம் ஐயனார் ஆலயம்
- குருசுவாமி, கல்வியங்காடு ஐயப்பன் ஆலயம்
- குருசுவாமி, சீரணி ஐயப்பன் ஆலயம்

**இறுவட்டு வெளியீட்டு விழாவும் நூல் வெளியீட்டு விழாவும்**

**நன்றியுரை**
ப.விஸ்ணுகுமார் (விஸ்ணுசாமி)

குருசுவாமிமார்கள், சாமிமார்கள், அடியார்கள் ஆலய நிர்வாகிகள் அனைவரையும் விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

**கந்தர்மடம் மணிகண்ட சபை**
**0776391055**

# நாட்டு மக்களை

சலுகைகளை வழங்கும் வகையில் இந்த வரவு -செலவுத் திட்டம் அமைந்துள்ளது என்றும் விமர் சனம் முன்வைக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசின் 2016ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்ட உரையை நிதி அமைச்சரான ரவி கருணாநாயக்க நேற்று சுமார் 4 மணித்தியாலங்களுக்கு மேலாக நிகழ்த்தினார்.

இலங்கையின் 69 ஆவது வரவு-செலவுத் திட்ட உரையை 20 ஆவது நிதி அமைச்சரான ரவி கருணாநாயக்க பிற்பகல் 2.05 மணிக்கு ஆரம்பித்து, மாலை 6.30 மணி வரை உரையாற்றினார்.

**கறுப்புப் பெட்டியுடன் வந்த நிதி அமைச்சர்**

நாடாளுமன்றம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலை மையில் பிற்பகல் 2 மணிக்கு கூடியது. வரவு- செலவுத் திட்ட உரையை நிகழ்த்துமாறு நிதி அமைச்சருக்கு சபாநாயகர் அறிவிப்பு விடுத்ததையடுத்தே, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கறுப்புப் பெட்டியுடன் சபைக்குள் வந்து தனது ஆசனத்திற்குச் சென்று, கையில் கொண்டுவந்த கறுப்புப் பெட்டியைத் திறந்து உரையை ஆரம் பித்தார்.

தேசிய அரசின் முதலாவது வரவு-செலவுத் திட்ட உரையை செவிமடுப்பதற்காக முதலமைச்சர் கள், ஆளுநர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், வெளிநாட்டு மற் றும் உள்நாட்டு வர்த்தகர்கள் எனப் பல தரப்பினர் கலரியில் அமர்ந்திருந்தனர்.

**தனியாக வந்த மஹிந்த**

வரவு-செலவுத்திட்ட உரை பிற்பகல் 2.05 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டபோதும், 2.20 மணியளவிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் சபைக்குள் வந்தார். இதேவேளை, மகிந்த ராஜபக்ச சுமார் 4.55 மணியளவில் சபைக்குள் தனியாக வந்து, சிறிது நேரம் ஆசனத்தில் அமர்ந்திருந்து பின்னர் சபையிலிருந்து வெளியேறினார். ஆசனத்தில் அமர்ந்திருந்தபோது எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுடன் ஒரு சில வார்த்தைகளைப் பேசினார்.

**சோர்வடைந்த சபை**

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க சுமார் 4 மணித் தியாலங்களுக்கும் மேலாக நீண்ட வரவு-செலவுத் திட்ட உரையை நிகழ்த்தினார். இதனால், சபை யில் இருந்த அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் சோர்வடைந்து போயிருந்ததை அவதானிக்க முடிந்தது. சிலர் இடையிடையே எழுந்துவெளியேசெல்வதும், உள்ளே வருவதுமாக இருந்தனர்.

வழக்கமாக வரவு-செலவுத் திட்ட உரை நிகழ்த்தப்படும் போது ஆளும் மற்றும் எதிர்த்தரப்பினர் அதை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்பதுடன், முன்மொழிவுகள் அறிவிக்கப்படும் போது மேசையைத் தட்டி வரவேற்பையும் தெரிவிப்பர். சபையும் பரபரப்பாக இருக்கும். ஆனால், இம்முறை நிதி அமைச்சரின் உரைக்கு ஆளுந்தரப்பினர்கூட மேசையைத் தட்டி வரவேற்பளிக்கவில்லை. அருகிலிருந்தவர்களுடன் கூடிக் கதைத்தவாறும், தூங்கி விழுந்தவாறும் இருந்தனர்.

நிதி அமைச்சரின் உரை இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்திலேயே சிலர் சபையிலிருந்து வெளியேறிச் சென்றனர். இருப்பினும், தனது நீண்ட உரையைத் தொடர்ந்த நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மாலை 6.30 மணிய ளவில் நிறைவு செய்தார். இதையடுத்து, இடம் பெற்ற தேநீர் உபசாரத்தில் அனைவரும் கலந்துகொண்டனர்.

அவரது உரையின் விவரம் வருமாறு:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தனித்துவமான தலைமைத்துவமும், வழிகாட்டலும் அனைத்துத் துறைகளிலும் வெற்றியைக் காணக்கூடிய வரவு செலவுத்திட்டமொன்றை முன்வைப்பதற்கு வழி வகுத்துள்ளது.

2016 ஆம் ஆண்டுக்கான இந்த வரவு செலவுத்திட்டமானது,சகல இலங்கையருக்கும் புதிய பொருளாதார மற்றும் சமூக ஒழுங்குகளை உருவாக் கக்கூடியது.

என்னால் முன்னர் முன்வைக்கப்பட்ட இடைக் கால வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் வழங்கிய சலுகைகள் மற்றும் நன்மைகள் தொடர்பாக நான் விளக்கமளிப்பதற்கு விரும்பாததோடு, எதிர்வரும் ஆண்டிற்கு விவேகமுள்ளதும், ஒத்திசைவானதுமான பொருளாதாரக் கொள்கைகளை உபயோகிப்பதன் மூலம் நாட்டு மக்களின் நன்மை கருதி மேலும் சலுகைகளை வழங்குவதற் கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர் பார்க்கின்றேன்.

கடந்த அரசின் பொருளாதாரக் கொள்கைகள் அடிப்படையில் தோல்வியடைந்ததாகவே காணப்பட்டது. தாங்கிக் கொள்ள முடியாத கடன் சுமையொன்றை இந்தப் பொருளாதாரம் கொண் டிருந்திருந்தது. அரசிறை வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக 1990 ஆம் ஆண்டின் அரசிறை வருமானத்துடன் ஒப்பிடுகை யில், அரைப்பங்கை விட வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும்,உற்பத்தித் திறனற்ற முதலீடுகள் அரச நிதிக் கட்டமைப்பினை பலவீனப்படுத்தியுள்ளது டன், வினைத் திறனற்ற அரசுடைமை தொழில்முயற்சிகளுடனும் மற்றும் ஊழல் நிறைந்த பெறுகைச் செயன்முறைகள், முறையற்ற வெளி நாட்டுக் கடன் பெறுகைகள், ஒப்பந் தங்களின் வழங்கல்கள் போன்றன நல்லாட்சிக்கும், வெளிப்படைத் தன்மைக்கும் கேலிக் கூத்தாக அமைந் துள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதாரம் தவறாக வழிநடத்தப்படும்போதும், தவறான முறையில் கையாளப்படும் போதும், அந்நாட்டின் எதிர்காலம் அபாயகரமான ஆபத்துக்களுக்கு முகங்கொடுக்க நேரிடு வதோடு, கடந்த ஆட்சிக் காலத்தின் போதான பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாக இலங்கையும் அவ்வாறான பயங்கரமான வலய மொன்றுக்குள் பிரவேசித்திருந்தது.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகள் குறைபாடுகளைக் கொண்டு காணப்பட்டதோடு, நாம் கடும் பொருளாதாரத் தடைகளுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலைமைக்கும் உள்ளாக வேண்டியிருந்ததுடன் முன்னர் எமக்கு ஆதரவ ளித்த நாடுகள் கூட வரையறுக்கப்பட்ட உதவி களை வழங்கவே முனைந்தமையினால், நாம் எமது பொருளாதாரச் செயற்பாடுகளைத் தனியா கவே மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற் பட்டது. அரச கொள்கையானது வீண்விரயம் மற் றும் ஊழல் என்பன முன்பு அறிந்திருக்கப்படாத மட்டங்களை எட்டக்கூடிய வாறாக இல்லை.

மேல், நடுத்தர வருமானப் பொருளாதாரமொன் றினை நோக்கி மாற்றமடைவதற்கான குறிக்கோள்களுடன் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால உபாயங்களை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட அபிவிருத்திச் சவால்களை கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்ட இலக்குகளையும், குறிக்கோள்களையும் அடைவதே எமது எதிர் பார்ப்பாகும். நாம் ஒரு சில கோடீஸ்வரர்களுக்கு மாத்திரம் ...த்தினை ஏற்படுத்திக் கொடுப்பதனை நோக்கமாகக் கொள்ளவில்லை. மில்லியன் கோடீஸ்வரர்களை உருவாக்குவதற்கான வழியை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

இந்த நிலைமையின் கீழ், பிரதமரினால் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி இந்தச் சபையில் முன் வைக்கப்பட்ட கொள்கைக் கூற்று 2016 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டத்திற்கு அடித் தளமாக அமைந்தது. அதன் மூலம் பின்வரும் இடைக்கால உபாயங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

ஒரு மில்லியன் வேலை வாய்ப்புக்களை உருவாக் குதல், வருமான மட்டங்களை விருத்தி செய்தல், கிராமியப் பொருளாதாரங்களை அபிவிருத்தி செய்தல். கிராமிய மற்றும் தோட்டத்துறைகளிலும், நடுத்தர வகுப்பைச் சார்ந்தவர்களினதும் மற்றும் அரச ஊழியர்களினதும் ஆதன உரிமையை உறுதிப்படுத்தல். பரந்த மற்றும் உறுதி வாய்ந்த நடுத்தர வகுப்பினரை உருவாக்குதல்.

இந்தக் கொள்கைக் கூற்றானது குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குவதோடு, இந்த வரவு-செலவுத்திட்டத்துக்கான அடிப்படையாகவும் அமைந்துள்ளது. இலங்கையின் பொருளாதாரத்திற்கு நீண்ட கால சாதகமான பெறுபேறுகளைக் கொண்டு வரக்கூடிய தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த விரிவான கொள்கைகளையும் உள்ளடக்கியுள்ளது.

பொருளாதார மற்றும் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான சரியான பொருளாதார அடித்தளமொன்றின் தேவையினை இதன் மூலம் தெளிவாகக் காட்டப்படுகின்றது.

கடந்த அரசின் திட்டமிடப்படாத உட்கட்டமைப்பு வசதிகளான அதி வேகப்பாதைகள், துறைமுகங்கள் மீது சீனாவிடம் இருந்து பெற்றுக் கொள்ளப் பட்ட அதி கூடிய வட் டியிலான படுகடன்கள் நாட் டிற்குப் பெரியளவிலான படுகடன் சுமையை ஏற்படுத்தியது மாத்திரமல்லாமல், பெரியளவிலான படுகடன் தீர்ப்பனவுகளையும் ஏற்படுத்தியது.

இந்த அதி செலவு கூடிய படுகடன்களானது முதிர்ச் சியடையும் படுகடன்களை திருப்பிச் செலுத்து வதற்குப் பதிலாக நீண்ட கால முதலீடுகளானது மேற்கொள்ளப்பட்டதோடு, சில முதலீடுகள் எந்த வித வருமானத்தையும் உழைக்கப் போதியதாக இல்லை. குறிப்பாக, கடந்த அரசினால் அமைக்கப்பட்ட விமான நிலையத்தில் உள்ளூர் விமானங்கள் கூட, தரை இறக்கப்படுவதில்லை. அம்பாந்தோட்டை துறைமுகம் கூட எதிர்பார்க்கப்பட்டது போல கப்பல் துறை நடவடிக்கைகள் தொடர்பாக மத்தியப்படுத்தப் பட்டதில்லை என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

அந்தத்துறைமுகத்திற்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கையும் குறைவு என்பது நாம் அறிந்த உண்மையாகும். எது எவ்வாறு இருப்பினும், அத்துறை முகம் மற்றும் விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு தீர்மானத்திற்குப் பங்களிப்புச் செய்த அரச தலைவர்களின் பெயர்களானது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவற்றைப் பார்வையிட அங்கு சுற்றுலா செல்பவர்களுக்கு மாத்திரமே காணக் கிடைக்கின்றது.

எமக்குத் தெரிந்த வகையில் கடந்த அரசில் குறிப்பிட்ட ஒரு குழுவினரே பலன்களை அனு பவித்தனர். அதாவது அரசியல் நண்பர்கள் மற்றும் தலைவரின் புகழ் பாடியவர்களுக்கு விசேட சலுகைகள் மற்றும் நன்மைகள் செய்து கொடுக்கப்பட்டன.

**வரி வருமானம்**

திட்டமிடப்பட்ட அத்தியாவசிய செலவினங்களை ஈடு செய்வதற்கு போதிய வருமானத்தை உரு வாக்குவதற்கான ஆற்றலினை ஏற்படுத்துகின்ற ஏதேனும் அர சிறை முறைமையினை உறுதிப் படுத்த வேண்டியது அவசியமாகும். துரதிர்ஷ்டவ சமாக இலங்கையில் இந்த முறைமை காணப் படவில்லை.

வருமானத்தை அதிகரிப்பதற்கான தனிப்பட்ட வரி மறுசீரமைப்புகள் அரசிறை வருமானத்தினை உறுதிப்படுத்துவதற்கு பங்களிக்கப் போவதில்லை. இது உரிய முறையிலான அதிக முக்கியத்துவம் செலுத்தப்பட்ட செலவினக் குறைப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது. இந்தத் தேவையினை எவ்வாறு நாம் உணர்ந்து கொள்கின்றோம் என்பதே எம்முன் உள்ள கேள்வியாகும். அதேபோன்று கடந்த ஆட்சியில் செலவினமானது சகல மட்டங்களிலும் அதிகரித்திருந்த வேளையில் இடம்பெறக்கூடாத விடயங்களிலிருந்து நாம் நிறையப் பாடங்களை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் அவற் றினது நடைமுறைச் செலவின மட்டத்தினை குறைத்துள்ளன என நான் உறுதியாக நம்புகின்றேன்.

தேசிய வரவு-செலவுத் திட்டத்தினை தயாரிப்பதில் பூச்சிய வரவு செலவுத் திட்ட தயாரிப்பு எண்ணக் கருவினை நான் உறுதியாக ஆதரிக்கின்றேன். 2016 வரவு-செலவுத் திட்டத்தில் பூச்சிய வரவு-செலவுத் திட்ட தயாரிப்பு எண்ணக் கருவிற்கு முக்கியத்துவம் வழங்குவதன் மூலம் ஒவ்வொரு செல விடல் நிறுவனங்களும் அவற்றின் நிதி ஒதுக்கீடுகளுக்கான வேண்டுகோள்களை விடுப்பதற்கு முன்னர் அவற்றினது வரவு செலவுத் திட்ட தயாரிப்பினை நியாயப்படுத்துதல் வேண்டும்.

பொறுப்புக் கூறத்தக்க அரசு என்ற வகையில் மக்களின் துயரங்களை தெளிவாக உணர்ந்துள்ளதுடன் நாம் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியத்தினை குறிப்பிடத்தக்களவு அதிகரித்ததன் மூலம் எமது உறுதிமொழியினை பேணுவதற்கு முடியு மாக இருந்தது. அதேவேளை, அரச துறை தொழில்வாய்ப்பானது கடந்த பல வருடங்களாக நான்கு மடங்காக அதிகரித்து இருந்ததனை எம்மால் உணரமுடிந்தது.

**பொது முதலீடு**

கடந்த அரசின் காலப்பகுதியில் பொது முதலீடு என்ற விடயம் பெருமளவு பேசப்பட்டதுடன் பொது முதலீடானது நாட்டின் அபிவிருத்திக்கான மிக முக்கிய தேவைப்பாடாக மாறியிருந்தது. பொது முதலீடானது தனியார் முதலீடுகளை ஊக்கு விப்பதற்கு நாட்டுக்கு மிக முக்கியமான தொன்று என்பதனை வலியுறுத்திக்கூற நான் விரும்புகின்றேன்.

**சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல்**

எமது நாட்டின் நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் முக்கியத்துவமானது, அவ்வியா பாரங்களானது. பொருளாதாரத்தில் பெரும் பங் கைக் கொண்டுள்ள பிரதான துறைகளாக மரத் தளபாடங்கள், தகவல் தொழில்நுட்பம், பால் சார்ந்த உற்பத்திப் பொருள்கள், வீட்டுத் தோட்டம், உணவுக் கைத்தொழில், காய்கறிகள், பழங்கள், நன்னீர் மீன் வளர்ப்பு, அழகுக் கலை, அலங்கார மீன் வளர்ப்பு போன்ற இன்னோரன்ன துறைகளே விளங்குகின்றன.

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி களினால் குறிப்பிடத்தக்க அளவில் பங்களிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கூட,இத்தொழில் முயற்சியாளர்கள் மூலதனத்தையும், கடனையும் பெற்றுக்கொள்ளும் போது முகங்கொடுக்கும் பிரச்சினைகளின் காரணமாக இவ் வியாபாரத்தினை விரிவடையச் செய்தலானது, சிரமமான ஒரு விடயமாக உள்ளது.

இந்தத் துறையினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அவசியமான ஒழுங்கு முறை அதிகார சபையொன்று ஸ்தாபிக்கப்படும். அதே போல சகல நுண் நிதி நிறுவனங்களும் இந்த அதிகார சபையின் கீழ் ஒரு அலகுக்கு 25,000 ரூபா வீதம் வருடாந்தக் கட்டணத்துக்குப் பதிவு செய்ய வேண்டுமெனப் பிரேரிக்கின்றேன்.

எனவே, 2016 ஆம் ஆண்டில் அரசினால் வழங் கப்பட்ட ரூபா 500 மில்லியன் அடிப்படைத் தொகையொன்றை தெரிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களின் உதவியுடன் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

இந்தப் பிரேரணைத் திட்டத்தின் கீழ் கடனைச் செலுத்த முடியாத சந்தர்ப்பங்களில் அடிப்படைக் கடன் தொகையில் 75 சதவீதமான கடனுக்கு உத் தரவாதமளிக்கப்படும். இதன் மூலம் . இது தொடர் பாக இந்தத் துறைக்கு சலுகை அடிப்படையிலான வட்டி வீதத்தின் கீழ் நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உதவி வழங்குவதற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 100 மில்லியன் கடன் வரிசையொன்று ஆசிய அபிவிருத்தி வங்கியினால் பெற்றுக் கொள்வதற்கு எமக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிக்கு உதவுவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் சௌபாக் கியத் திட்டம் மற்றும் வறுமை ஒழிப்பு நுண்-நிதிக் கருத்திட்டம் ஆகிய கடன் பிரேரணைத் திட்டங்கள் பெரியளவிலான, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வசதியளிப்பொன்றாக அதனுடன் இணைக்கப்படும்.

எனவே, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமான பங்குரிமை நிதியீட்டு வசதிகளை வழங்குவதற்காக வங்கிப் பாதுகாப்புக் கம்பனி, ஊழி யர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் வெளிநாட்டு நிதியை உள்ளடக்கிய நிதியத்தின் நிதியினை ஸ்தாபிப்பதன் ஊடாக வியாபார மூலதனப் பிரவேசத்திற்கு ஆரம்பம் ஒன்றினை வழங்கு வதற்கு முன் மொழிகின்றேன்.

இதன் ஆரம்ப வேலைகளை ஊக்குவிப்பதற்குப் பொருத்தமான மூலதனக் கம்பனிகளுக்கான நிறுவன வருமான வரி 5 வருட காலப்பகுதிக்கு 50 சதவீதத்தினால் குறைப்பதற்கு முன் மொழிகின் றேன். இது 2016 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படும்;.

சிறிய கைத்தொழில் பூங்காக்களை மொன ராகலை, புத்தளம், யாழ்ப்பாணம், வன்னி மற்றும் அம்பாறை போன்ற பிரதேசங்களில்ஸ்தாபிப்பதற்குநான் முன்மொழி கின்றேன். இச்செயற் பாட்டில் இணைந்து கொள்ளுமாறு தனியார் துறையையும் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். இந்த முதலீடுகள் தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களில் ஊக்குவிப்பதற்காக இலாபம் உழைக்கும் ஆண் டிலிருந்து 3 வருட காலப் பிரிவிற்குள் குறிப்பிட்ட வரி வீதம் 50 சதவீதத்தினால் குறைப்பதற் கும் முன் மொழிகின்றேன். இதற்காக,ரூபா 150 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் பிரேரிக்கின்றேன்.

**விவசாயம்**

விவசாயத்துறையானது, எமது பொருளாதாரத்தின் சமூக நிலையிலும், வரலாற்றிலும் அடித்தளமாக விளங்குகின்றது. ஆயினும், கிடைக்கின்ற புள்ளி விவரம் இந்தத் துறை பற்றிய வேறுபட்ட கதையொன்றைச் சொல்கின்றது. எமது விவசாய இறக்குமதிகள் சுமார் 1,000 அமெரிக்க டொலர் மில்லியன்களாகும். எமது விவசாயிகள் காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் தாக்கங்களினாலும், இடைத்தரகர்களின் சுரண்டலினாலும், தமது அறுவடைகளுக்கு நியாயமான விலையொன்றினைப் பெற்றுக்கொள்ள முடியாத நெருக்கடியான ஒரு நிலைக்கு இன்னும் தள்ளப்பட்டு வருகின்றனர்.

பயிர்களைப் பன்முகப்படுத்தல் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தல் ஆகியனவற்றின் ஊடாக 2018 ஆம் ஆண்டளவில் எமது நாடு சோளம், அவரை, மிளகாய், உருளைக் கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் ஆகிய னவற்றின் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கும், தங்கியிருக்கும் விவசாய முறைமையிலிருந்து விவசாய வர்த்தகம் வரை விருத்தி செய்வதற்கும் அதன் மூலம் 2020 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதிச் சந்தைக்குள் பிரவேசிக்கக் கூடிய வகையில் எமது விவசாயக் கொள்கை தயாரிக்கப்படும்.

விதைகள், நாற்றுப்பொருள்கள் போன்றனவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு வசதிகளை அளிக்கக் கூடிய நிதிச் சூழல் ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பயன்டுத்தப்படாத, குறை பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்ட அரச காணிகளை கேள்விகளுக்கு ஏற்ப வழங்குவது உள்ளடங்கலாக பல்வேறு செயற்பாடுகளை எடுப்பதற்கு முன் மொழிகின்றேன்.

விவசாயத் துறைக்கான முதலீடானது, விசேடமாக உற்பத்தித் திறனின் விருத்தி என்பது மிக முக்கியமான ஒரு தேவைப்பாடாகும். மிகச் சிறந்த உற்பத்தித் திறனொன்றினை உறுதிப்படுத்துவதற்காக உயர் தரத்திலான விதைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளமையானது மிக முக்கியமானதாகும். அதன் பிரகாரம், உயர் தரத்திலான விதைகளையும், நாற்றுப் பொருட்களையும் உற்பத்தி செய்வதற்கு அரச மற்றும் தனியார் துறைகளின் சிறந்த ஒருங்கிணைப்பினை ஊக்குவிப்பதற்கு பயன்படுத்தப்படாத, குறைவாகப் பயன்படுத்தப்பட்ட அரச காணிகள் வெகுமதியாக தனியார் துறைக்கு வழங்கப்படும். இதற்காக,ரூபா 1000 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

களஞ்சியப்படுத்தலும், சந்தைப்படுத்தலும் எமது விவசாயத் துறையில் நிலவி வரும் பிரதான ஒரு பிரச்சினையாகும். சுமார் 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகவுள்ள அறுவடைக்குப் பின்னர் ஏற்படக்கூடிய இழப்புக்களைக் குறைப்பதற்காக நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட முழுமையான களஞ்சியங்களை ஸ்தாபிப்பதற்கு நான் முன் மொழிகின்றேன். விவசாய அறுவடையின் போது விலை குறைவடைந்து செல்வதனால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்காக விவசாயிகளின் நெல், சோளம், எள்ளு, மிளகு, உழுந்து போன்ற பயிர்களின் விளைச்சல்களையும் களஞ்சியப்படுத்தக் கூடிய வகையில் விவசாயிகளுக்கு உயர் தரத்திலான களஞ்சிய வசதிகள் வழங்கப்படும்.

ஏற்கனவே, அரசு அனுராதபுரம், மொனராகலை மாவட்டங்களில் இவ்வாறான களஞ்சிய வசதிகளை நிர்மாணித்துள்ளதோடு, மன்னார் மாவட்டத்தில் களஞ்சியமொன்று நிர்மாணிக்கப்பட்டும் வருகின்றது. இந்த முறைமையின் ஊடாக விவசாயிகளின் உற்பத்திப் பொருள்கள் இறுதி நுகர்வோ னுக்கு அனுப்பும் போது இடையில் ஏற்படக்கூடிய செலவுகள் குறைவடைவதனால், சாதாரண விலையொன்றினைச் செலுத்துவதன் மூலம் நுகர்வோருக்கும் பயனுள்ளதாக அமைகின்றது. அதன் பிரகாரம் பொலனறுவை, கிளிநொச்சி, இரத்தினபுரி (எம்பிலிபிட்டிய) மாவட்டங்களில் இவ்வாறான களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்கும், மன்னார் மாவட்டத்தில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் களஞ்சியத்தின் எஞ்சியுள்ள வேலைகளை பூர்த்தி செய்வதற்கும் ரூபா 1,000 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு முன் மொழிகின்றேன்.

விவசாயிகளின் உற்பத்திச் செலவினையும், நுகர்வோருக்கு ஏற்படக்கூடிய தாக்கத்தினையும் கருத்திற் கொண்டு, கீரி சம்பா அரிசி ஒரு கிலோ ரூபா 50 இற்கும், சம்பா அரிசி ஒரு கிலோ ரூபா 41 இற்கும் நாடு அரிசியினையும்,ஏனைய வகை அரிசியினையும் ஒரு கிலோ ரூபா 38 எனும் அடிப்படையில் நெல்லிற்கு உத்தரவாத விலையொன்றினை வழங்குவதற்கு முன் மொழி கின்றேன். இதன் பயனாக நுகர்வோர் ஒரு கிலோ அரிசி யினை சராசரியாக 65 ரூபாவிற்கு பெற்றுக்கொள்ள முடியும்.

விவசாயிகளுக்கு ஒரு ஹெக்ரேயர் வரை சிறு போகம் மற்றும் பெரும் போகம் ஆகிய இரண்டு போகங்களும் உள்ளடங்கக் கூடிய வகையில் வருடாந்தம் கூடியது 25,000 ரூபாவிற்கு உட்பட்டு காசு நன்கொடை ஒன்று வழங்கப்படும். இதன் மூலம் விவசாயிகள் தமது விவசாயத்திற்கு அவசியமான உள்ளீடுகளைத் தீர்மானிப்பதற்கு பெருமளவிலான சுதந்திரமொன்று கிடைப்பதோடு, அதன் மூலம் உற்பத்தித் திறனும் அதிகரிக்கப்படலாம் என நான் நம்புகின்றேன். இதற்காக, ரூபா 37,500 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன் மொழி வ தோடு, இத்தொகையானது 2015ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 35,000 மில்லியனை விட அதிகமான தொகையாகும்.

**பழங்கள் மற்றும் காய்கறிகள்**

நீரகற்றப்பட்டதும், தகரங்களில் அடைக்கப்பட்டதுமான பழங்களின் கைத்தொழிலானது இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளதோடு, இன்னும் அபிவிருத்தியடையாத நிலையிலுமுள்ளது. இந்தக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக இந்தக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் தமது கைத்தொழிலை விருத்தி செய்வதற்காக வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களுக்கு அறவிடப்படும் வட்டியின் 50 சதவீத வட்டிச் சலுகையொன்றை வழங்குவதற்கு முன் மொழிகின்றேன். இந்தக் கைத்தொழிலுக்கு அவசியமான இயந்திரங்களுக்கான இறக்குமதி வரியிலிருந்து விடுதலை செய்யப்படும் என்பதுடன் தேய்வுக்கு மேலதிகமாக கணிசமான கொடுப்பனவு கழிவும் வழங்கப்படும்.

தொழில்நுட்பம், உயர்ந்த அளவிலான விளைச்சலைத் தரக்கூடிய நாற்றுப் பொருள்கள், மற்றும் விதைகளின் பாவனை மற்றும் ஊடுபயிர்களின் ஊடாக காணிப் பயன்பாட்டினை மேம்படுத்துவதற்கும் நான் தனியார் துறையினை ஊக்குவிக்க விரும்புகின்றேன். குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத அரச காணிகளை பழங்கள் மற்றும் காய்கறி விவசாயிகளின் வேண்டுகோள்களை அடிப்படையாகக் கொண்டு குத்தகைக்கு வழங்குவதற்கும் முன் மொழிகின்றேன்.

**பாற்பண்ணைக் கைத்தொழில்**

சந்தையில் உள்நாட்டுப் பாற்பண்ணைக் கைத்தொழிலின் பங்கானது மிகக் குறைவாகும். உள்நாட்டு பால் உற்பத்தியினை விருத்தி செய்வதற்கும்,பால் உற்பத்திப் பொருட்களின் இறக்குமதியைத் தடுப்பதற்கும், முன்னைய அரசினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை நாம் மதிக்கின்றோம். பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக உள்நாட்டு பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதே அரசின் கொள்கையாகும். அதன் பிரகாரம், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 400 கிராம் பால்மா பக்கட்டுகளுக்கு கூடிய சில்லறை விலை 325 ரூபாவிலிருந்து 295 ரூபாவாக குறைப்பதற்கும் நான் முன் மொழிகின்றேன். அவ்வாறு விற்பனை செய்யப்படும 400 கிராம் பால் மா பைக்கெற்றொன்றுக்கு அரசால் ரூபா 30ரூபா மானிய மொன்றினை உள்நாட்டுப் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்கும் அதற்காக ரூபா 1,000 மில்லியன்களை ஒதுக்கீடுசெய்வதற்கும் நான் முன் மொழிகின்றேன்.

பாற்பண்ணைக் கைத்தொழில் துறை மூலம் நாட் டின் பொருளாதாரத்திற்குக் கிடைக்கும் பங்களிப்பானது மிகவும் வரையறுக்கப்பட்டதாக இருந்தாலும், அதனை வளர்ச்சியுறச் செய்வதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுகின்றன. எனவே,அரச மற்றும் தனியார் துறைகளின் பங்கேற்பின் கீழ் வர்த்தக அளவிலான பாற்பண்ணை முறைமையினை ஊக்குவிப்பதற்காக குறைந்தது ரூபா 25,000 மில்லியன்களுக்கு முதலீடு செய்பவர்களுக்கு குறைவாகப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத அரச காணிகளை வழங்குவதற்கு எதிர் பார்க்கப்படுகின்றது. மேலும், அவ்வாறான குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத அரச காணிகளை வெளி வளர்ப்பாளர்கள் மூலம் உயர் விளைச்சலைத் தரக் கூடிய புல் வகைகளை வளர்ப்பதற்கும்,அரச மற்றும் தனியார் துறைகளின் பங்கேற்புகளின் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் மொழிகின்றேன்.

**கடற்றொழில்**

எமது நாடு ஒரு தீவாக இருந்தாலும் கூட, நாம் இன்னும் வருடாந்தம் ஐக்கிய அமெரிக்க டொலர் 150 மில்லியன் பெறு மதியான மீன்களையும், மீன் உற்பத்திப் பொருள்களையும் இறக்குமதி செய்கின்றோம் என்ற செய்தியை கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மீனவர்களின் தொழில்சார்ந்த பாதிப்புகள் மற்றும் தாக்கங்கள் என்பவற்றிற்கான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பின்பால் அரசின் அர்ப்பணிப்பாக கடலில் அவர்கள் சந்திக்கும் விபத்துகளுக்கு சுமார் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான ஆயுட் காப்புறுதி வழங்கப்படும். இக் காப்புறுதி தேடுதல் மற்றும் உயிர்காப்பு நடவடிக்கைகளுக்கான செலவுகளையும் உள்ளடக்கும்.

கடந்த ஐந்தாண்டு காலமாக எமது நாட்டில் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 5000 மில்லியன் பெறுமதியான தகரத்திலடைக்கப்பட்ட மீன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. கைத்தொழிலிலுள்ள வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் மீன் தகரத்திலடைக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதற்குதனியார் துறையினை ஊக்குவிக்கின்றேன். இந்தக் கைத்தொழிலுக்கு வெகுமதிகளை வழங்குவதன் மூலம் லக் சதொச லிமிட்டட்டின் ஊடாக உற்பத்திப் பொருள்களை மீண்டும் கொள்வனவு செய்வதற்கான பொறிமுறையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கும் முன் மொழிகின்றேன். அதனூடாக ஒரு தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் 125 ரூபா எனும் சலுகை விலைக்கு விற்க முடியும். இது வாழ்க்கைச் செலவினை குறைப்பதற்கு உதவும். நான் ரூபா 300 மில்லியன் லக் சதொச நிறுவனத்துக்கு ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்-என்றார். (தொ-வ)

*(நிதியமைச்சரின் மிகுதி முன்மொழிவுகள் நாளைய உதயனில்)*

## விடுவிக்கப்பட்ட

ர்கள் விடுவிக்கப்படும்போது, நீதிமன்றத்தில் கடுமையான பிணை நிபந்தனை விதிக்கப்பட்டது. குறிப்பாக, இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை வவுனியா அல்லது கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிபந்தனையினால், தமிழ் அரசியல் கைதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். இது தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மீள்குடியேற்ற மற்றும் சிறைச்சாலைகள் - புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுடன் கலந்துரையாடியிருந்தார். இதனடிப்படையில், தமிழ் அரசியல் கைதிகள் தாங்கள் வசிக்கும் பிரதேச பொலிஸ் நிலையத்திலேயே கைச்சாத்திடுவதற்கான ஒழுங்கை செய்ய வேண்டுமென்று அமைச்சர் டி. எம். சுவாமிநாதனும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும், வலியுறுத்தியதன் காரணமாக, இந்தப் பிணை நிபந்தனையை மாற்றுவதற்கான நடவடிக்கையை நீதிமன்றிற்கூடாகச் செயற்படுத்தப்படும் என்று சொலிசிட்டர் ஜெனரல் சுகத கம்லத் தெரிவித்துள்ளார். (த-5)

## அரசமைப்பு

சிறி சேனவினால் முன்வைக்கப் பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிப்பு மற்றும் தேர்தல் மறுசீரமைப்பு உட்பட ஏனைய அரசமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பாகத் தீர்மானங்கள் மேற்கொள்ள மேற்படி அமைச்சரவை உப குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ச, டி.எம்.சுவாமிநாதன், நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேம ஜயந்த, லக்ஷ்மன் கிரியல்ல, மலிக் சமரவிக்ரம, ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன், சம்பிக்க ரணவக்க மற்றும் மனோ கணேசன் ஆகியோர் இந்த அமைச்சரவை உப குழுவில் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (த-வ)

## 11 அத்தியாவசிய

85- 95 ரூபா விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் 400 கிராம் பால்மா 295 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு 30 ரூபா மானியமாக வழங்கப்படும். குழந்தைகளுக்கான போக்கைப் பேணும் பொருட்டு குழந்தைகளுக்கான பால்மாவிலை ஒரு கிலோகிராமுக்கு 100 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

425 கிராம் ரின் மீன் ஒன்றினை 125 ரூபாவாக குறைப்பதுடன் உள்ளூர் மீன் உற்பத்தியாளர்களுக்கு 15 ரூபா மானியம் வழங்கப்படும். இதன் மூலம் உற்பத்தியாளர்கள் நுகர்வோர் என இரு சாராருக்கும் நிவாரணம் அளிக்கப்படும்.

நெத்தலிக் கருவாடு ஒரு கிலோகிராமுக்கு 410 ரூபா உச்ச சில்லறை விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பருப்பு ஒரு கிலோவுக்கு 169 ரூபாவும், கட்டாக் கருவாடு ஒரு கிலோ கிராம் 1100 ரூபாவும், சாலக் கருவாடு 425 ரூபாவும், உச்ச சில்லறை விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடலை ஒரு கிலோகிராம் 169 ரூபாவாகவும், 12.5 கிலோகிராம் கொண்ட சமையல் எரிவாயு ஒன்றின் விலை 150 ரூபாவால் குறைக்கபபடுவதுடன், ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 10 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்காக அரசு சுமார் 3000 மில்லியன் ரூபா செலவு செய்ய வேண்டியுள்ளதாக அவர் கூறினார். (த-வ)

## மண் நிரப்பிய

சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலேயே, வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

என்னுடைய மகனும் அவரது நண்பரும் நேற்று முன்தினம் (18 ஆம் திகதி நவாலி முருகமூர்த்தி கோயில் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் நண்பகல் 12 மணியளவில் சென்றுள்ளனர். அப்போது அங்கு நின்ற மானிப்பாய் பொலிஸார், எந்தக் காரணத்தையும் தெரிவிக்காமல், எனது மகனையும் அவரது நண்பரையும் இழுத்து ஜீப்பில் ஏற்றியுள்ளனர். பொலிஸ் நிலையத்தில் கொண்டு சென்று தடுத்து வைத்திருந்தனர்.

அன்றைய தினம் மாலை 5 மணியளவில், மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் இருந்து பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தார். அவர் எனது மகன் கைது செய்யப்பட்டுள்ள விடயத்தை தெரியப்படுத்தினார். குறித்த அதிகாரி சிங்கள மொழியிலேயே பேசினார். எனக்குச் சிங்களம் தெரிந்தமையினால் புரிந்து கொண்டேன். இதுவே சாதாரண நபராக இருந்திருந்தால் என்ன செய்ய முடியும்.

நான் பொலிஸ் நிலையம் சென்ற போது, என்னுடைய மகனின் நண்பரின் தலை வீங்கியிருந்தது. இந்தக் கூட்டத்தில் வந்திருக்கும் பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட 6 பேர், மண் நிரப்பிய பைப்பினால் எனது மகனின் நண்பரைத் தாக்கியுள்ளனர். என்ன காரணத்துக்காக கைது செய்தீர்கள் என்று பொலிஸாரிடம் கேட்டபோது, சந்தேகத்தின் பேரில் கைது செய்ததாகத் தெரிவித்தனர்.

என்ன சந்தேகம் என்று கேட்டதற்கு, கோயிலுக்கு அருகில் நின்றிருந்தனர். கோயிலை உடைக்க வந்திருப்பார்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்தோம். அவர் தாடி வளர்த்திருந்தமையினால் எமக்குச் சந்தேகமாக இருந்தது என்று குறிப்பிட்டனர். அவர் தாடி வளர்த்தமைக்குக் காரணம், கந்தசஷ்டி விரதத்தை அனுஷ்டித்தமையினால்தான். விரதம் அனுஷ்டிக்கும்போது சவரம் செய்யக் கூடாது என்பது எமது கலாசாரம். எமது கலாசாரம் தெரியாத பொலிஸார் இங்கு இருப்பதனால்தான் இந்தப் பிரச்சினை.

நான் பொலிஸ் நிலையத்தில் இருந்து, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொண்டேன். அவர், அவர்களை விடுவிக்குமாறு தெரிவித்தார். இரவு 8 மணிக்குத்தான் பொலிஸார் விடுவித்தார்கள். அதுவரை அவர்கள் ஒரு முறைப்பாடு கூட இவர்களுக்கு எதிராகப் பதியவில்லை.

இது ஒரு மிக மோசமான மனித உரிமை மீறல். ஜெனிவாவில், மனித உரிமைகளைப் பாதுகாப்போம் என்று சொல்லி விட்டு இங்கே மோசமான மனித - மனிதாபிமான மீறல் இடம்பெறுகின்றது என்று குறிப்பிட்டார்.

இதன்போது மானிப்பாய் பொலிஸ் நிலையத்தை பிரதிநித்துவப்படுத்திய பொலிஸ் அதிகாரி, தாம் அடையாள அட்டை கேட்டோம். அவர்களிடம் இல்லை என்று தெரிவிக்கும்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவின் மகன், தன்னிடம் அடையாள அட்டை இருந்தது. அதைக் காண்பித்தேன் என்று தெரிவித்தார். அத்துடன் தனது நண்பரிடம் அடையாள அட்டை இருக்கவில்லை. அவர், எங்களை ஏன் கைது செய்தீர்கள் என்று கேட்டதற்கே, பொலிஸார் தாக்கியதாகக் குறிப்பிட்டார்.

இந்த மோசமான மனித உரிமை மீறல் புரிந்த மானிப்பாய் பொலிஸார் 6 பேருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தமைக்கு, யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தன்னிடம் முறைப்பாடு செய்யுமாறும் தான் நடவடிக்கை எடுப்பதாகவும் இதன் போது தெரிவித்தார். (த-5)

## திருமலை

வினரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்துவதாக, இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்திருந்தது. இவ்வாறானதொரு நிலையில், கடற்படையைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் உள்ளிட்ட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தன்னை அடையாளம் காட்ட விரும்பாத கடற்படை அதிகாரி ஒருவரே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைக்கு, கடற்படை ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர் கூறியிருக்கிறார். அதேவேளை, கைது செய்யப்பட்ட கடற்படை அதிகாரிகள் பற்றிய விவரங்களையும் அவர் வெளியிட மறுத்துள்ளார்.

இதற்கிடையே, இலங்கையில் நீதி மற்றும் அமைதிக்கான திட்டம் என்ற மனித உரிமை அமைப்பினால், கடந்த ஜூன் மாதம் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில், கோத்தா முகாம் என்று அழைக்கப்பட்ட இந்தச் சித்தரவதை முகாமுக்கு 2009 ஆம் ஆண்டு வரை லெப்.கொமாண்டர் கே.சி.வெலகெதர பொறுப்பாகஇருந்தார் என்றும், அதற்குப்பின்னர், லெப்.கொமாண்டர் ரணசிங்க முகாம் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. (த-5)

## கிளைமோர்க்

திணைக்களத்தினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு கடந்த வருடம் யாழ்.மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

அது தொடர்பான விசாரணை நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இடம்பெற்று வந்தது. இதன்போது குறித்த இளைஞனுக்கு எதிரான ஒரே ஆதாரம் அவர் வழங்கியதாகக் கூறப்பட்டு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம். விசாரணையின்போது அந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டது. அதனைவிட வேறு ஆதாரம் எதுவும் இல்லாததால் அவர் மீதான வழக்கை திரும்பப் பெறுவதாக சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றுக்குத் தெரிவித்தது. இதனையடுத்து அந்த இளைஞன் யாழ்.மேல் நீதிமன்றினால் நிரபராதியெனக் கண்டு நேற்றுமுன் தினம் விடுதலை செய்யப்பட்டார். (த-4)

## மாவீரர்

அனைவரையும் கேட்டுக் கொண்டுள்ளது..

தமிழர் தாயகத்தில் இரண்டு தசாப்த காலமாக மிக உணர்சிபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த மாவீரர் வாரம், தமிழர் தாயகம் தவிர்ந்த, தமிழர்கள் வாழும் தேசங்களில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழீழ தேசத்தின் விடிவுக்காகப் போராடி - களமாடி மடிந்த வீரமறவர்களை நினைவு கூருவதற்காக, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் மாவீரர் வாரம், ஒவ்வொரு வருடமும் நவம்பர் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

2009 ஆம் ஆண்டு இறுதிப் போர் முடிவுக்கு வருவதற்கு முன்னர் வரையில், தமிழர் தாயகத்தில் மிகப்பெரும் எழுச்சியுடன் மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் அமைந்திருந்த மாவீரர் துயிலும் இல்லங்களில், வித்துக்களாக விதைக்கப்பட்ட மாவீரர்களை நினைவுகூர்ந்து பல் வேறு நிகழ்வுகளும் இதே காலப் பகுதியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வந்தன.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு - தமிழீழ விடுதலைப் புலிகள் தாயகப் பகுதியில் மௌனிக்கப்பட்ட பின்னர், தமிழர் தாயகப் பிரதேசத்தில் மாவீரர் வாரம் பகிரங்கமான அனுஷ்டிக்கப்படுவதில்லை. தமிழர்கள் புலம் பெயர்ந்து பரவி வாழும் தேசங்கள் எங்கிலும் அது அனுஷ்டிக்கப்பட்டு வந்தது.

இந்த ஆண்டும், புலம் பெயர் தேசங்களில் மாவீரர் வாரம் சிறப்பாக அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

இதேவேளை, இன்று 21 ஆம் திகதி ஆரம்பிக்கும் புனிதமான வார்த்தில் பொதுமக்கள் அனைவருமே சினிமா, கேளிக்கைகளைத் தவிர்த்து புனித நற்பணிகளில் ஈடுபடுவோம். 27 ஆம் திகதியன்றும் எமது தேசிய உடைகளில் எம் பணிகளை மேற்கொள்வோம் என்று யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அனைவரையும் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஈழத்தமிழரின் அரசியல் – சமூக பண்பாட்டு பரிமாணத்தில் கார்த்திகை மாதம் தனித்துவமான மாதம் ஆகும். இக் காலத்தில் தமிழரின் பண்பாட்டு அடையாளங்களை முதன்மைப்படுத்தும் விரதங்கள், விழாக்களும் மரபு சார்ந்த தினங்களும் அதிகமாகக் காணப்படுகின்றது. அத்துடன் வரலாற்று ரீதியாக கொண்டாடப்பட்டும் வருகின்றது.

அதனைக் கடந்த பல ஆண்டுகளாக இலங்கையில் ஆட்சி செய்த அரசுகள் பின்பற்றிய அணுகு முறையால் பல இடர்கள், தடைகள் மத்தியில் நாம் மறைவாக, பிறருக்குத் தெரியாமல் அல்லது பல எதிர்ப்புக்களுக்கு மத்தியில் மேற்கொண்டு வந்துள்ளோம்.

உலகளாவிய ரீதியில் போர் வீரர்களையும், போரில் மடிந்தவர்களையும் நினைவுச் சின்னங்கள் அமைத்து நினைவுகூர்ந்து வருகின்ற விடயங்கள் சாதாரணமாகவே இடம் பெற்றுவருகின்றன.

தற்போது புதிய அரசு ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துள்ளதுடன் அது அமர்வதற்கு மூலகாரணமாகத் தமிழர்கள் காணப்பட்டுள்ளனர். அது மட்டுமன்றி அந்த அரசும் நல்லாட்சி குணங்களைக் கொண்டு இயங்கி வருகிறது. தமிழ் மக்களின் மனங்களில் காணப்படும் உணர்வுகளையும், பங்குபற்றல் எண்ணங்களையும் பகிரங்கப்படுத்தும் ஜனநாயக மரபுகளை நல்லாட்சிக்கான அரசு கொண்டிருக்க வேண்டும் என்பதில் தவறேதுமில்லை.

இதனால் ஈழத் தமிழர் கார்த்திகை மாதத்தில் வரும் புனித வாரத்தை உணர்வு பூர்வமாக வெளிப்படைத் தன்மையோடு நற்பண்புகளை வெளிப்படுத்தும் வாரமாகக் கடைப்பிடிப்போம்.

குறிப்பாக இந்த வாரத்தில் எங்கள் வீதிகளை துப்புரவுசெய்து சுகாதாரமான வாழ்வுக்கு எதிர்காலச் சந்ததியை அழைத்துச்செல்ல முயலுவோம்.

இந்த வாரம் முழுவதும் மதுபாவனையை விலக்கி எல்லாச் சூழலையும் ஆரோக்கியமாக ஆக்குவோம். தேசிய உடைகளில் எங்கள் கடமைகளை 27 ஆம் திகதி மேற்கொள்வோம்.

கேளிக்கைகள், சினிமாக்கள் போன்ற நிகழ்வுகளை தவிர்த்து இந்நாள்களில் புனிதமான சிந்தனைகளையும் எண்ணங்களையும் வளர்த்து தனிநபர் அமைதிக்கும் சமூக அமைதிக்கும் உணர்வுபூர்வமாக தியானிப்போம்.

முதியோர் இல்லங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் அரச நிர்வாக ஸ்தாபனங்கள், பொது இடங்கள் வைத்தியசாலைகள், கோவில்கள், மதஸ்தாபனங்கள் என்பனவற்றையும் தூய்மையாக்கும் நாள்களாக பிரகடனப்படுத்தி எமது பிரதேசங்களையும் சூழலையும் பாதுகாக்கும் முன்மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

மரநடுகை நிகழ்வுகள் மற்றும் இரத்ததான நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி நாமும் வாழ்ந்து எதிர்காலச் சந்ததியினரும் வாழ வழிவகுப்போம்- என்றுள்ளது. (த-4)

## ஒரே பார்வையில்

வலயத்தை உருவாக்குதல்

- ★ நல்லூர், மாத்தறை, கண்டி ஆகிய இடங்களில் புற்று நோய் வைத்தியசாலைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்
- ★ யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் 5 வருடங்களுக்குள் 1 இலட்சம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும்
- ★ யாழ்ப்பாணம், அநுராதபுரம் மற்றும் குருநாகல் பொது வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்ய 3000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.
- ★ டெங்கு, சிறுநீரக நோயை இல்லாதொழிக்க நடவடிக்கை
- ★ தரிசு நிலங்களை விதை உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்க நடவடிக்கை
- ★ விவசாயத்துறைக்கு ஜனாதிபதி தலைமையில் புதிய பொருளாதார செயல் திட்டங்கள்
- ★ அனைத்து அரச கட்டடங்களுக்கும் புதிய தொழிநுட்பத்தைப் புகுத்த நடவடிக்கை
- ★ போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பிற்கு 2000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- ★ வீட்டில் வளர்க்கப்படும் மீன்களுக்கு கடன் உதவி
- ★ கிராமசேவகர் பிரிவின் அபிவிருத்திக்கு 1500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- ★ அனைத்து அரச அலுவலகங்களும் டிஜிற்றல் மயப்படுத்தப்படும்
- ★ 2016 ஜனவரி முதலாம் திகதி முதல் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை அறிமுகம்
- ★ வெளிநாட்டு முதலீட்டாளர்கள் 15 நாள்களில் அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும்
- ★ 5 ஆண்டுகளில் ஒரு இலட்சம் வீடுகள் நிர்மாணிக்கப்படும்
- ★ வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலங்களுக்கு வரி விலக்கு வழங்க தீர்மானம்
- ★ அரச பாவனையற்ற காணிகளில் வீடுகள் நிர்மாணிக்க அனுமதி வழங்கப்படும்
- ★ வீடுகள் நிர்மாணிப்பதற்கு 7 ஆயிரம் இளைஞர்களுக்கு பயிற்சி வழங்க திட்டம்
- ★ நிதி ஸ்திரத்தன்மையை கருத்தில் கொண்டு பல வங்கிகள் ஒன்றிணைக்கப்படும்
- ★ அனைத்து விடுதிகளையும் அபிவிருத்திச் சபையின் கீழ் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும்
- ★ திவிநெகும நிதியத்தை தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைக்கத் திட்டம்
- ★ நாடு பூராகவும் வைபை வலயங்கள் அமைக்க ரூபா 3000 மில்லியன்
- ★ 2016 ஜூன் முதலாம் திகதி முதல் அனைத்து வங்கிகளும் மொத்த கடன் வழங்கும் தொகையில் 10 வீத கடனுதவியைச் சிறு தொழில் ஆரம்பிப்பவர்களுக்கும் 5 வீத கடன் உதவியை இளைஞர் மற்றும் பெண்களுக்கும் வழங்க வேண்டும்
- ★ ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தை ஒன்றாக்க யோசனை
- ★ 2018 முதல் அஸ்பெஸ்டஸ் சீற்றுக்குத் தடை

**கல்வி அபிவிருத்தி**

- ★ கிளிநொச்சியில் விஞ்ஞானப் பீடமும் வவுனியாவில் விவசாயப் பீடமும் அமைக்கப்படும்
- ★ பாடசாலைகளில் நூலகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிலையம் அமைக்க 15000 மில்லியன் ஒதுக்கீடு
- ★ மாணவர்களின் சீருடைக்கு வர்த்தக பெறுமதியுடைய நிதிச்சீட்டுக்கள்
- ★ ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திக்கு 10 ஆயிரம் மில் லியன் ரூபா ஒதுக்கீடு
- ★ 7 அனைத்துப் பாடசாலைகளுக்கும் 2016 முடிவுக்குள் மின்சார மற்றும் மலசலக்கூட வசதி. இதற்கென 4ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- ★ விஞ்ஞான, கணித பீடங்கள் இல்லாத பாடசாலைகளில் விஞ்ஞான கணித பீடங்களை அமைக்க 450 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- ★ ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு அல்லது சாதாரணதரப் பரீட்சை பின்னர் அனைத்து மாணவர்களுக்கும் தொழில் பயிற்சி கட்டாயமானது. அத்துடன் வகுப்பு ஒன்றில் 35 மாணவர்களே ஆகக் கூடுதலாக அனுமதிக்க முடியும்.
- ★ மகாபொல பல்கலைக்கழகம் என்ற பெயரில் புதிய பல்கலைக்கழகம் மாலபேயில் அமைக்கப்படும்
- ★ பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலகு கொடுப்பனவு முறையில் மடிக் கணனி மற்றும் இலவச வைபை முறை
- ★ பல்கலைக்கழக அனுமதியின் போது விளையாட்டு திறமைகள் கருத்திற்கொள்ளப்படும்
- ★ 2018 இற்குள் அனைத்து பல்கலைக்கழக மாணவர்களுக்கும் விடுதி வசதி

**வரி அறவீடுகள்**

- ★ ஒரு நாள் சேவை மூலமாக கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டணம் 7,500 ரூபாவில் இருந்து 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- ★ இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பக் கட்டணம் 3 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- ★ புதிய வாகன பதிவுக் கட்டணங்கள் ஓட்டோ, மோட்டார் சைக்கிளுக்கு 2ஆயிரம் ரூபாவும், காருக்கு 15ஆயிரம் ரூபாவும் அறவிடப்படும்.
- ★ ஓடு உற்பத்தியை அதிகரிக்க அரை வரிச் சலுகை
- ★ சூதாட்ட வரி 400 மில்லியன் ரூபாவினால் அதிகரிப்பு
- ★ அச்சிடப்பட்ட புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளுக்கு வரிச் சலுகை
- ★ வெளிநாட்டில் திறக்கப்படும் உள்நாட்டு வங்கிக் கிளைகளுக்கு நிவாரணம் வழங்கப்படும்
- ★ சொகுசு வரி முற்றாக நீக்கப்படும்
- ★ வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலங்களுக்கு வரி விலக்கு வழங்க தீர்மானம்
- ★ வர்த்தக நடவடிக்கையை ஆரம்பிக்கும்போது 10 மில்லியன் ரூபா முதலீடு அல்லது 500 தொழில்வாய்ப்புகளை வழங்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு 50 வீத வரிச்சலுகை
- ★ தங்கம் இறக்குமதிக்கு வரியின்றி 50 மதிப்பத்திரங்கள் வழங்கப்படும்
- ★ இறப்பர், தேயிலை உற்பத்தியை மேம்படுத்த இரண்டு வருட வரி நிவாரணம்
- ★ பழ வகை, மரக்கறிச் செய்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் இயந்திர கொள்வனவுக்கு வரிவிலக்கு
- ★ தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (என்.பி.ரி) 4 சதவீதமாக அதிகரிப்பு.

## பெல் நீக்கம்

இங்கிலாந்து டெஸ்ட் அணியில் இருந்து முன்னணி வீரரான இயான் பெல் நீக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்து அணியின் முன்னணி வீரர்களில் ஒருவர் இயன் பெல். டெஸ்ட் அணியில் விளையாடி வந்த அவர் சமீபகாலமாக ஓட்டங்களைக் குவிக்கச் சிரமப்பட்டார். பாகிஸ்தானுக்கு எதிரான 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஒரு அரைச் சதம் மட்டுமே அடித்தார். அடுத்த மாதம் இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து 4 டெஸ்ட், 5 ஒருநாள், 2 ரி-20 ஆட்டங்கள் கொண்ட நீண்ட தொடரில் விளையாடுகிறது. இந்தத் தொடரிலிருந்து பெல் அதிரடியாக நீக்கம் செய்யப்பட்டுள்ளார். (ம)



# ஐரோப்பிய உதைபந்தாட்டத் தொடர் சுவீடன், உக்ரைன் அணிகள் தகுதி



வெற்றிக் களிப்பில் சுவீடன் ரசிகர்கள்

அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஐரோப்பிய உதைபந்தாட்டத் தொடருக்குக் கடைசி அணிகளாகச் சுவீடன், உக்ரைன் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

ஐரோப்பிய உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடர் அடுத்த ஆண்டு ஜூன் 10ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 10ஆம் திகதி வரை பிரான்ஸில் நடைபெறுகிறது. இந்தத் தொடர் மினி உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடர் என்றும் அழைக்கப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 24 அணிகள் மட்டும் இந்தத் தொடரில் கலந்து கொள்ளும். தொடரை நடத்தும் நாடு நேரடியாகத் தகுதி பெறும். அந்த அடிப்படையில் அடுத்த வருடத்தின் தொடரை நடத்தும் நாடு என்ற அடிப்படையில் பிரான்ஸ் நேரடியாகத் தகுதி பெற்றுள்ளது.

இந்தத் தொடரில் கலந்து கொள்வதற்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் நேற்றுடன் நிறைவுக்கு வந்தன. இத்தாலி, பெல்ஜியம், வேல்ஸ், ருமேனியா, இங்கிலாந்து, செக் குடியரசு, ஐஸ்லாந்து, ஆஸ்திரியா, வட அயர்லாந்து, போர்த்துக்கல், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, அல்பேனியா, ஜேர்மனி, போலந்து, ரஷ்யா, ஸ்லோவாக்கியா, குரோசியா, துருக்கி, கங்கேரி, அயர்லாந்து ஆகிய 22 அணிகள் தகுதிச் சுற்று ஆட்டங்களில் தங்களது பிரிவில் முதல் இரு இடங்களைப் பிடித்துத் தகுதி பெற்றுள்ளன.

நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் சுவீடன், உக்ரைன் அணிகள் முறையே டென்மார்க், ஸ்லோவேனியா அணிகளை வீழ்த்தித் தமது பங்கேற்பையும் உறுதி செய்துள்ளன. ஐரோப்பிய உதைபந்தாட்டத் தொடரில் பங்கேற்கும் அணிகள் உறுதியானதால் தொடரின் அட்டவணையைப் பிரான்ஸ் உதைபந்தாட்ட சம்மேளனம் விரைவில் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## கிளிநொச்சி மெய்வன்மைச் சங்கம் கழகங்களை உள்வாங்க நடவடிக்கை


கிளிநொச்சி மாவட்ட மெய்வன்மைச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. கிளிநொச்சி மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் கூட்டமொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் அங்கத்துவக் கழகங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. தேர்தல் காலங்களில் உயிர்ப்பற்ற கழகங்கள் தமக்கு மெய்வன்மைச் சங்கத்தின் அங்கத்துவம் வேண்டும் என்று வாதிடுவதும். தேர்தல் அல்லாத காலங்களில் மெய்வன்மை தொடர்பான நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்குவதும் தொடர்ந்து வரும் நிலையில் திறந்த தடகளத் தொடர் ஒன்றை நடத்தி அதன்மூலம் கழகங்களை உள்வாங்குவது என முடிவெடுக்கப்பட்டது. இதன்படி தடகளத் தொடரில் அதிகப்படியான வீர வீராங்கனைகளைக் கொண்டுவரும் கழகங்களும் துடிப்புள்ள கழகங்களும் சங்கத்தில் அங்கத்துவம் பெற ஏற்பாடு செய்யப்படும். தவிர கிளிநொச்சி மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் பயிற்சி முகாம்கள் ஆலோசனை வகுப்புக்கள் என்பன தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று குறித்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ம)

## இந்தியா— பாக். தொடரில் மீண்டும் பேச்சு

இந்தியா – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடர் தொடர்பாகப் பேச்சுவார்த்தை மீண்டும் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா- பாகிஸ்தான் அணிகள் இடையே தொடரை நடத்த இரு நாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைகளும் முடிவு செய்தன. பொது இடமான ஐக்கிய அரபு இராச்சியத்தில் அடுத்த மாதம் நடத்த முடிவு செய்யப்பட்டது. ஆனால் எல்லையில் பாகிஸ்தான் அத்துமீறித் தாக்குதல் நடத்தியதால் தொடருக்கு இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை. இது தொடர்பாகப் பேச்சு நடத்த மும்பைக்கு பாகிஸ் தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் சகாரியர் கான் வந்தார். ஆனால் சிவசேனா எதிர்ப்பால் பேச்சை நடத்த முடியாததால் அவர் திரும்பிச் சென்றார்.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணி இந்தியா வந்து விளையாடச் சம்மதித்தால் தொடர் நடக்கும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்தது. ஆனால் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இதை பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஏற்க மறுத்துவிட்டது. இதற்கிடையே பாக். தலைவருடன் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் மனோகர் மீண்டும் பேச்சு நடத்துவார் என்று தகவல் வெளியாகி இருக்கிறது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் மனோகர் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் பொதுக்கூட்டத்துக்காக டுபாய் செல்கிறார். கூட்டத்தில் கலந்து கொள்ளும் அவர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சகாரியர் கானைச் சந்தித்து, பாகிஸ்தான் அணியை இந்தியாவுக்கு அனுப்புவது தொடர்பாகப் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# சைமன்ஸ் கிரிக்கெட்டுக்கே தகுதியற்றவர் சுயசரிதையில் மைக்கல் கிளார்க் காட்டம்




தன்னுடைய தலைமைத்துவத் திறமையைப் பற்றிப் பேசிய ஆஸ்திரேலியாவின் சைமன்ஸைக் கடுமையாக விமர்ச்சித்துள்ளார் முன் னாள் அணித்தலைவர் மைக் கேல் கிளார்க்.

கடந்த ஜூலை- ஒகஸ்ட் மாதங்களில் இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட மைக்கல் கிளார்க் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி படுதோல்வியை சந்தித்தது. அதுமட்டுமன்றி ஏப்ரல 2011 ஆம் முதல் அணித்தலைவராக இருந்த கிளார்க் தலைமையிலான அணி வெளிநாட்டில் நடந்த 9 டெஸ்ட் தொடர்களில் நான்கில் மட்டுமே வெற்றி பெற்றது. இதனையடுத்து அவர் மீது பல்வேறு விமர்சனங்கள் எழவே, இங்கிலாந்துடனான ஆஸ் தொடருடன் ஓய்வை அறிவித்தார்.

இந்த நிலையில் அப்போது தன்னைப் பற்றி விமர்சனம் செய்த சைமன்ஸ் மற்றும் ஹைடனை அவர் கடுமையாகச் சாடியுள்ளார். இதுகுறித்து தன்னுடைய சுயசரிதைப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள கிளார்க், 'சைமன்ஸ் தொலைக்காட்சியில் என்னைப் பற்றி விமர்சனம் செய்தார், எ[illegible] அணித்தலைவராக இருந்தாலும் அவர்களது தலைமைப் பண்பு பற்றிப் பேசுவதற்கு அவர் சரியான நபர் அல்லர். நாட்டுக்காக விளையாடாமல் குடித்து விட்டுக் கும்மாளம் போட்டவர், இப்படித் தரம் தாழ்ந்த நபர் ஒவருர் விமர்சனம் செய்வது பெரிய விடயமல்ல என தெரிவித்துள்ளார். என்னை கார்பர் பாலத்தில் இருந்து குதித்துவிடு என ரிக்கி பொண்டிங் கூறினால், உடனே குதித்து விடுவேன், அந்த அளவுக்கு அணியை நேசித்தேன். தலைமைத்துவத்துக்கு மதிப்புக் கொடுத்தேன். ஆனால் சைமன்ஸிடம் அவை அறவே இல்லை.' என பதிவிட்டுள்ளார். (ம)

# ரஷ்ய ஊக்கமருந்து தடுப்புக் கழகம் நீக்கம்

## ஊக்கமருந்து பயன்பாட்டின் எதிரொலியாக



'உலக ஊக்க மருந்துத் தடுப்பு அமையத்தின் சிறப்பு விசாரணையில் ரஷ்ய தடகள வீர, வீராங்கனைகள் ஊக்க மருந்தைப் பயன்படுத்தி ஒலிம்பிக் உள்ளிட்ட சர்வதேச தொடர்களில் சாதித்ததும், அதற்கு ரஷ்ய அரசு மற்றும் அந்த நாட்டு ஊக்க மருந்து தடுப்பு அமையம் உடந்தையாக இருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து உலக தடகள சம்மேளனம் மற்றும் ஐரோப்பிய தடகள சம்மேளனம் ஆகியவை ரஷ்ய தடகள சம்மேளனத்துக்கு இடைக்காலத் தடை விதித்தது. இந்த வரிசையில் - தற்பொழுது ரஷ்ய ஊக்கமருந்து தடுப்புக் கழகம் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது. ஒலிம்பிக் தொடர்களில் ஒரு நாட்டின் வீரர்கள் பங்குபற்றும் பொழுது அந்த நாட்டின் ஊக்கமருந்து தடுப்புக் கழகத்தினால் சான்றிதழைப் பெறுதல் கட்டாயமானதாகும். எனவே அடுத்த வருட ஒலிம்பிக் தொடரில் பங்கேற்கும் ரஷ்ய வீரர்கள் தமது ஊக்க மருந்து பயன்பாடு தொடர்பான சிக்கல்களை நிவர்த்தி செய்ய ரஷ்ய ஊக்கமருந்து தடுப்புக் கழகம் இருக்கப் போவதில்லை. இதனால் ரியோ ஒலிம்பிக்கில் ரஷ்யா பங்கேற்பதில் சிக்கல் எழுந்துள்ளது.

தமது தடை தொடர்பாக ரஷ்ய ஊக்க மருந்து தடுப்புக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் - 'உலக ஊக்க மருந்து தடுப்பு அமையத்தின் முடிவு எங்களுக்கு வருத்தம் அளிக்கிறது. இருப்பினும் அவர்களின் அந்த முடிவை செயற்படுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். ரஷ்ய ஊக்கமருந்து தடுப்புக் கழகத்தின் நிர் வாகத்தை நாம் முழுமையாக மாற்றம் செய்யவுள்ளோம். அவ்வாறு மாற்றம் செய்யப்பட்ட பின்னர், எமது தொடர்ச்சியான செயற்பாட்டுக்கு உலக ஊக்க மருந்து தடுப்புச் சம்மேளனம் அனுமதி தரவேண்டும்–' என்றுள்ளது. (ம)


## டோனி அனைத்தும் அறிவார்

கிரிக்கெட்டில் இருந்து எப்போது ஓய்வுபெறவேண்டும் என்பது டோனிக்கு தெரியும் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் ஜி.ஆர். விஸ்வநாத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது; 'கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவது என்பது தனிப்பட்ட அந்த வீரரை பொறுத்தது. பிறர் அதை வலியுறுத்தக்கூடாது. டோனி இந்திய அணியின் பல வெற்றிகளுக்கு உழைத்துள்ளார். அவருக்கு எப்போது ஓய்வு பெற வேண்டும் என்பது நன்கு தெரியும். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் அதன் தெரிவாளர்களும் ஒரு வீரருக்குத் தேவைப்படும் அளவுக்கு, சிக்னல்களை கொடுத்து விடுகிறார்கள். எனவே, அந்த வீரர் வெளியேற்றத்துக்கு அவராகவே தயாராகிவிடுவார். முன்பெல்லாம் இப்படி கிடையாது. திடீரென வீரர்களை நீக்கிவிடுவார்கள். மீண்டும் அணிக்கு திரும்பிவர முடியாமல் போன பல வீரர்கள் உள்ளனர். அத்துடன் இந்திய கிரிக்கெட் தொடர்பாக டோனி அனைத்தும் அறிவார். அவர் இந்தியாவுக்கு தேவைப்படுகிறார்– என்றார். (ம)



## சாய்னாவுக்கு கட்டாய ஓய்வு



இந்தியாவின் முன்னணி பூப்பந் தாட்ட வீராங்கனையான சாய்னா நேவால், தொடர்ச்சியாக இரண்டு வாரங்கள் ஓய்வில் இருக்க வேண்டும் என்று பிரத்தியேக மருத்துவக் குழு அறிவுறுத்தியுள்ளது.

[illegible]ந்தாட்டத் தரவரிசையில் 2ஆவது இடத்தில்உள்ள இந்தியாவின் சாய்னா நேவால் கடந்த வாரம் நடைபெற்ற சீன பூப்பந்தாட்டத் தொடரில் இறுதி ஆட்டம் வரை முன்னேறியிருந்தார். இந்த தொடரின்போது அவருக்கு குதிகால் தசைநாரில் வலி ஏற்பட்டது. இதையடுத்து அவர் தற்போது நடைபெற்று வரும் ஹொங்கொங் தொடரில் இருந்து விலகினார். இந்நிலையில் டில்லியில் உள்ள தனியார் மருத்துவமனையில் பிரத்தியேக குழுவொன்றால் சாய்னாவுக்கு நேற்று பரிசோதனை நடைபெற்றது. அப்போது ஸ்கான் எடுத்துப் பார்க்கப்பட்டதில் காலில் உள்ள எலும்பு பகுதியில் ஏற்பட்ட அழுத்தம் காரணமாகவே வலி இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது. இதையடுத்து 2 வார காலம் அவருக்கு கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. (ம)

## சென்னையில் இலங்கை அணிக்கான தடை உலகக்கிண்ணத் தொடரிலும் தொடர்கிறது

அடுத்த வருடம் ரி-20உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவில் நடைபெறவுள்ள நிலையில், சென்னை மைதானத்தில் இலங்கை வீரர்கள் விளையாடுவதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்படாமல் அப்படியே தொடரப்படுகிறது. இதனால் இலங்கை அணி பங்கேற்கும் ஆட்டங்களை வேறு மைதானங்களில் நடத்த இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தீர்மானித்துள்ளது.

6ஆவது ரி-20 உலகக்கிண்ணத் தொடர் மார்ச் 11ஆம் திகதி முதல் ஏப்ரல் 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. தொடரை நடத்த சென்னை, மும்பை, கொல்கத்தா, பெங்களூர், மொகாலி, டில்லி, தர்மசாலா, நாக்பூர் ஆகிய 8 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளன. தொடருக்கான ஏற்பாடுகள் தொடர்பாக நேற்று நடைபெற்ற இந்தியக் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபையின் கூட்டத்தில் சில முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

அதன்படி சென்னையில் ஆட்டங்களை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால், சென்னையில் இலங்கை அணி விளையாட விதிக்கப்பட்ட தடை மாற்றம் செய்யப்படாமல் அப்படியே தொடர்கிறது. இதனால் இலங்கை அணிக்கான ஆட்டங்கள் வேறு மைதானங்களில் இடம்பெறும். குளிர் பிரதேசங்களில் இருந்து வரும் அணிகளுக்கான மைதான மாக இமயமலைப் பகுதியில் உள்ள தர்மசாலா மைதானம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மைதானங்கள் தொடர்பான விவரங்கள் உறுதிபடி அறிவித்து- அதற்கு சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அனுமதி வழங்கப்படும் பட் சத்தில் உலகக்கிண்ண அட்டவணை வெளியிடப்படும். (ம)





## அரையிறுதிக்கான வாய்ப்பை அதிகப்படுத்தினார் பெடரர்

முன்னணி வீரர்களுக்கான ரெனிஸ் தொடரில் பெடரர் அரையிறுதிக்குச் செல்வதற்கான வாய்ப்பை அதிகப்படுத்தியுள்ளார்.

இந்தத் தொடரில் ஏற்கனவே தான் சந்தித்த இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிகளைப் பெற்ற பெடரர் நேற்றைய ஆட்டத்தில் நிசிகோரியை எதிர்கொண்டார். முதல் செற்றில் இருவரும் விடுவதாயில்லை. இதனால் அந்த செற் இழுபறியாக நீடித்தது. 7:5 என்ற கணக்கில் அந்த செற்றைக் கைப்பற்றினார் பெடரர். இரண்டாவது செற்றை 4:6 என்ற கணக்கில் கைப்பற்றிப் பதிலடி கொடுத்தார் நிசிகோரி. இதனால் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றில் சரிவில் இருந்து மீண்ட பெடரர் 6:4 என்ற கணக்கில் வெற்றிபெற்று தனது அரையிறுதி வாய்ப்பை மேலும் உறுதி செய்தார். (ம)

**வரவேற்பாளர் தேவை**

பேச்சாற்றல் உடைய, Photoshopநன்கு தெரிந்த 25 வயதுக்குட்பட்ட பெண்வரவேற்பாளர் தேவை. கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும். சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
இல.106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
021 320 9727

**காணி விற்பனைக்கு**

குடத்தனை, பிரதான வீதி, ஆறாம் கட்டையில் தென்னை மரங்கள், துரவோடு கூடிய 33 பரப்பு மேட்டுக் காணி உடன் விற்பனைக்குள்ளது.
விவரங்களுக்கு:- 077 810 3394

**வீடு வளவு விற்பனைக்கு**

இல.333, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப் பாணத்தில் பரப்பு 3 குளி 7.55 விஸ்தீரணம் கொண்ட வீடுவளவு விற்பனைக்குண்டு.
தொடர்பு- 076 702 3565

**வான் விற்பனைக்கு**

நல்லநிலையில் உள்ள Toyota - Hiace - HaighRoof 252 - XXXX விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 330 5344

**SAAMSON** Experts in Language Training இன் **ஆங்கில,சிங்கள** பயிற்சிநெறிகள்.

அரச, தனியார் ஊழியர்கள், தொழில்தேடுவோர், இளைஞர் யுவதிகள், ஆசிரியர்கள், வயதுவந்தோர் இணையமுடியும்!

ஆங்கில வகுப்புகள் (திங்கள்,புதன்) ஆரம்பம்-23.11.2015
1.காலை 08-10 2.காலை 10-12

**சிங்கள வகுப்பு (சனி,ஞாயிறு)ஆரம்பம்-22.11.2015**
காலை 08-10

பயிற்சியில் இணைந்துகொள்ள முன்பதிவு அவசியமானது.
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டுமே.

SAAMSON Experts in Language Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## நடால் அரையிறுதிக்குத் தகுதி

தற்பொழுது நடைபெற்றுவரும் முன்னணி வீரர்களின் ரென்னிஸ் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் விளையாட ரபேல் நடால் தகுதி பெற்றுள்ளார். சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீரர்களுக்கு மட்டுமாக நடத்தப்படும் முன்னணி வீரர்களின் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. முர்ரே, வாவ்ரிங்கா இருவரையும் ரபேல்நடால் நேர் செற் கணக்கில் வீழ்த்தியிருந்தார். ஆனால் ஏனைய ஆட்டங்களின் முடிவின் அடிப்படையிலேயே யார் அரையிறுதிக்கு தகுதிபெறுவது என்பது தெரிய வரக் கூடிய நிலை காணப்பட்டது. இந்த நிலையில் நேற்றுநடால் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார். (ம)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

**Spoken English with Grammar - Quick Learning Course** 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன் கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

**Diploma In English** 2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

- ★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
- ★ எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
- ★ Excellent Teacher's Panel & Individual Attention
- ★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள்
28.11.2015 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

**Batches Start On**

23.11.2015 @10.00am
24.11.2015 @ 9.00am
26.11.2015 @ 9.00am
25.11.2015 @10.00am
27.11.2015 @ 9.00am

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road),
Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550
HotLine(S)
0777585913, 0777222422
0776555677

**விற்பனைக்கு**

45 நாள்கள் ஆன புறொயிலர் கோழிகள் (2½ kgமேல்) விற்பனைக்குண்டு.
4 மாதங்கள் ஆன ஜேர்மன் செப்பற நாய்க் குட்டி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 077 946 2841

**காணி விற்பனைக்கு**

இல.843/2, நொத்தாரிஸ் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணத்தில் 2 ¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777 198051
இல.39,-நொத்தாரிஸ் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.



# இடமாற்றமும் புதுக்கடைத் திறப்பு விழாவும்



நவாலிவீதி, ஆனைக்கோட்டை, மூத்தவிநாயகர் கோயிலுக்கு அருகில் உள்ள
**ஸ்ரீ முருகன் கபே சைவ உணவகம்**
(வடைக்கடை) அதே வீதியில் ஆனைக்கோட்டைச் சந்தியை நோக்கி 150m தூரத்தில் புதிதாக அமைக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்படவுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

புதுக்கடைத் திறப்பு விழா நாளை [22.11.2015] ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதால் எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
ஸ்ரீ முருகன் கபே சைவ உணவகம் (வடைக்கடை)

# மரண அறிவித்தல்

## சுவாமிநாதபிள்ளை இராசமனோகரன்

### (ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் மக்கள் வங்கி சுன்னாகம்)



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதபிள்ளை இராசமனோகரன் அவர்கள் கடந்த (19.11.2015) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதபிள்ளை மற்றும் இராசமணி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற செல்வநாயகம் (செல்வரத்தின வாத்தியார்) மற்றும் கௌரி யம்மா தம்பதியரின் மருமகனும் ஸ்ரீபதி அவர்களின் அன்புக்கணவரும் செந்தூரன், கஸ்தூரி, சர்மிலன், சாமந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவதாரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை யாழ்ப்பாணம்) அவர்களின் மாமனாரும், இரஞ்சனாதேவி (ஓய்வு பெற்ற முகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி - சுன்னாகம்), தேவமனோகரன் (திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் - வலிகாமம் கல்வி வலயம்), இராசதேவி (கனடா), இராசமலர் (லண்டன்), சுலோசனா (ஆசிரியை - உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்), கிருபாகரன் (கனடா), செல்வாகரன் (கனடா), ஐங்கரன் (கனடா), திருக்குமரன் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற பாலேந்திரன் மற்றும் துஷ்யந்தி, பரமானந்தம், உதயகுமார், யுவராஜ், மதுரா, ரஜித்தா, சந்திரிக்கா, புகழினி, சிவகுமார் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர்), இரவீந்திரன் (டென்மார்க்), காலஞ்சென்ற தயாபரன் மற்றும் மோகனதாஸ் (கனடா), இராகவன் (சுவிஸ்), செல்வநாயகி, விமலாதேவி, கௌசலா, தங்கலஷ்மி, சிவதர்சினி ஆகியோரின் மைத்துனரும் கார்த்திகா, ஜனகன், அனு, அனந்தன், பானு, பாரி, ஐதுர்சா, விக்னேஸ், ஹரிஸ், ஹரினி, ஹேதுசன், ஹேதுசா, தேனுசியன், ரதீசன், நித்தியா, சுஜன், ராம்ஜித், ரோகித், அச்சுதா ஆகியோரின் மாமனாரும் மாதுமை, ஜயபவன், சயான், கிருசான், மதுசான், சேயோன், ரனேஸ், சுவாதி, சரிகா, அவேந்திகா, யுவேந்திகா, சுபீக்சா ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஸ்ரீபதி' இணுவில் தெற்கு,
இணுவில்.

(021 224 1712, 075 041 3011, 077 129 9524)

தகவல் : **குடும்பத்தினர்.**

(66238)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.